பக்கங்கள்: இருபத்தாறு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9:வள்ளுவர் ஆண்டு 2030 கார்த்திகை 11 சனிக்கிழமை (27-11-1999) SANJEAVY--Regenerative Tamil Weekly சிகரம்:26

# குடாநாட்டில் காணாமற்போன 355 பேரைத் தேடித்தர முடியாது!

## பாதுகாப்பு அமைச்சு கைவிரிப்பு பாதுகாவலர்களுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர்27

**குடாநாட்டில் 1996 - 97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போனதாக கருதப்பட்டவர்களில் 355 பேரின் பெயர்கள் தேடித்தர முடியாதவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.**

**இத்தகையோர் தொடர்பாக விசாரணை நடத்திய குழு இவ்வாறு 355 பேரை தேடிக்கொள்ள முடியாதுள்ளதாகத் தீர்மானித்திருக்கின்றது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.கே.சந்திரானந்த டீ சில்வா தெரிவித்திருக்கின்றார்.**

1996, 97ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் குடாநாட்டில் கைதுசெய்யப்பட்ட சுமார் அறுநூறுக்கு மேற்பட்டவர்கள் பின்னர் காணாமற்போனதாக மதிப்பிடப்பட்டிருந்தது.

காணாமற்போனவர்களைக் கண்டுபிடித்து விவரம் தெரிவிக்குமாறு யாழ். மாவட்டத்தில் கைதாகிக் காணாமற்போனோரின் பாதுகாவலர்சங்கம் ஜனாதிபதியைப் பலதடவை கோரிவந்தது.

இந்நிலையில் -

காணாமற்போனவர்களில் சுமார் 355 பேரின் உறவினர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டீ சில்வா நவம்பர் 11ஆம் திகதியிட்டு கடிதங்கள் அனுப்பிவைத்திருக்கின்றார்.

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர்களே!

உங்கள் உதயனுக்கு இன்று 14ஆவது பிறந்த நாள்!

உங்களின் அன்பு அரவணைப்பை இந்நாளில் நன்றியுடன் நினைவு கூர்வதில் 'உதயன்' பெருமகிழ்வடைகின்றான்!

## வவுனியாவில் சூட்டுக்கு ஒருவர் பலி

வவுனியா,நவ.27

வவுனியா மாவட்டத்தில் பிரப்பமடுப் பகுதியில் உள்ள குளத்தில் நேற்றுக்காலை குளிக்கச்சென்றவர்கள் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயம் அடைந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த முதியான்சலாகே விஜயரத்தின (வயது 39) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

ரி.குணவர்த்தன என்பவர் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தக் குளத்தில் குளிப்பதற்கு படையினர் தினமும் வருவது வழக்கம் எனவும் -

நேற்று அவர்கள் வரவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-3-164)

## தணிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, நவ.27

யுத்தச் செய்திகள் மீது விதிக்கப்பட்டுள்ள தணிக்கையை நீக்க உத்தரவிடுமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமத்துவத்துக்கான இயக்கத்தின் தலைவர் சுனிலா அபயசேகர இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களப் பணிப்பாளர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், சட்டமாஅதிபர், தொடர்புசாதன அமைச்சர் ஆகியோர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

யுத்தமுனையில் நடக்கும் சம்பவங்கள் தொடர்பான செய்திகளை பிரதிவாதிகள் தமது அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பயன்படுத்துகின்றனர் என்றும் -

இதனால் ஏற்படும் செய்திப் திரிபு காரணமாக அநேகரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும்-

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-7)

## ஷெல் தாக்குதல்

வவுனியா,நவ.27

கிளிநொச்சி, பூநகரி, உருத்திரபுரம் பகுதிகளை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த ஷெல் தாக்குதலில் சிக்கி குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்தார் எனவும் கால்நடைகள் பல இறந்தன எனவும் அறிவிக்கப்பட்டது.

(உ-க-3)

## புலிகளிடம் சரண் அடைந்த 7 சிப்பாய்கள் இன்று விடுவிப்பு

### பிரபாகரனின் பணிப்பின் பேரில்!

வவுனியா, நவ.27

வன்னியில் தாம் மேற்கொண்ட 'ஓயாத அலைகள் -3' நடவடிக்கையின்போது தம்மிடம் சரணடைந்த ஏழு சிப்பாய்களை இன்று அவர்களது வீடுகளுக்கு அனுப்பவிருப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மனிதாபிமான அடிப்படையில் விடுத்த பணிப்பின்பேரில் இந்தச் சிப்பாய்கள் விடுவிக்கப்பட்டு புலிகளின் மாவீரர் நாளான இன்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகளிடம் கையளிக்கப்படுவர் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

எம்.வீ.எஸ்.திலகரத்ன(கம்பளை), வி.ஏ.கே.எஸ்.தர்ஷன புஷ்பகுமார (பொலன்னறுவை), ஏ.எஸ்.ஜெயரத்ன (அனுராதபுரம்), பி.வி.ஹேமச்சந்திர(தம்பகமம), டபிள்யூ.பி.ஆர்.உபாலி தர்மரத்ன(தம்பகமம), டபிள்யூ.எச்.பி.பந்துல (மகாவேவ),எச்.எம்.ரணசிங்க(பதுளை) ஆகியோரே விடுதலை செய்யப்படவிருப்பவர்களாவர். (உ-க-3-9)

## தேர்தலுக்கு எதிரான மனு: விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு,நவ.27

டிசெம்பர் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரி சுன்னாகம் வாசி ஒருவரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட மனு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட பின்னர் டிசெம்பர் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் நிலவும் போர்ச் சூழ்நிலையை காரணம்காட்டி இத்தேர்தலை ஒத்திவைக்குமாறு உத்தரவிடக்கோரி பாலசுப்பிரமணியம் வசந்தன் என்பவர் உயர்நீதிமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

இந்த மனுமீதான விசாரணை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முன்னிலையில் நேற்று இடம்பெற்றது. பின்னர் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (உ-7)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

மீசாலை, புத்தூர்ச் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த கச்சாயைச் சேர்ந்த இராமச்சந்திரன் சுமன் (வயது 17) என்ற மாணவனது சடலம் நேற்றைய தினம் மரண விசாரணை, பிரேத பரிசோதனையை அடுத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மரண விசாரணையை மேற்கொண்ட யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி சடலத்தை யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் சென்று பார்வையிட்டார். (உ-7-15)

## திருமலை நகரின் மத்தியில் வீழ்ந்து 50 கலிபர் சன்னம்!

### மக்கள் மத்தியில் பதற்றம்

திருகோணமலை,நவ.27

திருகோணமலை நகர மத்தியில் இராஜவரோதயம் வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் 50 கலிபர் அளவுடைய துப்பாக்கிச் சன்னம் ஒன்று வந்து வீழ்ந்ததில் அந்த வீடு சேதத்துக்குள்ளானது.

அந்த வீட்டில் இருந்த தாயும் அவரது மகளும் தெய்வாதீனமாகத் தப்பினர்.

இந்தச் சன்னம் எப்படி அங்கு வந்து வீழ்ந்தது? யாரால் ஏவப்பட்டது அது? என்பன தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நகர மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறப்பட்டது.

அதே நேரம் - நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

(உ-3-150)

## சர்வதேசக் கண்காணிப்பாளர்களை அனுமதிப்பதற்கு நேற்று இணக்கம்

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுமதிப்பது என்று தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பதில் தேர்தல் ஆணையாளர் தஸநாயக்க தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பாலான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுமதிக்கவேண்டும் என்று கோரினர். நாட்டில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவர் என்ற ரீதியில் கண்காணிப்பாளர்களை அனுமதிப்பது என்று அங்கு முடிவுசெய்யப்பட்டது.

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் மாவீரர் பதாகைகள்

யாழ்ப்பாணம்,நவ.27

மாவீரர் வாரத்தையொட்டிய பதாகைகள் நகரில் சில இடங்களில் நேற்றுக்காலை காணப்பட்டன.

'மாவீரர் நாள் நவ. 21 - 27' என்று கறுப்பு எழுத்துக்களில் மஞ்சள் துணியில் எழுதப்பட்ட அந்தப் பதாகைகளை நண்பகல் அளவில் வந்த படையினர் எடுத்துச்சென்றனர்.

கன்னாதிட்டியில் கஸ்தூரியார் வீதியிலும், யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகில் கே.கே.எஸ். வீதியிலும் இப்பதாகைகள் காணப்பட்டன. இப்பகுதியைச் சேர்ந்த சிலர் படையினரால் விசாரிக்கப்பட்டனர்.

(உ-3-9-10-117-72)

## தேர்தல் பிரசாரத்துக்காக ரணில் யாழ். வர அனுமதி

### உரிய பாதுகாப்பு வழங்குவதற்கு இணக்கம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வதற்குப் பாதுகாப்பு வழங்குமாறு ஐ.தே.கட்சி விடுத்த கோரிக்கையை பதில் தேர்தல் ஆணையாளரும், பொலீஸ்மா அதிபரும் ஏற்றுள்ளனர்.

பதில் தேர்தல் ஆணையாளர்

நாயக்க தலைமையில் நேற்று நடந்த சகல கட்சிப் பிரதிநிதிகளுக்கான கூட்டத்திலேயே ஐ.தே.க. இந்தக் கோரிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மின்மாற்றியில் குண்டு பொருத்திய இருவர் நுகேகொடையில் கைது

கொழும்பு,நவ.27

நுகேகொடை விவிலி பிளேஸ் சந்தியில் உள்ள மின்மாற்றி ஒன்றை நேற்று குண்டுவைத்துத் தகர்க்க முயன்ற மலையக இளைஞர் இருவரைத் தாம் கைதுசெய்துள்ளதாக பொலீஸார் அறிவித்துள்ளனர்.

குறித்த நேரத்தில் வெடிக்கும் இரண்டு குண்டுகளை மின்மாற்றியில் பொருத்திக்கொண்டிருந்த சமயமே இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

# யாழ்ப்பாணம், வன்னிப் பகுதிகளுக்கு மருந்து பிரான்ஸில் இருந்து எடுத்துவர முயற்சி

## எம்.எஸ்.எவ். இலங்கைப் பிரதிநிதி 'சஞ்சீவி'க்கு தகவல்

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.குடாநாட்டிலும், வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியிலும் நிலவும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பிரான்ஸில் இருந்து அவற்றை எடுத்துவர நடவடிக்கை எடுத்துள்ளோம்

எம்.எஸ்.எவ். என்ற பிரான்ஸ் மருத்துவக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி டாக்டர் வில்லியம் பெரலோலிற்றி இவ்வாறு தெரிவித்தார்.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் சஞ்சீவிக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

குடாநாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலையிலும், வன்னியில் புதுக்குடியிருப்பு, மல்லாவி, முருங்கன், வவுனியா ஆகிய இடங்களிலும் எமது வைத்தியக்குழு பணியாற்றிவருகின்றது.

எம்மைப் பணிசெய்ய அனுமதி அளித்த அரசாங்கம் அங்கு போதிய மருந்துவகைகளை, வைத்திய உபகரணங்களை, ஒக்ஸிசன் சிலிண்டர்களை அனுப்புவதில்லை. இதன் காரணமாக சீரானமுறையில் எம்மால் பணியாற்ற முடியாதுள்ளது.

யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாக இருந்த போதும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அவை இங்கு அனுப்பப்படுகின்றன. வன்னி நிலைமை பெரும் மோசமாக உள்ளது.

இந்த நிலைமையைப் போக்க பிரான்ஸில் இருந்து மருந்து வகைகளையும், வைத்திய உபகரணங்களையும், ஒக்ஸிசன் சிலிண்டர்களையும் எடுத்துவர முடிவுசெய்துள்ளோம். இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு நடத்தவுள்ளோம் - என்றார் அவர். (ஐ-3)

## வைத்திய அலுவலகம் புனரமைப்பு

வலி.கிழக்கு,நவ.27

குருநகர் வைத்தியசாலையில் உள்ள பாடசாலை வைத்திய அதிகாரி அலுவலகம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் மூன்று லட்சம்ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவருகின்றது.

நீண்ட காலமாக சேதமடைந்திருந்த இந்த அலுவலகம் ஐ.நா. நிறுவனத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் யாழ்.பிரதேச செயலகத்தினால் புனரமைக்கப்பட்டுவருகின்றது.

புனரமைப்பு வேலைகள் முடிவுற்றதும் இந்த அலுவலகம் மீண்டும் வசதியாக அங்கு இயங்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

## திருநெல்வேலிச் சந்தையில் தொடர்மாடிக் கடைத் தொகுதி

வலி.கிழக்கு,நவ.27

திருநெல்வேலிபொதுச் சந்தையில் வெளிப்புற உட்புற பகுதிகளில் நவீன வசதிகளுடன் தொடர்மாடிக் கடைகள் பிரதேச சபையினால் புதிதாகக் கட்டப்படவுள்ளன.

அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டநிதி மூலம் இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் -

சுமார் 50இலட்சம் ரூபாவுக்கு மேல் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படவுள்ளதாகவும் -

பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

இக் கடைகள் திருநெல்வேலியில் இருந்து கல்வியங்காட்டிற்கு செல்லும் வீதியில் வலது பக்கமாகவும் -

தற்போது மீன்சந்தை அமைந்துள்ள பகுதியிலுமே கட்டப்படவுள்ளன.

அடுத்தவருட முற்பகுதியில் இந்த கடைத் தொகுதியின் தளப்பகுதி வேலைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

## மடு தேவாலய தாக்குதலுக்கு நல்லை ஆதீனம் கண்டனம்

யாழ்ப்பாணம்,நவ.27

மடு தேவாலயம் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் சம்பவத்திற்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மனித உயிர்களை மாண்புடன் பாதுகாக்கவேண்டிய நேரத்தில் மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது மனிதநேயமற்ற செயலாகும்.

இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு ஜீவனும் வாழப் பிறந்தவை. அதனை அழிப்பதற்கு நமக்கு அருகதை கிடையாது.

இச்சம்பவத்தில் பொதுமக்கள் பலர் உயிரிழந்திருப்பது குறித்து நல்லை ஆதீனம் தனது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவிக்கின்றது.

யுத்தம் என்ற போர்வையில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை அனுமதிக்க முடியாது.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

### உயர் தொழில்நுட்ப நிறுவனம்:

## கற்கைநெறிகளுக்கு மாணவரை தெரிவுசெய்ய நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.27

உயர்தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் 2000 ஆண்டில் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளன.

உயர்தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி பயிலுவதற்காக இந்த முறை ஆயிரத்துக்கும்மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்துள்ளதாக நிறுவன இயக்குநர் தெரிவித்தார்.

பின்வரும் திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

உயர்தேசிய வணிக டிப்ளோமா (HNDC) டிசம்பர் முதலாம் திகதி -

வியாபார கற்கையிலான தேசிய டிப்ளோமா (NDBS), வியாபாரக் கற்கையும் நிதியியலுமான தேசிய டிப்ளோமா (NDBF)ஆகியவற்றுக்கு டிசம்பர் 2ஆம் திகதி -

ஆங்கில தேசிய டிப்ளோமா (NDE - பகல்) டிசம்பர் 3ஆம் திகதியும்

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA - மாலை) டிசம்பர் 4ஆம் திகதி -

உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (NDE - மாலை) டிசம்பர் 6ஆம் திகதி

உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA - பகல்) டிசம்பர் 7ஆம் திகதி. (ஐ-9-5)

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், நவ.27

இணுவையூர் செல்வன் கிருபா அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

மஹாவித்துவான் நா.வீரமணிஜயர் தலைமையில் இந்த அரங்கேற்றம் இடம்பெறும்.

இவர் சங்கீதபூஷணம் க.ப.சின்னராசாவின் மாணவனாவார். (ஐ-3)

## விடுதலையானவர் மீண்டும் கைது

அநுராதபுரம் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட இளைஞன் ஒருவன் மீண்டும் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் உதயகரன் (வயது 26) என்ற இளைஞனே நேற்று அவரது வீட்டில் வைத்து படையினரால் கைதுசெய்யப்பட்டதாக அந்த முறைப்பாட்டில்மேலும் கூறப்பட்டது.

98 ஆம்ஆண்டு கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் கடந்த ஜனவரி மாதம் அநுராதபுரம் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது (3-9)


வந்து விட்டது!

லீலா - 2000

* லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்
* மாத பஞ்சாங்க கலண்டர்
* பொக்கட் டயறிகள்

உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள்

தொடர்பு:-

உதயன் பணிமனை

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் வேண்டுகோள்!
இறை வேண்டலில் ஒன்று சேர்வோம்!

* மடுத்திருப்பதி மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிக்க!
* இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் குடும்பத்தவருக்கு அனுதாபத்தையும் தெரிவிக்க!
* காயமடைந்தோர் குணம் பெற!
* ஆலயங்களில் தஞ்சமடையும் அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் இனியும் தொடராதிருக்க!

இடம்:- யாழ். மரியன்னை பேராலயம்
காலம்:- 28-11-99 ஞாயிறு காலை 10.00 – 1.30 மணி (S.L.T)

யாழ். மறைமாவட்ட, நீதி சமாதான ஆணைக்குழு ஒழுங்குபடுத்தும் இறை வேண்டலில் அனைத்து மக்களையும் ஒன்று சேருமாறு அழைப்பு விடுகின்றோம்.

- யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்.

(C/9997)



பீப்பிள் பாக் வியூ இன்
PEOPLE PARK VIEW INN

வெளியிடங்களில் இருந்து கொழும்பிற்கு வரும் மக்களின் வசதியைக் கருத்திற் கொண்டு கொழும்பு -11 புறக்கோட்டை இல 163/1, 5 ஆம் குறுக்குத்தெருவில் (OPPOSITE GAS COMPANY)சகல வசதியும் உள்ளடக்கிய தங்குமிட விடுதி அமைந்துள்ளது. புகையிரத நிலையம், பேருந்து நிலையத்திற்கு அண்மையில் புதிய நிர்வாகத்தின் கீழ் குறைந்த கட்டணத்துடன் இயங்குகின்றது.

துணை நிறுவனம்:

ஈஸ்வரா லொஜ்

169, செட்டியார் தெரு,
கொழும்பு ~ 11. (330356)

T.P - 421090
342240

(71085)



லிபேட்டி
(அச்சுவேலி)
விஜயகாந்
நடித்த
கண்ணுபடப் போகுதய்யா
காட்சிகள் – 10.30, 2.30
T.P. No: 070-212223
070-212678
(C/9986)



ஸ்ரீ செல்வா சினிமா
யாழ்ப்பாணம்
தினசரி – 10.30, 2.30
(பழைய நேரம்)
முரளி, மீனா, ரகுவரன்
நடித்த
வாட்டாகுடி இரணியன்
பயங்கரக்காட்டில்
சண்டைகள்
நிறைந்த படம்
புதிய வெளியீடு
(71311)



நாகம்ஸ்
சுன்னாகம்
4 ஆவது வெற்றிவாரமாக
விஜய் ~ ஷாலினி
நடித்த
காதலுக்கு மரியாதை
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(71273)



ராஜா
(யாழ்ப்பாணம்)
அர்ஜுன் - மீனா, ரம்பா
மற்றும் பலர் நடித்த
செங்கோட்டை
10.30, 2.00, 5.00
(C/9949)



இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் நீண்டகாலமாக
உதவித் தபாலதிபராக கடமை ஆற்றிய

வ. மரியதாஸ்

(உதவித் தபாலதிபர் - சுண்டிக்குளி)

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது இதயபூர்வமான அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதம தபாலதிபரும்,
உத்தியோகத்தர்களும்.

யாழ்ப்பாணம். (71301)



மரண அறிவித்தல்

மகாலிங்கம் சிவநாதன்

தாவடி தெற்கைச் சேர்ந்த மகாலிங்கம் சிவநாதன் பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்புமகனும் சிவஞானம் இராசலட்சுமி தம்பதிகளின் அன்புமருமகனும் மகாலட்சுமியின் (பிரான்ஸ்) அன்புக்கணவரும் சுஜன், சுஜி ஆகியோரின் அன்புத்தந்தையும் விக்கினேஸ்வரி, யோகேஸ்வரி (சாந்தா-கனடா) கிருபாகரன் (இந்தியா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

தகவல்
செல்லம்மா (தாய்)

தாவடி தெற்கு,
கொக்குவில். (71291)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனுக்கு இன்று மகிழ்வுறு பிறந்தநாள் 14

## சமயத் தலைவர்களின் அருளாசிகள்

### நல்லை ஆதீன முதல்வர்

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் மானிட சமுதாயம் புனிதம் பெறவேண்டும். இப்புனித கைங்கரியத்துக்கு சமுதாயத்தில் பங்களிப்பவர்களில் பத்திரிகையாளர்களும் பெரும் பங்குவகிக்கின்றனர். எம் திருநாட்டில் குறிப்பாக யாழ்.மண்ணில் வெளிவரும் தினசரிப்பத்திரிகையாகிய **உதயன்** தனது பணியில் பதினான்கு வருடங்கள் பூர்த்தி செய்வதறிந்து அனைவரும் பெருமையடைவர். பதினான்குவருடங்கள் இறையருளாலும் இனிய வாசகர்களின் அபிமானத்தாலும் தனித்துவம் பெற்று மிளிரும் **உதயன்** தளராத மனஉறுதியோடு பல்லாண்டு பல்லாண்டு இவ்வையகத்தில் தன்பணிதொடரவேண்டும் என இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**உதயன்** தன் மகத்தான பணிகளில் நின்று தூய சமுதாயத்தை உருவாக்க தொடர்ந்து பாடுபடவேண்டும். அகிம்சை, சத்தியம், அன்பு, தயை, பணிவு, பரோபகாரம் போன்ற உணர்வுகளை எமது சமுதாயத்தில் விதைப்பதற்கு மேலும் மேலும் தன் பணியினை விரிவாக்கம் செய்தல்வேண்டும். எதற்கும் அஞ்சாது நீதியை நடுவுநிலையில் நின்று உலகுக்கு வெளிப்படுத்தும் **உதயன்** பத்திரிகையின் மரபு என்றும் பேணப்படவேண்டும்.

எம் இளைய சமுதாயத்திடம் பொறுப்புணர்ச்சிகளை பத்திரிகைத் தர்மத்தின் ஊடாக மேலும் வளர்க்க வேண்டும். அதிகாலையில் எம் குடாநாட்டில் ஒவ்வொருவரது உள்ளமும் உதயனின் வருகையை எதிர்பார்த்துக்காத்திருக்கும்.

உத்தம பத்திரிகையாய் விளங்கிடும் உதயனே! பல்லாண்டு பல்லாண்டு உன் பணி சிறக்க இறைவனைப் பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

### அன்னை துர்க்காதுரந்தரி

நீதி நிலைத்திட, நிம்மதி பிறந்திட, அறிவு வளர்ந்திட, அறியாமை அகன்றிட, ஆன்மா அமைதிபெற, சமூகத்தை ஆற்றுப்படுத்தவேண்டியது பத்திரிகைகளின் புனித கடமையாகும். இப்புனித கடமையில் கடந்த பதினான்கு வருடங்களாக அரும்பணியாற்றிவரும் **உதயன்** பத்திரிகையை வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகிறேன். எம் மண்ணில் வெளிவரும் நாளேடான **உதயன** - திருவரும் சிறப்பாலும் வாசகர்களின் அபிமானத்தாலும் வளம்பெற்றுத் தன்பணி தொடர்கிறது. தினமும் எம் சமூகத்துக்கு உலகச் சூழ்நிலைகளை உணரவைத்து தொடர்பாடலால் பல வகைகளிலும் எமக்கு உறுதுணை செய்து உதவுகிறது.

யாழ். குடாநாட்டவரின் பேரபிமானம் பெற்றுத்திகழும் **உதயன்** பத்திரிகை தனது பதினான்கு வருடகால வாழ்வில் பல அநுபவங்களைப் பெற்று வீறுநடைபோடுகிறது எனலாம். நடுவுநிலை தவறாது தொடர்ந்து உறுதியோடு சமூகத்தை உயர்ந்த நோக்கில் **உதயன்** பத்திரிகை அழைத்துச் செல்ல வேண்டும் என்று வேண்டி, வாழ்த்தி இறைவனைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

துர்க்காதுரந்தரி·
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

### மாவை ஆதீன கர்த்தா

இப்பூமியில் மனிதர்கள் கோருவது துக்கநிவர்த்தியும் சுகப்பிராப்தியுமேயாம். இவற்றை அடைய ஏராளமான தர்மங்கள் உள. அவற்றுள் பத்திரிகா தர்மமும் அடங்குகிறது.

உலக சமூகத்தினர் தத்தம் ஞான விருத்திகளுக்கு எதையாவது துணைகொள்வதற்கு அவஸ்தைப்படுகின்றனர். இந்த அவஸ்தைகளைப்போக்க தற்காலத்தில் பத்திரிகா தர்மம் உறுதுணை தந்து நிற்கிறது. **உதயன்** பத்திரிகையாலயம் பத்திரிகா தர்மத்தை நன்குணர்ந்து செயலாற்றிவருவதை கடந்த பதினான்கு வருஷங்களாக **உதயன்** பத்திரிகை வாசகர்கள் நன்குணர்ந்துள்ளனர். குருமூர்த்தமாகவும் பேராசிரியனாகவும் வைத்தியனாகவும் நுண்கலைசார்ந்த விற்பன்னனாகவும் தன்னையே அவ்வப்போது மாற்றிக்கொண்டு சமூகத்தின் நலனுக்காக **'உதயன்'** துணிந்துநின்று செயலாற்றுவதாற்தான் நொந்து வீழ்ந்து சஞ்சலங்கொண்ட மக்கள் தமக்குண்டான பல்வேறு தாகங்களை **உதயன்** மூலம் நிவர்த்திகொள்கிறார்கள்.

பல்வேறுபட்ட மனங்களைக்கொண்ட வாசகர்கள் **உதயன்** பத்திரிகையை நாடிநிற்கிறார்களென்றால், உதயன் ஆசிரியபீடமும் நிர்வாகமும் மனித தேவைகளைக் கண்டறிந்து எவ்வகையில் பணியாற்றுகிறார்களென்பது புலனாகும். விவேகத்தைப் பெருக்கவும் பகுத்தறிவை விருத்திசெய்யவும் குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டி, நல்வழிகளில் செயற்பட உபதேசித்தும் நடந்தவை, நடக்கப் போகின்றதை மக்களுக்கு இலகுதமிழில் அறியத்தந்தும், உயரிய பணியை பத்திரிகாதர்மம் மூலம் மேற்கொண்டுள்ள **உதயன்** பணியில் ஈடுபட்டோர்கள் அனைவரும் தர்மவான்களேதான்.

இந்தப் புனிதப் பணிகளை கடந்த 14வருடங்களாக சிரமேற்கொண்டு பெருக்கியதுபோல் மீண்டும் மீண்டும் அப்பணிகளை சுவராஸ்யத்தோடு தொடருங்களென ஆசிர்வதிக்கின்றேன். அதற்காக சகல திருவருட்செல்வங்களும் **உதயன்** பணிமனைக்கு கிடைக்கவேண்டுமென மாவைக்கந்தனை நினைந்து அடிக்கடி பிரார்த்திக்கின்றேன்.

மஹாராஜஸ்ரீ **சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**
**மாவையாதீனகர்த்தா**
**மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்**

### மெதடிஸ்த முகாமைக்குரு

நவீன காலத்தின் தொடர்புச்சாதனங்களின் பல்வேறு வளர்ச்சிகளில் பத்திரிகைத்துறை அன்றும் இன்றும் முன்னணி வகிக்கின்றது. ஏனெனில், இத் தொடர்புச் சாதனமே ஏழைக்கும் செல்வந்தனுக்கும் பாகுபாடற்ற புனித சேவையைப் புரிந்து வருகின்றது.

இவ்வகையில் **உதயன்** ஜனரஞ்சகமானதாகவும் யதார்த்தமானதாகவும் தன் பணியை நடுவுநிலையாகச் செய்துவருகின்றது. யாழ்ப்பாண மக்கள், 'திறந்த வெளிச்சிறையில்' வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு வெளியுலகச் செய்திகளையும் உள்ளூர்ச் செய்திகளையும் ஒவ்வொரு இல்லங்களுக்கும் எடுத்துச் செல்லும் 'துணிச்சலுள்ள பத்திரிகையாக' இருப்பது உதயனின் தனிச்சிறப்பாகும். பதினான்கு ஆண்டுகள் நிறைவுற்ற உதயனின் சிறப்புப்பணி மங்களகரமாக அமைய இறையாசிகள் வேண்டி வாழ்த்துகிறேன். நன்றி!

**வண. க. கருணசேகர,**
**முகாமைக்குரு, மெதடிஸ்த திருஅவை,**
**யாழ்ப்பாணம்.**

### யாழ்ப்பாண ஆயர்

மக்கள் பணியில் 14ஆண்டுகளைப் பூர்த்திசெய்யும் **உதயன்** பத்திரிகையை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சிகொள்கிறோம்.

நெருக்கடியான காலகட்டங்களில்தான் புதிய படைப்புகள் வெளிவருகின்றன என்பதற்கொப்ப, ஓர் இக்கட்டான காலகட்டத்தில் தன்பணியை ஆரம்பித்து கடந்த 14 வருடங்களாக துணிவோடு செயற்பட்டு தேசியவிருது பெறும்வரை உயர்ந்த **உதயன்** பத்திரிகையின் பணி தமிழ்மக்களுக்கு இன்று மிகவும் தேவையான பணியாகும்.

உங்கள் பத்திரிகையின் பணி எத்தகைய இடர்வந்தாலும் பயந்து விடாது துணிவோடும் பத்திரிகைத் தர்மத்தோடும் தொடர்ந்து நடைபெற இறையாசீர் வேண்டுகிறோம்.

**மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
**யாழ். ஆயர்**

### தென்னிந்திய திருச்சபை ஆயர்

அரசியற் கொந்தளிப்பும் அதிகாரக் கெடுபிடிகளும் நிறைந்த இக்கால கட்டத்தில் **உதயன்** ஆற்றிவரும் அரும்பணிக்காக இறைவனைப் போற்றுகின்றேன். 14 வருடங்களாகத் தமிழ்மக்களின் அவலங்களை உலகுக்கு அறிவித்தும், துன்ப அனுபவங்களைப் பதிவேடு செய்தும் வருகின்றது.!

**உதயனிடம்** பொறுப்புவாய்ந்த பத்திரிகையாசிரியரின் பண்பினைக் காண்கின்றேன். இன, மத, பிரதேச உணர்ச்சிகளுக்கு அடிபணியாமல் நடுவுநிலைமைப் பண்புடன் பணியைச் செய்து வரும் சீர்மை போற்றற்குரியது.

பாரதியாரின் 'சுதேசமித்திரன்' திரு.வி.கவின் 'நவசக்தி' போன்று **உதயன்** பத்திரிகையும் தமிழ்மக்களின் வரலாற்றில் தனியான இடம்பெறுவது உறுதி.

**'உதயன்'** பத்திரிகைக்கும் அதன் ஆசிரியர் குழுவிற்கும் நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துதல்கள்.

தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீனம் — அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்

### சாரதா சேவாச்சிரம முதல்வர்

**உதயன்** தனது சிறப்பான பணியில் மற்றும் ஓர் ஆண்டை நிறைவு செய்வது மகிழ்ச்சி தருவதாகும்.

தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் கடந்த பல வருடங்களாக சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து வருகிறோம். இவ்வேளையிலும் **உதயன்** தனக்குள்ள சீரிய பொறுப்பை தட்டிக்கழிக்காது தமிழினத்தின் விடிவுக்காகச் செயற்படுவதுகண்டு பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

எல்லாம் வல்ல தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி, நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர் மற்றும் சகல பணியாளர்களுக்கும் அனைத்து நலன்களையும் நல்க இந்த நன்னாளில் இறைஞ்சுகிறோம்.

**சுவாமி சித்ரூபானந்தா,**
**ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,**
**பருத்தித்துறை.**

## அன்புசால் வாசகர்களே!

உங்களின் பேரன்புக்கும் அபிமானத்துக்கும் ஆளான **உதயன்** இன்று தனது பதினான்காவது அகவையை நிறைவுசெய்து பதினைந்தாவது ஆண்டில் கால் பதிக்கிறான்.

பத்திரிகைத் தொழில் ஒரு தர்மம். அந்தத் தர்மம் வழுவாது மக்கள் சேவை செய்ய வேண்டும் என்ற தனது இலட்சியத்திலிருந்து வழுவாது உதயன கடந்த பதினான்கு ஆண்டு காலமாக உழைத்ததை நீங்கள் நன்கறிவீர்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து வெளிவரும் தமிழ்த் தேசியப் பத்திரிகை என்ற வகையில் தனக்குள்ள சமூகப் பொறுப்புடன் அவன் செயலாற்றி வருகிறான்.

வாசகர்களுக்குத் தகவல் சொல்லும் கடமையையும் அறிவுதரும் பணியையும் உதயன் உறுதியுடனும் முயற்சியுடனும் ஆற்றுகிறான்.

மக்கள் நலன் கருதி உழைப்பதாலேயே அவனால் பல இடுக்கண்கள், நெருக்குதல்கள், பயமுறுத்தல்களுக்கு மத்தியிலும் உயர்ந்து நிற்கமுடிகிறது. அந்தச் சேவையைக் கருதி இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் அவை உதயனுக்கு இவ்வருடத்துக்கான துணிச்சலான பத்திரிகை விருதை வழங்கிக் கௌரவித்தது. அந்த மகிழ்ச்சியில் கலந்துகொண்டு உதயனைப் பாராட்டிய சகல அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகள்.

உதயன் உள்ளதை உள்ளதாக எழுதுகின்றான் என்பதால் அவனுக்கு குண்டெறியும் விழுந்தது. நேர்மையின், தர்மத்தின் பக்கம் நின்று எங்களுக்கு ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்த அன்பு நெஞ்சங்களை நாம் என்றென்றும் மறவோம்.

உதயனின் வளர்ச்சியில் கொழுகொம்பாகத் திகழ்பவர்கள் வாசகர்களாகிய நீங்களே. உங்களது ஆதரவும் அன்பும் அபிமானமும் தொடரவேண்டும் என அன்புகூர்ந்து வேண்டுகிறோம். பலவகைச் சூழ்நிலைகளின் மத்தியிலும் உதயன் தனது சேவையைச் செவ்வனே செய்வதற்கு உங்கள் ஆதரவே பலமாக நிறைகிறது.

உங்களது நிறை ஆதரவு என்ற விளைநிலத்தில் நின்று மக்களின் மனதையும் அறிவையும் உயர்த்தும் உன்னத பணியை, பிறக்கப் போகும் புதிய புத்தாயிரம் ஆண்டின் மலர்வுடன் மேலும் சிறப்புடனும் சீராகவும் உத்வேகத்துடனும் உதயன் ஆற்றுவான்.

எமது வளர்ச்சியில் பெரும்பங்குகொண்டு உதவிய அன்பு வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், விநியோக முதல்வர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் இன்றைய நன்னாளில் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்கள் மகிழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

உதய நாள் தொட்டு உதயன் தனது பணியைப் பழுதிலாத்திறனுடன் இயற்ற உறுதுணையாக, உந்துசக்தியாக விளங்கும் இறைவனின் பேரருட் கருணையை அவனது அருட்பாதம் பணிந்து இறைஞ்சுகிறோம்.

வணக்கம்

**- நிர்வாகத்தினர்.**

### பிறந்தநாள் வாழ்த்து

'உதயன்' பத்திரிகைக்கு எமது அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள். நல்லவரை வாழ்த்தியும் அல்லாதாரை கண்டித்தும் தாங்கள் விடுக்கும் குரல்தான் இன்று ஓரளவேனும் பொதுப்பணி சிறக்க வழிவகுக்கின்றது. ஆசிரிய தலையங்கம் சிறப்பான தேன் அம்சமாகும்.

என்றும் உதயனின் பணி மேலும் மேலும் சிறக்க எனது பணிவன்பான வாழ்த்துக்கள்.

**காணிப்பதிவாளரும், மாவட்டப்பதிவாளரும்,**
**அலுவலர்களும்,**
**யாழ்ப்பாணம்.**

### விரிகதிரால் விளங்கட்டும்!

உண்மை நெறிசமைக்க ஒற்றுமையைத் துலக்கமிட
வண்ணம் கொண்டுயர்ந்து வாழ்த்தொலியால் இலங்கவென
எண்ணந்தனில் அன்பை எடுத்தியம்பிப் போற்றுகிறோம்
வெண்மைநிற 'உதயன்' விரிகதிரால் விளங்கட்டும்!

**முகாமையாளரும், ஊழியர்களும்**
*மக்கள் வங்கி,*
*கன்னாதிட்டி.*

### வாழ்க பல்லாண்டு!

**புதினம் யாவும் தரமாய்த் தந்து**
**'உதயன்' எனவே இல்லம் தோறும்**
**உதயம் காட்டி இதயம் கவரும்**
**உதயனே வாழ்க! வாழ்க பல்லாண்டே!!**

நாயன்மார்கட்டு
**ப. மகேந்திரதாசன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA TECHNICAL INSTITUTE

Jaffna, Sri Lanka
**(Incorporated with IPSS)**
REGD - 15251 T.P: No. 021 - 3335

## மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் - 2000

**1000**
மாணவர்களுக்கு

யாழ். மாவட்டத்தில் கடந்த 20 வருடங்களாக பல்வேறு தொழிறபயற்சித் துறைகளில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு பயற்சி அளித்து வரும் எமது நிறுவனத்தில் மீண்டும் **கணனிப் பயிற்சி** நெறியை ஆரம்பித்துள்ளோம். இதன் மூலம் 2000ஆம் ஆண்டில் (மிலேனியம்) போட்டிப்பரீட்சை மூலம் (நுண்அறிவு, பொதுஅறிவு) புலமைப்பரிசில் வழங்க உள்ளோம் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

* புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்க உள்ள பாடநெறிகள்

- DIPLOMA IN SOFTWARE ENGINEERING 12 மாதங்கள்
- DIPLOMA IN COMPUTER PROGRAMMING 8 மாதங்கள்
- TECHNICIAN DIPLOMA IN COMPUTER HARDWARE 8 மாதங்கள்
- DIPLOMA IN MICRO SOFT OFFICE 6 மாதங்கள்
- DIPLOMA IN WINDOWS APPLICATIONS 5 மாதங்கள்
- CHILDREN'S PROGRAMMING 3 மாதங்கள்

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்

| | | |
|---|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை | - | யாழ்ப்பாணம். |
| மகாத்மா புத்தகசாலை | - | திருநெல்வேலி. |
| ஞானம் புத்தக நிலையம் (நாச்சிமார் கோவிலடி) | - | K.K.S . றோட், யாழ்ப்பாணம். |
| மணியம் ஸ்ரோர்ஸ் | - | கொடிகாமம. |
| நாயகபாலன் புத்தகசாலை | - | மானிப்பாய். |
| ஜீவா ஸ்ரோர்ஸ் | - | மல்லாகம். |
| மொடேர்ன் ஸ்ரோர்ஸ் | - | நெல்லியடி. |
| துர்க்காதேவி புத்தகசாலை (ஆசீர்வாதம்) | - | சாவகச்சேரி. |

✳ O/L (1999) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் இப் புலமைப்பரிசிலில் இணைந்து கொள்ளலாம். உங்களுக்கு என ஒரு பயிற்சி நெறி அறிமுகப்படுத்தியுள்ளோம். (Children's Programming)

✳ A/L (2000) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகளின் விசேடபிரிவு ஒன்று புரட்டாதி மாதத்தில் ஆரம்பிக்கப்படும்.

உங்கள் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து ரூபா 100 பரீட்சைக் கட்டணத்துடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்பவிரும்புவோர் Registrar, Jaffna Technical Institute என்று பெயரிட்டு யாழ். தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**REGISTRAR,**
Jaffna Technical Institute,
No. 07, Palaly Road,
Jaffna.

**விண்ணப்பப்படிவங்கள் வந்து சேரவேண்டிய திகதி 20-12-1999 இற்கு முன்னர்**

Note:- மீண்டும் சாவகச்சேரி, நெல்லியடி, மானிப்பாய் ஆகிய இடங்களில் மிகவிரைவில் எமது கிளை நிறுவனங்கள் ஆரம்பமாகவுள்ளன.

தலைமையகம்
**J.T.I**
No. 52/1,STANLEY ROAD,
Jaffna.

கிளை நிறுவனம்
**J.T.I**
No.07, Palaly Road,
Jaffna.

(71265)

**Director.**

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பும்

**28-11-1999**

அன்னை மடியில் 21 - 05 - 1971



அதர்மத்தின் கையில் 15 - 10 - 1999

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(உபதலைவர், பூங்காவனவிழாக்குழு; தென்புலோலி புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயம்)

**15-10-1999 அன்று**
அகால மரணமடைந்த
**கணபதிப்பிள்ளை பத்மநாதன்**
அவர்களின்

இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்த உற்றார், உறவினர், அனைத்து நண்பர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலியை தனித்தும் ஒருமித்தும் தெரிவித்த அனைவருக்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (28-11-1999) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள கிரியைகளில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசனத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாரையடி,
புலோலி.

தந்தை, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிமார், மருமக்கள்,
பெறாமக்கள் மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(71264)

## முதலாம் ஆண்டு ஞாபகார்த்த தினம்



### செல்வி செகசோதி கமலினி

பிறப்பு: 06-03-1986

இறப்பு: 08-12-1998

**திதி: 27-11-1999**

மலரும் முன்னே சக்தியுள்ள
இறைவன் தனக்கென்று கேட்டார்
உன்னை நாம் என்ன செய்வது...

உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கரவெட்டி.

அப்பா, அம்மா,
தம்பி, தங்கை.

(71218)

### மடு அகதிகளுக்கு மருந்து

மன்னார்,நவ.27

மடுவிலுள்ள அகதிகளுக்கு உதவும் பொருட்டு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் இன்று மருந்துப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

திரிபோஷா போன்ற பொருள்களும் வவுனியாவிலிருந்து இன்று மடுவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (3-5-21)

### மருந்தகத்தில் திருட்டு

மன்னார்,நவ.27

மன்னார் பண்டிவிரிச்சானிலுள்ள மருந்தகம் இனந்தெரியாதவர்களினால் உடைக்கப்பட்டு அங்கிருந்த மருந்துப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்தவாரம் இந்த மருந்தகம் உடைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (3-5-21)

### உணவுப் பொருள்கள் கடன் அடிப்படையில

மன்னார்,நவ.27

மன்னாரில் மக்கள் இடம்பெயர்வு தொடர்வதினால் இங்குள்ள ப.நோ.கூ. சங்கங்களுக்கு ஒரு மாதத்துக்கு தேவையான உணவுப்பொருள்கள் மன்னார் செயலகத்தினால் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

இங்குள்ள ஐந்து ப.நோ.கூ.சங்கங்களும் மேற்படி உணவுப் பொருள்களை மக்களுக்கு விநியோகிக்கும் நோக்குடனே மாவட்டச் செயலகம் இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (3-5-21)

### மட்டக்களப்பில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு,நவ.27

மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூரியை கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைக்குமாறு கோரி அங்கு பயிலும் மாணவர்கள் தமது வகுப்புக்களை கடந்த திங்கட் கிழமை முதல் பகிஷ்கரித்து வருகின்றனர்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரை தாம் வகுப்புக்களைத் தொடர்ந்து பஷ்கரிக்கப்போவதாக இசை நடனக் கல்லூரி மாணவர்கள் தெரிவித்தனர். (3-5-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNOPS

இதழ் :6

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியூடான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## கிராமிய சுகாதார மேம்பாட்டுத் திட்ட அமுலாக்கல் நடவடிக்கைகள்



19/11/99 அன்று மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இல் நடைபெற்ற அமர்வு.

UNOPS/JRRP இனால் கடந்த மாதம் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த மருத்துவ நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆழ்நிலை ஆய்வுகள் மூலம் இம்மருத்துவ நிலையங்கள் போதியளவு மருத்துவ சேவையை வழங்குவதற்கான அத்தியாவசிய தேவைகள் கண்டறியப்பட்டன. இத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் UNOPS/JRRP இனால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் முதலாம் கட்ட நடவடிக்கையாக அளவெட்டி மத்திய மருந்தகம் மகப்பேற்று மருத்துவ மனைக்கு குளிர்சாதனப் பெட்டி, மின்பிறப்பாக்கி போன்றவற்றையும் ஏனைய மத்திய மருந்தகங்களுக்கு குளிர்சாதனப்பெட்டிகள் வழங்குவது தொடர்பான விலைகோரல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றுடன் அளவெட்டி மத்திய மருந்தகம் மகப்பேற்று நிலையத்திற்கு புதிய மகப்பேற்று நிலையம் ஒன்றினைக்கட்டுவது மற்றும் ஏழாலை மத்திய மருந்தக கட்டடத்தினை திருத்துவ்து தொடர்பான நடவடிக்கைகளும் UNOPS/JRRP இன் பொறியியலாளர் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இதைப்போன்று மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த மருத்துவ நிலையங்கள் தமது சிறந்த சேவையை வழங்குவதற்கான அத்தியாவசிய தேவைகளை கண்டறியும் ஆழ்நிலை ஆய்வுகள் இம்மாதம் நடைபெற்றன. ஆய்வின் இறுதிக் கட்ட நடவடிக்கையாக, ஆழ்நிலை ஆய்வினுடாக இனங்காணப்பட்ட விடயங்கள் இவ்வாண்டு நவம்பர் 19 ஆம் திகதி மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்ற சுகாதார சேவைகளுக்கான மாகாண பிரதிப் பணிப்பாளர் Dr.T.சிவபாதம்(DPDHS) சங்கானை பிரதேச செயலர் K.சந்திரராஜா மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டது.

## வதிரி தோற் தொழிற்சாலையின் கிளை விற்பனை நிலையம் திறப்பு





UNOPS/JRRP, SLRCS ஆகியவற்றின் அனுசரணையுடன் பருத்தித்துறையில் இயங்கிவந்த தோல் பொருள் உற்பத்திப் பயிற்சிகள் 40 இளைஞர் யுவதிகள்ளப் பயிற்றுவித்ததுடன் கடந்த யூன் மாதத்தில் முடிவடைந்தது. இவர்களுள் 22 பேர் ஒன்றிணைந்து வதிரியில் ஒரு தொழிற்சாலையை உருவாக்கியுள்ளார்கள். அத் தோற் தொழிற் சாலையின் கிளைவிற்பனை நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ள SLRCS கட்டடத்தின் ஒரு பகுதியில் இவ் வாண்டு நவம்பர் 18 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் வதிரி உற்பத்திகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்ய முடியும்.

இவ்விற்பனை நிலையத்தை யாழ்ப்பாணம் SLRCS இன் செயலாளர் திருK.தியாகராஜா வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

## கண்காட்சியும் சான்றிதழ்கள் வழங்கலும்



UNOPS/JRRP இன் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பருத்தித்துறையில் பெண்களுக்கு நடத்தப்பட்டு வந்த 6 மாத கால இலவச தையற்பயிற்சி நிறைவடைந்துள்ளது.

இப்பயிற்சிக்காலத்தின் போது தயாரிக்கப்பட்ட ஆடை அலங்காரப் பொருட்களின் கண்காட்சியும் பயிலுனர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கலும் நிகழ்ச்சி இவ்வாண்டு நவம்பர் 16 ஆம் திகதி பருத்தித்துறை போறூட் மண்டபத்தில் நடைபெற்றது.


## சுயதொழில் முயற்சிக்ரான பயிற்சி



UNOPS/JRRP இன் திட்டங்களான பாபறா மல்வாணி கணனிப்பயிற்சி நிலையம், வதிரி தோற் தொழிற்சாலை ஆகியவற்றினை சுயமாக இயங்க வைப்பதற்குரிய முயற்சியாக அவற்றை சேர்ந்த ஒவ்வொருவர் யாழ் பல்கலைக்கழக CEFE பயிற்சி நெறியில் பங்குபற்றினார்கள்.

பல்வேறு நிறுவனங்களும், தனிமுயற்சியாளர்களுக்கும் நடாத்தப்படும் இப்பயிற்சிநெறியில், விற்பனைத் திட்டமிடலிற்கான முதற் பரிசு பாபறா மல்வாணி கணனிப்பயிற்சி நிலையமும், இரண்டாம் பரிசு வதிரி தோற் தொழிற்சாலையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணி வெடி விழிப்புணர்வு நிகழ்ச்சி






யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் இவ்வாண்டு நவம்பர் 15 ஆம் திகதி கண்ணி வெடி விழிப்புணர்வு நிகழ்ச்சி UNOPS/JRRP இன் கண்ணி வெடி விழிப்புணர்வுக் குழுவினால் நடத்தப்பட்டது.

விவசாயிகள் கண்ணிவெடியினால் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் நோக்குடன் கண்ணி வெடி சம்பந்தமான விழிப்புணர்வினை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக விவசாயப் போதனாசிரியர்களுக்கும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியளித்தலே இந்நிகழ்ச்சியின் குறிக்கோளாகும்.

## கோழிக் குஞ்சு பொரிக்கும் இயந்திரங்கள்





யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, சன்டிலிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை ஆகிய இடங்களில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக ஆர்வமுள்ள பண்ணையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு, ஒவ்வொன்றும் 11,500 ரூபா பெறுமதியுடைய 25 கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரங்களை UNOPS/JRRP வழங்கியுள்ளது.

இவ்வியந்திரம் மூலம் ஒருதடவையில் 180 கோழிமுட்டைகளை அடைவைக்க முடியும்.

இவற்றிற்குரிய தவணைக்கட்டணத்தை பண்ணையாளர்கள் அந்தந்த கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீளச் செலுத்துவார்கள். இப்பணத்தை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள சிறிய அளவிலான கோழிவளர்ப்புப் பண்ணையாளர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கும். இக்கடன் திட்டம் சுழற்சி முறையில் நடைபெறும். இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் கோழி வளர்ப்பு ஊக்குவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விதழ் தொடர்பான
உங்கள் சந்தேகங்கள்,
கேள்விகளுக்கு தொடர்பு
கொள்ள வேண்டிய முகவரி :

*Programme Manager*
*Public Information Team*
*UNOPS/JRRP*
*125, Temple Road*
*Jaffna.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

சிறந்த பாவிப்பில் உள்ள Sony Video Camera Recorder (Handy Cam) CCD FX 730 VEIFX 830 VE ஒன்று இதன் எல்லா உபகரணங்களுடனும் Operation LCD Screen உட்பட விற்பனைக்குண்டு மிகத்தெளிவான படங்கள், கையாளுதல் மிகச்சுலபம் தொடர்பு:- Dr. A. நடராசா இராசமணி இல்லம், வதிரி,கரவெட்டி. (71123)

டீப் பிறிசர் பெரிது, 2500 றொபின் ஜெனரேற்றர் (டீசல்), ரெலிபோன் பூத் விற்பனைக்குண்டு தொடர்பு:- சி.குணம் 42, பாடசாலைக்கு அருகில். மானிப்பாய் வீதி, தாவடி. (71210)

சங்கானை பிரதான வீதியில் 4பரப்புக்காணியுடன்கூடிய வீடும் கடைகளும் விற்பனைக்குண்டு. தனித்தனியாகவும தரப்படும். தரகா தேவையில்லை. தொடர்பு:- தி.குணசிங்கம், சேக்கிள் சென்ரர், சங்கானை. (71183)

பாவனையில் உள்ள 6 ஸ்ரீ டற் சன்சனி கார் விற்பனைக்குண்டு கிழமை நாள்களிலும் பார்வையிடலாம். தொடர்பு இ.ஜெகராஜ், C/o தங்கராஜா, இரண்டாம்ஒழுங்கை, மானிப்பாய். (71243)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர், கல்பேட் விற்பனைக்குண்டு. தினமும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு:- கண்ணா வீடியோ சென்ரர் வளவு, இல. 31, மான்ஸ் பாடசாலைவீதி,உடுவில்,சுன்னாகம்.(71186)

### யாழ்ப்பாணம்

அ்ராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. யாழ்ப்பாணம் சிறுகதைத் தொகுப்பு. 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல். 3. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறுமாதங்கள் இடம்பெயர்வின் கதை 4. நாடகம் எழுதுவது எப்படி? ரூபா - 50 (71236)

---

## 31ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

அன்னை அனைப்பில்
27 - 09 - 1940



ஆண்டவன் அனைப்பில்
28 - 10 - 1999

**அமரர்**
**திருமதி புவனேஸ்வரி ஞானப்பிரகாசம்**
(இளைப்பாறிய ஆசிரியை)

தெய்வங்கள் காக்கும் என திடமாக நம்பிநிற்கத்
தெய்வங்கள் தான் உங்களைத் தெய்வமாக்கி
விட்டனவோ
மக்களின் வரவுக்காக காத்திருந்தபோது
கொடிய இயமன் இரக்கமின்றிப் பறித்தானோ
முப்பத்தொரு நாள்கள் முழுதாக மறைந்தாலும்
மறக்கமுடியவில்லை அம்மா உங்கள் நினைவுகளை
அம்மா உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைத் தினமும் வேண்டுகின்றோம்.

**கணவர்,**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பெறாமக்கள், சகோதரர், சகோதரிகள்.**

*வாகையடி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*
(71213)

---

## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

**39, கொழும்புத்துறை வீதி,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

### சர்வதேச ஊனமுற்றோர் தினம்
### 03-12-1999

**மேற்படி தினத்தையொட்டி பின்வரும் நிகழ்வுகள் சங்கத்தில் நடைபெறும்**

1) ஊனமுற்றோர் ஆண், பெண் இருபாலாருக்குமான முச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி 03-12-1999 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். பங்குபற்றுவோர் தங்கள் பெயர்களை உடன் மேற்படி விலாசத்தில் பதிவுசெய்து கொள்ளவும்.
2) வினாவிடைப்போட்டி (நடத்தப்பட்டது).
3) பரிசளிப்பு விழா.

- செயலாளர்

(C/9944)

---

## 93 ஆவது அகவையில்

27-11-1999



**திருமதி சின்னம்மா நமசிவாயம்**
(மலாயன் ஓய்வூதியர்)

நூற்றாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ கிளிவிசிட்டி ஞானவைரவக் கடவுளை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
நந்திகா (பேர்த்தி)

'இந்திரகிரி'
இரும்பு மதவடி,
கரவெட்டி.
(71209)

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
25 - 06 - 1941



உதிர்வு
28 - 10 - 1999

**வேலாயுதம் சிவசுப்பிரமணியதேவா**
(பருத்தித்துறை பிரதேசசபை பிரதம லிகிதரும்,
புலோலி உபஅலுவலக பொறுப்பதிகாரியும்,
புலோலி ப.நோ.கூ. சங்கத் தலைவரும்)

**28-10-1999 அன்று அமரரான**
**வேலாயுதம் சிவசுப்பிரமணியதேவா**

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், ப.நோ.கூ.சங்கத்தினருக்கும், பிரதேசசபையைச் சேர்ந்தோருக்கும், நண்பர்களுக்கும், அஞ்சல்மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மற்றும பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது குடும்பத் தலைவரின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன்,

இன்று 27-11-1999 சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**-குடும்பத்தினர்.**

*தரும்பைகட்டி,*
*புலோலி.*
(71208)

---


## வெண்மையோ வெண்மை

## நிள்மா
நறுமணச் சொட்டு நீலம்

ஜப்பானிய கட்டமைப்புக்கு அமைய சர்வதேச தரத்திற்கேற்ப நவீன முறையில் தயாரிக்கப்பட்ட நறுமணம் கொண்ட சொட்டு நீலம் நிள்மா.

இது ஆடைகளில் காணப்படும் பழுப்பு நிறத்தை விரட்டியடித்து ஒளி வீசும் பிரகாசமான வெண்மையை தருவதுடன ஆடைகளுக்கு மிருதுவான தன்மையைத்தந்து ஆடைகளின் பாவனையை நீடித்துத் தருகிறது.

ஒரு லீட்டர் நீருக்கு நிள்மா 4/5 துளிகள் வீதம் இட்டு கலக்கிய பின் சலவை செய்து பிழிந்த நிலையில் உள்ள ஆடைகளை நிள்மா நீரில் ஒவ்வொன்றாக இட்டு தேவையான வெண்மைக்கேற்ப அலசிய பின் நன்றாக பிழிந்து நிழலில் காயவிடவும்.

இப்போது முற்றும் புதியவை போன்ற தோற்றமுடைய ஒளிவீசும் பிரகாசமான வெண்ணிற ஆடைகள் உங்கள் கைகளில்.




சந்தைப்படுத்துவோர்
ஏஜே டிரேடிங் கொம்பனி
95,ஜெயந்த வீரசேகர மாவத்தை
கொழும்பு 10 தொலைபேசி: 458699

இணையற்ற தூய அன்புக்கு அம்மா, ஒளிமயமான வெண்மைக்கு நிள்மா.

## யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

**S.V.M**
**NO. 154, HOSPITAL ROAD, JAFFNA.**
T.P NO:- 021 - 2202
021 - 2991
021 - 2911

**CITY AGENCY**
**NO. 158., STANLEY ROAD, JAFFNA.**
T.P NO :- 021 - 2055

(C/9809)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹற்றன் நஷனல் வங்கி
வெற்றிக்கிண்ண
சுற்றுப் போட்டி - 1999

**மாபெரும் கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி**

இடம்:- யாழ். மத்திய கல்லூரி விளையாட்டுத்திடல்
காலம்:- இன்று (27-11-99) சனிக்கிழமை
நேரம்:- பிற்பகல் 2.30

1) பாடசாலைகளுக்கிடையிலான போட்டி
யாழ். பரியோவான் கல்லூரி
எதிர்
யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி

2) கழகங்களுக்கிடையிலான போட்டி
யாழ். பல்கலைக்கழகம்
எதிர்
யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்

பிரதம விருந்தினர்: திரு. K. இராசதுரை
(அதிபர், யாழ்.மத்திய கல்லூரி)
திருமதி தவரத்தினம் இராசதுரை.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஹற்றன் நஷனல் வங்கி**
(C/9982) உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

# தமிழில் வந்த கடிதம் திருப்பி அனுப்பப்பட்டது!

வலி.வடக்கு,நவ.27

மல்லாகம் நீதிமன்றத்தினால் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு தமிழில் அனுப்பப்பட்ட கடிதம் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்குகள் தொடர்பாக விசாரணை முடியும்வரை வெளி மாவட்டங்களுக்கு அனுமதிக்க முடியாதவர்கள் தொடர்பான பட்டியலை மல்லாகம் நீதிமன்றம் தமிழில் சிவில் நிர்வாக யாழ். அலுவலகத்துக்கு அனுப்பியிருந்தது.

இந்தக் கடிதத்தைத் தமிழில் அல்லாது ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் அனுப்புமாறு கோரி மீண்டும் கடிதம் நீதிமன்றத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்மொழி நீதிமன்ற நிர்வாக மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் இப்படிக் கடிதம் திருப்பியனுப்பப்பட்டது ஏன் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் விசனம் எழுப்பப்பட்டுள்ளது.

(உ-3-86)

**நெத்ரா இன்**
NACTAR INN

வெளி இடங்களில் இருந்து கொழும்புக்கு வரும் மக்களின் வசதியைக் கருத்தில்கொண்டு கொழும்பு-12 இல.198, டாம் வீதியில் (Cooking Facilities Available I.D.D Telephone) புகையிரத நிலையம், பேருந்து நிலையம் என்பவற்றுக்கு அருகில் சகலவசதிகளும் அடங்கிய நாள், மாத வாடகையுடன் புதிய தங்குமிட விடுதி. புதிய நிர்வாகத்தின் கீழ் குறைந்த கட்டணத்துடன் இயங்குகின்றது.

*T. P. 451011*
*337316*
*VAN FOR HIRE*
PLEASE CONTACT: **K. NATHAN - 078 - 673541**
(71228)

## மருந்து அன்பளிப்பு

வவுனியா,நவ.27

வவுனியா ஆஸ்பத்திரியில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து பூந்தோட்டம் இளைஞர்களினால் 16ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப்பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மடுவில் இடம்பெற்ற ஷெல்வீச்சில் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு உதவும்பொருட்டே இந்த மருந்துப் பொருள்கள் வழங்கப்பட்டன. (3-5-164)

## கலை விழா

யாழ்ப்பாணம்,நவ.27

வண்ணார்பண்ணை யாழ்.பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

செல்வி க.வளர்மதி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.கல்விவலய முன்பள்ளி பொறுப்பதிகாரி திருமதி யோகராசாவும் சிறப்பு விருந்தினராக இ.தவகோபாலும் கலந்துகொள்வர். (3-5)

## நாவலர் குருபூசை திங்களன்று

யாழ்ப்பாணம்,நவ.27

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப.3.00மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இக்குருபூசையில் நாவலர் பெருமானுக்கு விசேடபூசை, திருமுறைப் பாராயணம், சொற்பொழிவு ஆகியன இடம்பெறவுள்ளன. (3-5)

## பிரியாவிடை வைபவம்

யாழ்ப்பாணம்,நவ.27

ஓய்வுபெற்ற அதிபர்களான இ.மகேந்திரன், வே.திருநாவுக்கரசு மற்றும் இடம்மாற்றம் பெற்றுள்ள அதிபர் சி.கணபதிப்பிள்ளை ஆகியோருக்கு நல்லூர் கல்விக்கோட்ட அதிபர் சங்கம் ஏற்பாடுசெய்துள்ள பிரியாவிடை வைபவம் இன்று காலை 10.00 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (3-5)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.27

யூனியன் கல்லூரி இன்ரக்ட் கழகம் ஏற்பாடுசெய்துள்ள க.பொ.த சாதாரணதர பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகும் என கழகத்தின் செயலர் இ.இராஜீந்திரன் அறிவித்துள்ளார். (3-8)

## ஆசிரியருக்கான செயலமர்வு

பருத்தித்துறை, நவ.27

1999 இல் தரம் ஒன்று வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தச் செயலமர்வு இம்மாதம் 30ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 4ஆம் திகதி வரை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 2000ஆம் ஆண்டில் தரம்2 வகுப்பில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களைத் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.கமலானந்தன் அறிவித்துள்ளார்.

(இ-118)

* * *

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் 2000ஆம் ஆண்டில் தரம் 7, தரம்10 வகுப்புகளில் கற்பிக்க இருக்கும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்துக்கான செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்த ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் இம்மாதம் 29ஆம் திகதி காலை 8.30மணி முதல் 4.30மணி வரை நடைபெறும்.

(இ-118)

* * *

பருத்தித்துறை, நவ.27

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 2000ஆம் ஆண்டில் தரம்7, தரம்10 வகுப்புக்களில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளது.

புதிய பாடத்திட்டம் தொடர்பான செயலமர்வு இன்று வடஇந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை, மருதங்கேணிக் கல்விக்கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் -

டிசெம்பர் 4ஆம் திகதி கரவெட்டி பொன்னம்பல வித்தியாலயத்தில் கரவெட்டி கல்விக்கோட்ட ஆசிரியர்களுக்கும் செயலமர்வுநடைபெறும் என வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

(இ-118)

**JCI** *Computer Informatics*

**விஷேட கணனிப் பயிற்சி**

சுவிற்சர்லாந்தில் பல இளம் கணனி ஆசிரியர்களை உருவாக்கிய JCI நிறுவனம் இதுவரை யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பல புதிய கணனிப் பாடத்திட்டங்களுடன் தனது சேவையை தமிழ் மொழி மூலம் வளங்குவதற்கு யாழ் மண்ணிற்கும் விஸ்தரித்துள்ளனர்.

சான்றிதழ்களை மட்டுமே அடுக்கி வைத்துக்கொண்டு அடுத்து என்ன செய்வது ?
சான்றிதழ்களை மட்டுமல்ல . கணனி மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களிலோ அல்லது சுயமாகவோ
கணனி வேலைவாய்ப்பினை உருவாக்கிட உங்கள் கணனி நண்பன் jci

எமது பாடநெறிகள்

**Computer Hardware Accembling and Networking** (கணனிகளை உருவாக்குதல்)

- XT,AT, Pentium I,II,III, ஆகிய எந்த வகையான கணனியையும் உருவாக்குதல் (Accembiling)
- பழையரக கணனிகளை நவீனமுறைக்கேற்றவாறு மேம்படுத்துதல். (Upgrading)
- கணனிகளில் ஏற்படும் முக்கிய பிரச்சனைகளை கண்டறிந்து அவற்றினை திருத்தியமைத்தல். (Trouble Shooting)
- முக்கிய operating System ஊடாக கணனியின் மேலதிக உதிரிப்பாகங்களை இணைத்து இயங்க வைத்தல்
- புதிய பழையரக கணனிகளை இனம் காணுதல் உட்பட மேலும் பல முக்கிய இரகசியங்களை உள்ளடக்கிய நவீன பாடத்திட்டம்

**பயிற்சி முடிவில்**

தொழில் நிறுவனத்திற்காக அல்லது உங்கள் இல்லத் தேவைக்கான கணனிகளை பலவருடகால உத்தரவாதத்துடன் நீங்களாகவே. உருவாக்கிக்கொள்ளலாம்.
குறைந்தளவு முதலீட்டை பயன்படுத்தி புதிய வேலை வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
கணனி திருத்த வேலைகளுக்காக, இழக்கப்படும் பெரும் தொகைப்பணத்தினை சேகரிப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்.

**விசேட சலுகைகள்**

ஒவ்வொரு மாணவருக்கும் கணனிய உருவாக்குவதற்கு தனியான கணனிகள் வழங்கப்படும் .
இப்பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்களிற்கு MS Office Professional version (7-8மாதங்கள் ) 3500 /- கட்டணத்தோடு தொடரப்படும்.மாணவர்களின் வசதிக்கேற்றவாறு நேர அட்டவணைகள் தயார் செய்யப்படும்

**Proffesional Version In Ms Office**

MS Word MS Excel MS Access MS Powerpoint
MS Schedule MS Project MS Binder காலம்.7 – 8 மாதங்கள் கட்டணம் 4800/-

**Internet & e-Mail**

பரந்த கணனி வலையமைப்பான Internet ல் தனியார் அல்லது நிறுவனங்களிற்கான விளம்பரங்களை பிரசுரிப்பதற்கும் Dial up Network ஊடாக உலகில் எப்பகுதியிலுள்ள கணனியோடும் தொடர்புகளை ஏற்படுத்திட விஷேட பயிற்சிகள்.

குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படவிருப்பதாலும் ,பயிற்சிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாலும் ஆர்வமுள்ள மாணவர்கள் தாமதியாது எமது அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

- **109, Kandy Road,Chundikuli** யாழ்மாவட்ட செயலகத்திற்கு(கச்சேரி) அருகில்.
- சங்கத்தானை சாவகச்சேரி- இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்.

Tel 021-2472 Fax 021-2472
021-3078 Internet http:www//jci.ch

*JCI Registered as a Computer Training ... Srilanka.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்

நடத்தும்

# நாட்டுக்கூத்துப் போட்டி விழா 1999

## நிகழ்வு - 6

பிரதம விருந்தினர்:- திரு ஆ.சிவசாமி
(பிரதேச செயலர், பருத்தித்துறை)
சிறப்பு விருந்தினர்:- திரு V. P. வேலாயுதபிள்ளை
(உதவிஅரசாங்கஅதிபர், மருதங்கேணி)
இடம்:- கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை, நல்லூர்.
காலம்:- 28-11-99 காலை 9.00 மணி தொடக்கம்

### போட்டி நிகழ்வுகள்

1) "மன உறுதி" – பாசையூர், செ. இராஜேஸ்வரன் குழுவினர்.
2) "அதியரசன்" – தம்பாட்டி சாந்தினி நாடகமன்றம்.
3) "வீரக்குமரன்" – தாமோதரம்பிள்ளை நாடகமன்றம், பருத்தித்துறை.
4) "ஒரு சிரசு பரிசாகிறது" – சென்பீற்றர்ஸ கலைமன்றம, பளை.

* அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் *
பிரவேசம் இலவசம்.

(71279) பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 22 - 03 - 1941



உதிர்வு 26 - 11 - 1991

அமரர்
### செல்லத்துரை கனகசபாபதி
(முன்னாள் உ.அ.அதிபர் - ஒட்டுசுட்டான்)

திதி:- 27-11-99

ஆண்டுகள் எட்டும் சென்றதே – ஆனால்
ஆறிவிடுமோ உங்கள் நினைவலைகள்
பாசத்தின் உறைவிடமான, பண்பின் சிகரமான
நின் பாதம் திருவடி சேர்ந்தனையோ
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, மாமி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(71292)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### வேலாயுதம் சிவசுப்பிரமணியதேவா
குரும்பகட்டி, புலோலி.
(தலைவர், புலோலி பல நோ. கூ. சங்கம்)

தன்னலம் கருதாது கூட்டுறவுச் சேவைக்கு அரும் பெரும் சேவைகள் ஆற்றிய எமதுசங்கத் தலைவரின் ஆத்மா சாந்தி யடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் அன்னாரின் நினைவலைகள் எம்மை விட்ட கலாது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.
புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.


புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(C/9991)

அப்பா! என்ன மழை!
என்ன குளிர்....!
இருக்கவே இருக்கின்றது

பென்கபே கோப்பி


சிறந்த பிரேசில் ரகம்!
குறிப்பிட்டளவு மட்டுமே கையிருப்பில் உள்ளது.



அருண்ஸ்
ஸ்போட்ஸ் ஸ்பொட
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(C/9994)

## விண்ணக வாழ்வின் 9 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 22 - 03 - 1923



விண்ணில் 27 - 11 - 1990

### அமரர் பொன் ஐயம்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர், வலந்தலை, காரைநகர்)

'நானே உயிர்த்தெழலும் ஜீவனுமாயிருக்கிறேன்
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'.
(யோவான் 11-25)

என்றும் மாறா நினைவுடன்
குடும்பத்தினர்

12, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(71293)

## ஓராண்டு நினைவஞ்சலி

முகிழ்ப்பு 01 - 04 - 1915



அவிழ்ப்பு 07 - 12 - 1998

அமரர்
### வைரவநாதர் சரவணமுத்து

அன்பின் திருவுருவாய்
ஆதரவின் திருக்கரமாய்
மன்னு புகழ் மாண்பின்
உறைவிடமாய்
என்றென்றும் எங்கள் இதயத்தில்
நிலை பேறு கொண்ட
நெடு வள்ளல்
தங்கள் நினைவுகளை
நெஞ்சார எண்ணுகின்றோம்
இணுவைப் பெரும்பதியில்
உதித்துக் குலதெய்வம்
அரசோலை விநாயகர் அடிதொழுது
கனடாப் பெரும்பதியில்
இறை புகுந்த பெருவள்ளல்
நின்புகழ் வாழி!

குடும்பத்தினர்.

இணுவில் கிழக்கு.

(71294)

## 3 குழந்தைகள் உயிரிழப்பு

மட்டக்களப்பு,நவ.27

சினிமாப்படம் பார்க்கும் ஆசையி னால் தனது மூன்று குழந்தைகளை ஒரேநேரத்தில் தாய் ஒருவர் இழந் துள்ள சம்பவம் மட்டக்களப்பு களுதா வளைப் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்றது.

இரவு நேரத்தில் குழந்தைகள் மூவரையும் நித்திரையாக்கி குடிசை யில் குப்பிவிளக்கினை ஏற்றிவிட்டு பக்கத்து வீட்டுக்கு தாயார் படம் பார்க் கச் சென்றுவிட்டார்.

அந்தக் குப்பி விளக்கு சரிந்து விழுந்து குடிசையில் தூங்கிக்கொண் டிருந்த மூன்று குழந்தைகளும் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த நெஞ்சையுருக்கும் சம்பவத் தினால் களுதாவளைக் கிராமம் முழு வதும் சோகத்தில் மூழ்கியுள்ளது. (இ-5-21)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.27

தூரிகை நுண்கலை நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்திரக்கலை பாடத் துக்கு தோற்றவுள்ள மாணவர்களுக் கான வழிகாட்டல் கருத்தரங்கும், சித் திரங்களின் கண்காட்சியும் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நெல்லி யடி மத்திய மகாவித்தியாலய வீதி யில் அமைந்துள்ள அந்த நிறுவனத் தில் நடைபெறவுள்ளன.

காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை நடைபெறும் இந்த நிகழ்வில் வடமராட்சியிலுள்ள சித்திர ஆசிரியர்கள் கலந்துகொண்டு கருத் துரை வழங்குவர். (க-8)

## ஞாபகார்த்த பொது அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராசா ஞாபகார்த்த பொது அறி வுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடி விக் னேஸ்வரா வித்தியாலயத்தில் நடை பெறும்.

கைதடிக் கல்விக்கழகம் அந்தப் பிரதேச மாணவர்களுக்கு இந்த போட் டியை ஏற்பாடுசெய்துள்ளது. (க-3)

## நினைவு விழா

யாழ்ப்பாணம்,நவ.27

சர்வதேச இந்து குருமார் ஒன்றி யம் நடத்தும் முகாந்திரம் பிரம்மஸ்ரீ தி.சதாசிவஐயரின் 50ஆவது ஆண்டு நினைவுவிழா இன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சதாசிவ ஐயரின் ஞாபகார்த் தமாக மூன்று சிவாச்சாரியார்கள் சிறப் புப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்ப டவுள்ளனர். (க)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் தொழிற்சங்கம் ஏற்பாடுசெய்துள்ள யாழ்.மாவட்ட உபதபால் அதிபர்களுக்கான கருத் தரங்கு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறும்என அறிவிக்கப்பட்டுள் ளது.

இக்கருத்தரங்கு நாளை ஞாயிற் றுக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதும் தவிர்க்க முடி யாத காரணத்தால் கருத்தரங்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-8-114)

## இலவச கண்பரிசோதனை

யாழ்ப்பாணம்,நவ.27

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழக மும் சுதுமலை யுவசக்தி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனையும் பொது மருத்துவ முகாமும் நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 8.00 மணிக்கு சுதுமலை அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்த முகாமில் கண்பரிசோதனை மற்றும் நீரிழிவு, இரத்த அழுத்தம், வாய்ப்புற்று நோய் போன்ற மருத் துவப் பரிசோதனைகள் இடம்பெறும். (ஐ-க)

## ஐஸ்பழம் அழிப்பு

தென்மராட்சி,நவ.27

சுகாதார நடைமுறையைப் பேணா மல் விற்பனை செய்யப்பட்ட பெரும ளவு ஐஸ்பழம் பறிமுதல் செய்யப் பட்டு அழிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த வாரம் மிருசு விலில் இடம்பெற்றது.

வாகனத்தில் கொண்டுவரப்பட்ட ஐஸ்கிறீம், ஐஸ்பழம் ஆகியவை சுகா தாரம் பேணப்படாத பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்த கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரி சோதகர் க.தேய்வேந்திரன் ஐஸ்பழங் களைப் பறிமுதல் செய்தார். பின்னர் அவை அவ்விடத்திலேயே அழிக்கப் பட்டன. (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உதயன்' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்:
# பரபரப்பான இறுதி ஆட்டம் நாளை

யாழ்ப்பாணம்,நவ.27

'உதயன்' வெற்றிக்கிண்ணத்துக்காக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கும் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிஆட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை பிற்பகல் 3மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.



தேவரையாளி இந்துக்கல்லூரி அணி.



ஹாட்லிக்கல்லூரி அணி.

வடமராட்சி கல்விவலயத்தைச் சேர்ந்த எட்டுப்பாடசாலைகளின் அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப் போட்டி லீக் முறையில் இடம்பெற்றது. இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய தேவரையாளி இந்துக்கல்லூரியும் ஹாட்லிக்கல்லூரியும் திறமையாக விளையாடி சகல ஆட்டங்களிலும் வென்று நாளைய இறுதி ஆட்டத்தில் மோதவிருக்கின்றன.

இந்த இரு அணிகளும் ஒரே மாதிரியான ஆட்டத்திறன்களையும் நுட்பங்களையும் கொண்டுள்ளதால் எந்த அணி 'உதயன்' வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றப்போகின்றது எனக் கூறமுடியாதுள்ளது என்று மூத்த உதைபந்தாட்ட வீரர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

"கடந்த வருடம் பாடசாலைகளுக்கிடையில் சுற்றுப்போட்டியை ஆரம்பித்தபோது, தரமான வீரர்களை கழக அணிக்கு தேர்ந்தெடுக்க திட்டமிடப்பட்டது. இந்தத் திட்டம் 75சதவீதம் வெற்றியளித்துள்ளது" என்று பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் சிரேஷ்ட பயிற்றுநர் ஒருவர் தெரிவித்தார். பலம்வாய்ந்த இரு அணிகள் மோதும் நாளைய ஆட்டத்தில் எந்த அணி வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றப்போகின்றது என்பது நாளை மாலை தெரிந்துவிடும். *

# துர்க்காதுரந்தரியின் பவளவிழா வெளிநாடுகளிலும் கொண்டாடப்படும்

யாழ்ப்பாணம்,நவ.27

துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவளவிழாவினை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பலநாடுகளிலும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

லண்டனில் உள்ள சைவ முன்னேற்றச் சங்கம், சைவத்திருக்கோயில்களின் ஒன்றியம் ஆகியன அன்னை துர்க்காதுரந்தரியின் பிறந்ததினமான ஜனவரி 7ஆம் திகதியும் பின்னர் 9ஆம் திகதியும் இந்த விழாவினைக் கொண்டாடவுள்ளன.

லண்டன் ஈஸ்ற்காம் சைவமுன்னேற்றச்சங்க மண்டபத்திலும் லூசியன் சிவன்கோயிலிலும் பவளவிழா நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பவளவிழாவினை ஒட்டி லண்டனிலிருந்து வெளிவரும் 'புதினம்' பத்திரிகை சிறப்புமலர் ஒன்றினை வெளியிட உள்ளது.

இதேவேளை -

கனடா சைவசித்தாந்த மன்றம் ஜனவரி 7ஆம் திகதி அன்னையின் பவளவிழாவினை சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகளைச் செய்துவருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கனடாவில் வெளியாகும் 'அன்புநெறி' என்ற ஆத்மீக சஞ்சிகையும் அன்னையின் பவளவிழாவை முன்னிட்டு சிறப்புமலர் வெளியிடத் தீர்மானித்துள்ளது.

கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் தி.விசுவலிங்கம், கவிஞர் கந்தவனம் ஆகியோர் விழாவினை ஏற்பாடுசெய்துள்ளனர்.

விழாவில் உரை அரங்கு, கூட்டு வழிபாடு, கலைநிகழ்ச்சிகள் போன்றவையும் நடைபெறவுள்ளன. (ஐ-5)

# பண்டிதமணி நினைவாக அடுத்த மாதம் முத்திரை வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.27

இலக்கியகலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்திரை ஒன்று அடுத்த மாதம் 4ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

முத்திரை வெளியிடப்படுவதுடன் அங்கு நினைவுப்பேருரை, விசேட மலர் வெளியீடு ஆகியனவும் இடம் பெறும்.

பண்டிதமணியின் நூற்றாண்டு விழாவை ஒட்டி நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, மரபுக்கவிதை போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பதக்கம் சூட்டும் நிகழ்வும் அங்கு இடம்பெறும். (ஐ-3)

# கோப்பாயில் மீட்ட மண்டை ஓடுகள் கொழும்புக்கு!

கோப்பாய் மத்தியில் வீடு ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள இரு மண்டையோடுகளையும் இரசாயனப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பக் கோப்பாய் பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ். பதில் நீதிவான் க.கேசவன் கோப்பாய் பொலீஸ் பொறுப்பதிகாரி எஸ்.ரணிகசேகர ஆகியோர் அந்த இடத்துக்குச் சென்று மண்டை ஓடுகளை மீட்டுள்ளனர்.

அந்தப்பகுதிக்கு பொதுமக்களைச் செல்லவேண்டாம் என்று பொலீஸார் கோரியுள்ளனர். அந்தப்பகுதியில் மேலும் எலும்புகள், மண்டைஓடுகள் உள்ளனவா என்பது தொடர்பாக விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ-3-180)

# மடுப்பிரதேசத்தில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடவில்லை

## ஜயலத் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, நவ.27

விடுதலைப்புலிகள் மடுப் பிரதேசத்தில் ஒருபோதும் ஆயுதங்களுடன் நடமாடவில்லை. அவர்கள் மடுவின் புனிதத்தன்மையை மதித்து நடந்துள்ளார்கள் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா நேற்று முன்தினம் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

அப்பத்திரிகைக் குறிப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசபடைகள் மடு மாதாவின் புனிதத் தன்மையை மதிக்கவில்லை. அவர்கள் மடுவில் அயுதங்களுடன் நடமாடினார்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் மடுவில் உணவு இன்றி கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்பிவைக்கவேண்டியது அரசின் கடமையாகும்.


இந்த மக்களுக்கு உணவு அனுப்ப முடியாதுவிட்டால் அதனை அரசு வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும் - என்றார். (ஐ-5)

## மிதிவெடியில் சிக்கிய பசுமாடு

கோப்பாய்,நவ.27

பொம்மைவெளிப் பகுதியில கடந்த புதன்கிழமை பசுமாடு மிதிவெடியில் சிக்கி காலை இழந்துள்ளது. இதற்கு முன் கடந்த 16 ஆம் திகதியும்இதே பகுதியில் ஒரு பசுமாடு மிதிவெடியில் சிக்கி முன்னங்காலை இழந்தது குறிப்பிடத்தக்கது.

## இவர் புகழ் வாழ்க!



செந்தமிழர் வாழ்வில்
விடுதலை கிடைக்கவும்
சொந்தம் துறந்தும்
சுகங்கள் துறந்தும்
அந்தமில் தியாகம்
அதனை ஆற்றி
ஆருயிர் நல்கிய
தீரர்தம் செயல்கள்
என்றும் போற்றற்
குரியன அதனால்
வாழ்த்துவோம் என்றும்
வழுத்துவோம் அவரை!

அ.மணிவண்ணன்.

# அதிரடி அரங்கு

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 4,500 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. பெரும் பிரயத்தனங்களின் பின்னரே அதற்கான உலக வங்கியின் அனுமதி பெறப்பட்டது. இந்தத் தகுதிகாண் ஆசிரியர் பதவிகளை நிரப்புவதற்காக மத்திய அரசின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக்குழு விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.

விண்ணப்பம் சம்பந்தமான விவரங்கள் கொழும்புப் பத்திரிகையில் இந்த மாதம் பதினொராம் திகதி அன்றே வெளியிடப்பட்டன. ஆனால் முடிவு திகதியோ இம்மாதம் இருபத்திமூன்றாகும். யாழ்ப்பாணம் போன்ற தபால்சேவை தாமதமாக நடைபெறும் பகுதியிலும், தொடர்புகள் சீராக இல்லாத கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இருந்து விண்ணப்பங்களை அனுப்புவதற்கு இந்தக் கால அவகாசம் போதாது!

ஆகையால் முடிவு திகதியை நீடிக்கவேண்டும் என்று ஜி.சீ.ஈ. உயர்தரம் சித்தியடைந்துவிட்டு வேலையின்றிக் கஷ்டப்படுவோர் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதனைக் கொழும்புத் தலைமையகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை. குறுகியகால இடைவெளி என்பதால் தாம் விண்ணப்பிக்க முடியாமற் போனதாகப் பலர் கவலை தெரிவிக்கின்றார்கள்.

அது ஒருபுறமிருக்க, இவ்வருடம் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்கு தோற்றியவர்கள் தமக்கும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க வசதி செய்யக்கூடாதா என்று கேட்கிறார்கள். தமது பரீட்சைப் பெறுபேறுகள் அனேகமாக டிசெம்பர் மாதத்தில் வெளிவரக்கூடும் என்று எதிர்பார்ப்பதால் அதன் பின்னரும் விண்ணப்பங்களை ஏற்க வகை செய்திருக்கலாமே என்பது அவர்களின் அங்கலாய்ப்பு. இதன் பின்னர் இவ்வாறுஒரு சந்தர்ப்பம் கிடைக்காது என்பது அவர்களின் வாதம்.

இந்த அங்கலாய்ப்புகளின் மத்தியில் சில சாராருக்கு எதிர்வரும் பதினைந்தாம் திகதி முதல் நியமனம் பெற்றுக் கொடுக்க அரசியல் பிரமுகர்கள் கடுமையாக முயன்று வருவதாகவும் ஒரு தகவல் கிடைத்துள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர் நியமனம் ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்க வேட்பாளருக்கு வாக்கு வாங்குவதற்கான ஒரு வரப்பிரசாதமாக்கப்பட்டுள்ளதாக விடயம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். இத்தகைய குளறுபடிகளால் யார் யார் பாதிக்கப்படுகிறார்கள், நன்மை அடைகிறார்கள் என்பது குறித்து அரசியல்வாதிகளுக்கு என்ன கவலை? வாக்குகள் கிடைத்தால் போதுமே அவர்களுக்கு!

* * *

இயற்கை அனர்த்தங்கள் நேர்ந்தாலும் சரி, போரினால் மக்கள் பாதிக்கப்பட்டாலும் சரி அவர்களுக்கு இடர்க்கால அவசர உதவிகளை அந்தப் பிரதேசத்தில் சிவில் நிர்வாகம் என்று ஒன்றிருந்தால் அதுவே செய்வது வழக்கம். சிவில் நிர்வாகம் குன்றிப்போனால் அல்லது அதனால் உதவ இயலாது என்று கண்டால் மட்டுமே படையினரின் சேவை நாடப்படுவது வழக்கம். வெள்ளம், புயல் போன்ற இயற்கை அனர்த்தங்களால் மக்கள் பாதிப்புறும் வேளைகளில் விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் உதவியைச் சிவில் அதிகாரிகள் கோருவது வழக்கம்.

அனர்த்தங்களின் போது மக்களுக்கு உதவும் பணிகளைச் செய்வதற்கு சிவில் நிர்வாக அதிகாரிகளுக்கே முன்னுரிமை உண்டு. இது உலக வழக்கம். ஆனால் இலங்கையில் இது விடயத்தில் நடைமுறைகள் பலவும் மாறுவது உண்டு.

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் வவுனியா நகரையும் அதனை அண்டிய பகுதிகளிலும் இருந்து குடிமக்கள் தூர இடங்களுக்கு இடம்பெயர்ந்தார்கள். அவர்களுக்கு உணவுப்பொருள்களை நிவாரணமாக உடனடியாக வழங்க ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை. இதனை அறிந்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் இடம்பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குமாறு அரசாங்க அதிபருக்கு இரண்டாம் நாள் உத்தரவிட்டார். ஆனால் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்ற வேளை படை அதிகாரிகள் நிவாரணம் வழங்க வேண்டாம் என்று தடுத்துவிட்டனர். அவ்வாறு வழங்காதிருந்தாலே மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருவர் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருதியிருக்கக்கூடும்.

வவுனியா மக்கள் இவ்வாறு பட்டினி போடப்பட்டது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிக் தூதுக்குழு கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தது. அனர்த்தங்களின் போது மக்களின் நலன் காக்கப்படுவதற்கு சிவில் அதிகாரிகள் தனித்து முடிவு எடுக்க முடியாது. படை அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் அனுமதியையும் பெறவேண்டும் என்ற புதிய நடைமுறை அமுலில் இருப்பது அப்போது தான் தெரிய வந்தது.

நிவாரணம் போன்ற நலன்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்குப் பாதுகாப்பு அதிகாரியின் அனுமதியும் தேவையே என்று ஜனாதிபதி சந்திரிகா, தூதுக்குழுவிடம் தெரிவித்தாராம். தூதுக்குழுவினர் திருப்பி எதுவும் கூறாமல் தலையில் கையை வைத்துக் கொண்டு அலரிமாளிகைக்குப் போன வழி பார்த்துத் திருப்பி வந்து விட்டனராம், தமிழர்கள் என்றால் சர்வதேச நடைமுறைகளும் இங்கு மாறும்!

* * *

வலிகாமம் கல்வி வலயத்தினால் அண்மையில் 10ஆம் தரத்துக்கெனப் பொதுப்பரீட்சைகள் நடத்தப்பட்டன. சைவசமய பாடத்துக்கு 3 மணிநேர வினாப்பத்திரத்துக்கு மாணவர்கள் விடை எழுதக் கேட்கப்பட்டனர்.

வினாப்பத்திரம் கணனியில் தட்டச்சு செய்யப்பட்டு றோணியோ செய்யப்பட்டுத் தெளிவாக இருந்தது. நான்கு பக்கங்களில் முதலாம் பகுதியில் நாற்பது கேள்விகளும் இரண்டாம் பகுதியில் ஏழு கேள்விகளும்அடங்கி இருந்தன. அந்த வினாப்பத்திரத்தில் பிழைகள் பல காணப்படுகின்றன.

இதனால் மாணவர்கள் பலர் கேள்விகளுக்கு விடைகள் தெரிந்தபோதிலும் சரியான விடைகளைத் தெரிவு செய்ய முடியாமல் மயக்கமுற, குழப்பமடைய நேர்ந்ததாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கேள்விப் பத்திரத்தை அச்சிடுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்பார்வை செய்து தவறுகளைத் திருத்தாமல் விட்டது ஏன் என்றும் பெற்றோர்கள் கேட்கிறார்கள்.

பரீட்சை மேற்பார்வையாளர்களாவது வினாப்பத்திரங்களை விநியோகிப்பதற்கு முன்னர் சரி பார்த்திருக்கலாமே என்பது மற்றொரு சாராரின் கேள்வி.

சமயபாட ஆசிரியர்கள் சிலரிடம் இது குறித்துக் கேட்டபோது, இது பெரிய இடத்து விவகாரம் என்று கையை விரிக்கிறார்கள்!

மேல்திகாரிகளே இவ்வாறு கவனமின்றிப் பிழை விடலாமா? குருக்கள் செய்தால் குற்றமில்லை என்று நினைத்து விட்டார்களா, என்ன?

மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக்காரன் தன் புண்ணைக் காட்டுவது போல

# சந்திரிகா யுத்தத்தை காட்டி வாக்கு யாசகம் கேட்கின்றார்

## ரணில் கிண்டல்



கொழும்பு, நவ.27

"பிச்சைக்காரன் தனது உடலில் ஏற்பட்ட காயத்தைக்காட்டி தொடர்ந்தும் பிச்சை எடுப்பது போன்றே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் யுத்தத்தைக் காரணம்காட்டியே காலத்தை கடத்துகின்றார்; வாக்குக் கேட்கின்றார்."

- இவ்வாறு எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் தேர்தல் பிரசார பணிகளில் ஈடுபட நான் தயாராகவுள்ளேன். ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்கு செல்லமுடியாத நிலை உள்ளது. நான் எந்த நிமிடமும் அப்பகுதிக்கு செல்ல விருப்பமாகவே உள்ளேன்.

வடக்கு - கிழக்கில் ஜனாதிபதித் தேர்தல் நீதியாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர் மூலமே உறுதிப் படுத்தமுடியும்.

வடக்கு - கிழக்கில் தேர்தல் மோசடிகள் நடைபெறும் என்பதாலேயே அப்பகுதிக்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை நியமிக்குமாறு எமது கட்சி தேர்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளது - என்றார்.

(உ-7)

அகதிகளைப் பார்வையிட

# நானாட்டானுக்குச் செல்வதற்கு முடியாத நிலையில் அதிகாரிகள்

மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நானாட்டான் பகுதியில் தங்கியுள்ள அகதிகளைப் பார்வையிடுவதற்காக மன்னார் செயலக அதிகாரிகள் அங்குசெல்ல முயன்றபோதும் அந்தமுயற்சி பலனளிக்காமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்டைஅடம்பனை அண்டிய பிரதேசத்தில் வாழும் மக்களே நானாட்டானுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் -

அந்த அகதிகளுக்கு நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்காக மன்னார் செயலக் அதிகாரிகள் அங்கு செல்லவிருந்தனர் என்றும் -

அதற்கு அனுமதி கிடைக்காததால் அவர்களால் அங்கு செல்ல முடியவில்லை என்றும் - கூறப்பட்டது.

அதே நேரம் -

வங்காலையில் இருந்து இடம் பெயர்ந்த 709 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 790 பேரும் -

மன்னார் பிரதேசசெயலர் பிரிவிற்கு உள்ளேயே இடம்பெயர்ந்துள்ள 552 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 268 பேரும் -

நகரப் பகுதியில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்க செயலக அதிகாரிகள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# மடு அகதிகள் பராமரிப்பு மன்னார் செயலகத்திடம்!

வவுனியா, நவ.27

மடுத்தேவாலயத்தில் தங்கியுள்ள ஒன்பதாயிரம் அகதிகளின் பராமரிப்பை மன்னார் செயலகம் நேற்று பொறுப்பேற்றது.

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து மடுத்தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த அகதிகளை தேவாலய பங்குத்தந்தை கடந்த சில தினங்களாக பராமரித்து வந்தார்.

மன்னார் செயலக அதிகாரிகள் நேற்று அங்கு சென்று அகதிகளின் விவரங்களை சேகரித்து அவர்களுக்கு உணவு மற்றும் வசதிகளை வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

மடுத்தேவாலயத்தை நோக்கி மேலும் அகதிகள் வருவதை அடுத்து, தட்சனாமருதமடுவிலும் அகதி முகாம் ஒன்றை ஆரம்பிக்க செயலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (உ-3)

### குடாநாட்டில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கடிதங்கள் உரியவர்களுக்கு விநியோகிப்பதற்காக நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தக் கடிதங்களை உரியவர்கள் இன்று காலை முதல் தமது அலுவலகத்தில் பெறலாம் என்று ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

96/97ஆம் ஆண்டுகளில் குடாநாட்டில் காணாமற்போனோர் பற்றி தேடிப் பார்ப்பதற்கு நியமிக்கப்பட்ட குழு காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்தியுள்ளது.

விசாரணையின் பின்னர் காணாமற்போனவர் தொடர்பாக முன்வைக்கப்பட்ட சாட்சிகளின் பிரகாரம் பிரஸ்தாப நபரை தேடிக்கொள்ள முடியாதுள்ளமையை கவலையுடன் அறிவிக்கிறேன் - என்றுள்ளது. (உ-3-9)

### சர்வதேசக் கண்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேநேரம் - இங்கு தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுப்ப ஐரோப்பிய சமூக அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பில் 15க்கும் மேற்பட்ட நாடுகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-7)

### தேர்தல் பிரசார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையை விடுத்தது.

தமது கட்சி வேட்பாளருக்காக யாழ்ப்பாணத்தில் பிரசாரங்களை நடத்தத் தங்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அந்தக்கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறல கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் செல்வதற்கும், அங்கு கூட்டங்களை நடத்தினால் அவற்றுக்கும் பாதுகாப்புத் தர முடியும் என்றும்-

தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக எல்லா இடங்களுக்கும் செல்வதற்குப் பாதுகாப்புத் தரமுடியாது என்றும் -

தேர்தல் ஆணையாளரும் பொலீஸ்மா அதிபரும் தெரிவித்தனர் என்று அறியவந்தது. (உ-3-7)

### கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ். ஹற்றன் நஷனல் வங்கி பாடசாலைகள், கழகங்களுக்கு இடையில் தனித்தனியே நடத்திவரும் - ஹற்றன் நஷனல் வங்கி வெற்றிக்கிண்ணத்துக்கான - கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிஆட்டம் இன்று யாழ். மத்தியகல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும். பிரதமவிருந்தினராக யாழ். மத்தியகல்லூரி அதிபர் கே.இராசதுரை கலந்துகொள்வார்.

இறுதியாட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பிற்பகல் 3.15 மணி - யாழ். பரியோவான் கல்லூரி எதிர் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.

* மாலை 4.30 மணி - யாழ். பல்கலைக்கழக வி.க. அணி எதிர் யாழ். சென்றலைட்ஸ் வி.க.அணி. (உ-8)

### கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.27

திருமறைக்கலாமன்றம் புத்தாயிரமாண்டு புலர்வை முன்னிட்டு நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குருநகர் சனசமூகநிலைய மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* காலை 10.00 மணி - ஈச்சமோட்டை அணி எதிர் ஜெட்லைனர்ஸ் அணி.

* பிற்பகல் 3.00 மணி - பாடும்மீன் அணி எதிர் வள்ளுவர் அணி.

* பிற்பகல் 4.00 மணி - வள்ளுவர் 'பி' அணி எதிர் பாரதி அணி. (-3)

### அடுத்த மாதம் நேரத்துடன் சம்பளம்

கொழும்பு,நவ.27

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களுக்கான டிசெம்பர் மாதச் சம்பளம் முன்கூட்டியே அடுத்த மாதம் 17ஆம் திகதி வழங்கப்படும் என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (உ-7)

### சாவகச்சேரியில் நெல் களஞ்சியம்

யாழ்ப்பாணம்,நவ.27

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் 6 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நெல் களஞ்சியம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இதற்கான நிதி கமநல சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் -

எதிர்வரும் ஜனவரி முற்பகுதியில் களஞ்சியம் நிறுவும் வேலைகள் ஆரம்பமாகும் என்றும் -

கமநல சேவைத்திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லில் ஒருபகுதி அடுத்த வருட விதைத் தேவைக்காக விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு இந்தக் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

**எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்**

* பிரபு, மீனா நடித்த மனம்விரும்புதே உன்னை
* முரளி, மீனா நடித்த வாட்டாகுடி இரணியன்
* முரளி, ரோஜா நடித்த ஊட்டி

இப்படத்தின் பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்.

சுப்பஸோ வீடியோ,
149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(10003)

**வீடியோ CD வெளியீடு**

* முரளி, மீனா நடித்த
  * வாட்டாகுடி இரணியன்
* பாண்டியராஜனின்
  * சுந்தரி நீயும் சுந்தரன் நானும்

பிரதிகள் உடன் பெறலாம்.

விஷ்ணு வீடியோ,
K.K.S. Rd,
கோண்டாவில். (71316)

# இரணைதீவு அருகே 4 இந்தியர்கள் கைது!

## மருந்துகளுடன் வந்தவர்களாம்

கொழும்பு,நவ.27

தமிழகத்தில் இருந்து மருந்துப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இலங்கை நோக்கி வந்த இழுவைப் படகு ஒன்றையும் அதில் பயணம் செய்த இந்தியர் நால்வரையும் தாம் கைது செய்துள்ளதாக ஸ்ரீலங்கா கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இரணைதீவுக் கடற்பரப்பில் தாம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயமே இந்த இழுவைப்படகு கைப்பற்றப்பட்டதாகவும் -

படகில் இருந்து தொடர்புசாதனக் கருவிகள், ஒட்சிசன் சிலிண்டர்கள், சூரிய மின்கலம் என்பன கைப்பற்றப்பட்டன எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (-7)

# நுகேகொடை, கல்கிசையில் ஆறு குண்டுகளும் மீட்பு!

கொழும்பு மாவட்டத்தில் உள்ள மின்மாற்றிகளைத் தகர்க்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் குண்டுகளைத் தாங்கள் நேற்றுக் கைப்பற்றியுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

மீரிகான பொலீஸ் பிரிவில் நுகேகொடையில் ஐந்து குண்டுகளும் -

தெகிவளைப் பொலீஸ் பிரிவில் கல்கிசைப்பகுதியில் ஒரு குண்டும் -

கைப்பற்றப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பி.வி.சி பிளாஸ்ரிக் பைப்புக்குள் வைக்கப்பட்ட நிலையில் அந்தக் குண்டுகள் மீட்கப்பட்டன என்றும் -

நேரம் கணித்து வெடிக்க வைக்கப்படும் ரகத்தை இவை ஒத்திருந்தன என்றும் - பொலீஸார் மேலும் கூறினர்.

# சந்திரிகாவை ஆதரிப்பதற்கு மலையக முன்னணி நிபந்தனை

கொழும்பு,நவ.27

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படும் பட்சத்திலேயே ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவை ஆதரிப்போம் என மலையக மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

நுவரெலியாவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதுவரை பங்குபற்றிய இரண்டு தேர்தல் பிரசார கூட்டங்களிலும் இந்தக் கட்சியின் தலைவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா அகதி முகாம்களில் தொற்று நோய் பரவுகின்றது

வவுனியாவில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களில் வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவுவதாகக் கூறப்படுகின்றது.

பூந்தோட்டம்,வேப்பங்குளம் ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களிலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

பூந்தோட்டம் முகாமில் 2ஆம் யூனிட்டில் 2 வயதுக் குழந்தை ஒன்று வயிற்றோட்டம் காரணமாக நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

தொடரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள சுகாதாரச் சீர்கேடுகளே நோய்கள் பரவக் காரணம் எனச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

### ஓய்வூதிய அதிகரிப்பு

குறைந்த ஓய்வூதியம் பெற்றுவரும் சகல ஓய்வூதியர்களதும் மாதாந்த ஓய்வூதியத் தொகையை 400 ரூபாவால் அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ள இந்தத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் நாலாயிரம் ரூபாவுக்குக் கீழ் ஓய்வூதியத்தைப் பெறுவோர் மேலதிகமாக 400 ரூபாவைப் பெற்றுக்கொள்வர் என பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (உ-7)

### பஸ் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணத்தில் இருந்து சுருவில் ஊடாக ஊர்காவற்றுறைக்கு நடத்தப்பட்டுவந்த 780ஆம் இலக்க பஸ்சேவை இன்றுமுதல் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சரவணைச் சந்திக்கும் - புளியங்கூடலுக்கும் இடையிலான வீதிப்பகுதி தற்போது தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக பஸ் போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதே பஸ்சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டமைக்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டது.

**மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்**

INSTITUTE OF INFORMATICS STUDIES — IIS

எதிர்வரும் 'மிலேனியம்' ஆண்டில் எமது மக்களுக்கு கணனிக் கல்வியில் '5000' மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் ஊடாக ஓர் அரிய சந்தர்ப்பத்தினை வழங்கி இருக்கிறோம்.

அனைத்துத் தரப்பினருக்கும் என நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிகள்

சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள்

விண்ணப்ப முடிவுத் திகதி: 14.12.1999

மேலதிக விவரங்களுக்கு:
IIS,100,மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/10002)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியர் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-11-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை

சஞ்சீவி சஞ்சிகை
சஞ்சீவி 27-11-1999

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியான முறையில் ப்ரி சோதித்து விழிகளில் ஒளிகள் ததும்பிட உட்னுக்குடன் கண்ணாடிகளை வழங்கும் ஒரே இடம்.
றெனி மூக்குக் கண்ணாடி அகம்
ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். | பிரதேச செயலகம் முன்பாக கண்டிவீதி, சாவகச்சேரி.

## கருத்துக் கலசம்

மயூரா

### நடுவு நிலைமை

சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்தொருபால் கோடாமை சன்றோர்க் கணி - *திருவள்ளுவர்.*

சமூகத்தில் மதிப்பான, பெருமைக்குரிய நிலைகளில் உள்ளோர் நடுவு நிலைமையைக் கைக்கொள்வதே சிறந்தது என்று சொல்கிறார் வள்ளுவர்.

எந்த ஒரு விவகாரத்திலும் பக்கம் சாய்ந்து போகாமல், நல்லதை நல்லதென்றும் தீயதை ஒவ்வாதது என்றும் சொல்லும் தன்மையும் துணிச்சலும் உடையவனையே மக்கள் உயர்ந்த நிலையில் வைத்துப் பார்ப்பார்கள்.

தமது நன்மைகருதி நல்லதை ஒவ்வாததாகக் காட்டுவதும், தீயதை நன்மை பயக்கும் என்று கூறுவதும் சான்றோருக்கும் பெரியோருக்கும் அழகன்று; அது அழுக்காகும். நீதிமன்றங்கள் போன்ற நீதிவழங்கும் அமைப்புகள் அறிமுகமாவதற்கு முன்னர் அந்தந்தக் கிராமத்தில் வாழ்ந்த பெரியோர்கள், சான்றோர்களே மக்களின் பிணக்குகள் சம்பந்தமாக நீதி வழங்குபவர்களாக விளங்கினார்கள்.

எங்கள் பிரதேசத்தில் அந்த வழக்கு மிகப் பெரிதும் அருகிவிட்டது. தமிழகத்தில் பஞ்சாயத்து எனப்படும் சான்றோர், பெரியோர் அடங்கிய குழுக்கள் செயற்பட்டுவருகின்றன. பஞ்சாயத்துத் தலைவர் என்பவர் ஒழுக்க சீலராகவும், நியாயம் பிறழாதவராகவும் திகழ்வார். அவர் பிணக்குகளைத் தீர்க்கும்போது நடுவுநிலைமையுடன் செயற்படுவார். அதனால் அவரது தீர்ப்பை அந்தக் கிராமத்து மக்கள் தேவவாக்காகக்கொண்டு அதற்கு மதிப்பளித்து நடைமுறைப்படுத்துவர்.

எமது மண்ணில் இப்போது நியாயவாதிகளும், ஒழுக்கம் மிக்கவர்களும் நடுவுநிலைமையாளர்களும் அருகிவிட்டதாலேயே ஊர்ப் பெரியோர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அதன் விளைவாக மக்களிடையே எழும் சிறிய பிணக்குகள் கூட நீதிமன்றங்கள் வரை செல்கின்றன. கிராமங்களில், பெரியோர்கள்,பதவிவகிப்பவர்கள் என்று ஒரு சிலர் இருந்தபோதிலும், அவர்களிடம் மக்கள் நியாயம் கேட்டுச் செல்வது அரிதிலும்அரிது. காரணம் அவர்களின் நடுவு நிலைமையில் உள்ள சந்தேகமே!

பொதுவாகவே எமது சமூகம், எங்கள் முந்திய சந்ததிகள் பேணி வளர்த்த சீலங்களையும் நெறிகளையும் வரன்முறைகளையும் ஏனைய கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் மறந்தும், மறைத்தும் வாழப் பழகுகின்றது. அதனால் ஒரு விவகாரத்தில் நியாயம்காண்பது,நடுவுநிலைமை பேணுவது என்ற நெறிமுறைகள் ஆழக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவருகின்றன!

ஏன், நடுவுநிலைமை பேணுதல் ஒருவரின் மனத்துணிவின்மையையும், எதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் நழுவுவதற்கான தன்மையே என்றும் வாதாடும் போக்கையும் காண முடிகிறது.

தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவுநிலைமை தவறி உண்டாகும் செயலை உடனே கைவிட்டுவிடவேண்டும் என்பது மூத்த சந்ததியின் மாண்பு. தீமை தருவதானாலும் ஒருபக்கம் சாய்ந்தும் சார்ந்தும் செயற்படுவது இப்போதைய போக்கு. இவை இரண்டுக்குமிடையில் நிரம்பவும் வேறுபாடு உண்டு.

நன்மை, தீமை பாராது, நீதி, அநியாயம் நோக்காமல் தமது சுய இலாபங்களையும் வசதிவாய்ப்புகளையும் மட்டுமே மனதிற்கொண்டு சாய்ந்தால் சாயிற பக்கமே சாயும் செம்மறி ஆட்டுக்கூட்டங்களாக எமது சமூகம் மாறி வருகிறது. இது பெரும் கவலை தரும் ஒன்றாகும்.

# இன்பங்களிலே பேரின்பம் ஈத்துவக்கும் இன்பம்!

இன்பங்கள் எத்தனையோ? 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா' என்றார் மகாகவி சுப்ரமணிய பாரதியார். கவிதையால் வரும் இன்பம், ஓவியத்தால் வரும் இன்பம், சிறபத்தால் வரும் இன்பம், காதல் தரும் இன்பம்,மழலை தரும் இன்பம், இயற்கைதரும் இன்பம் என்று கூறிக்கொண்டே போகலாம்.

இவற்றை விட இன்னும் ஓர் இன்பம் இருப்பதாகத் திருவள்ளுவர் கூறுகிறார். அதுதான் ஈத்து - உவக்கும் - இன்பம். ஒருவன் ஒன்றைக் கொடுக்க, பெற்றுக் கொண்டவன் உவப்படைய - அந்த உவப்பைப் பார்த்து அடையும் இன்பம். பசித்தவர்க்கு உணவைக் கொடுக்க, பசித்தவர் உண்டதும் அவரது முகத்தில் மலர்ச்சி ஏற்பட அதைப்பார்க்கும் போது ஏற்படும் இன்பம். இந்த இன்பத்தைக் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய பாரி முதலாகப் பல வள்ளல்கள் அநுபவித்தும் மகிழ்ந்தனர்.

பாரி வள்ளல் பறம்பு நாட்டை ஆட்சி செய்தான். அவன் ஆட்சியில் எல்லோரும் வயிறாற உண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். விலங்குகள், பறவைகள் கூட மகிழ்ச்சியாக வாழ்ந்தன. எல்லா உயிர்க்கும் இரங்கிய பாரிவள்ளல் ஓரறிவுயிராகிய முல்லைக் கொடிக்கும் இரங்கினான்.

### முல்லைக்குத் தேர் ஈந்தஇன்பம்

பாரிவள்ளல் ஒருநாள் தேர்மீது அமர்ந்து சென்றுகொண்டிருந்தான். வீதியில் அவனைக் கண்ட மக்கள் எல்லாம் வயிறார உண்டு மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருந்தார்கள். மான் முதலிய விலங்கினங்கள் எவ்வித துன்பமுமின்றி வாழ்ந்துகொண்டிருந்தன. பறவைகள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்துகொண்டிருந்தன. சிறுவர்கள் மைதானங்களில் மகிழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தனர். இளம் பெண்கள் பறம்பு மலை அருவியில் நீராடியும் பாடியும் மகிழ்ந்திருந்தனர். அக்காட்சிகளை எல்லாம் கண்டு மகிழ்ந்த பாரிக்கு தன் ஆட்சி பற்றி உள்ளத்தே பெருமிதமும் இருந்தது.

**புலவர் ம.பார்வதிநாதசிவம்**

அப்படிப் பெருமிதம் அடைகிறவேளையில் கொளுகொம்பின்றி முல்லைச்செடி ஒன்று நிலத்தில் வாடிக் கிடந்தது. இதனைப் பார்த்த பாரிவள்ளல் தனது ஆட்சியில் எல்லா உயிரும் இன்புற்றிருக்க முல்லைக்கொடி மட்டும் துன்புற்று வாடுவதா? என்று எண்ணினான். தன் ஆட்சியில் ஓர் உயிர் வாடினாற் கூடத் தன் ஆட்சிக்கு இழுக்கு என்று எண்ணிய அவன் தேரைநிறுதினான். தாயுள்ளத்தோடே முல்லைக் கொடியைப் பார்த்தான். தன் கண்ணிற்பட்ட ஓர் உயிரின் துன்பம் அந்தக்கணமே தீர்க்கப்பட வேண்டும் என்று எண்ணினான். ஏவலாளர்கள் வந்து முல்லைக்கொடிக்குப் பந்தலிடும் வரை கூட அந்தக் கொடி வாடக்கூடாது என்று எண்ணினான். கிணற்றில் விழுந்த குழந்தையைக் கண்ட தாய் நீச்சல் தெரிந்தவர்கள் வந்து குழந்தையைக் காப்பாற்றட்டும் என்று நினைப்பாளா? பாரியின் தாயுள்ளத்துக்கு முல்லைக்கொடி குழந்தையாகத் தெரிந்தது. நிலத்திற் கிடந்த குழ்தையை தேர் என்ற மடியில் தூக்கிக் கிடத்தினான். முல்லைக்குக் கொளுகொம்பு கிடைத்தது. முல்லையின் துன்பம் தீர்ந்தது. முல்லைக்குத் தேர் ஈந்து அதனால் ஈத்துவக்கும் இன்பம் பெற்றான் பாரி.

### அதியமானின் ஈத்துவக்கும் இன்பம்

சில செல்வர்கள் இருக்கிறார்கள். ஒரு நாள் போய் ஒருவன் 'பசி' என்று கேட்டால் உணவு கொடுப்பார்கள். மறுநாளும் அதே ஆள் அவர்களிடம்போய் 'பசி' என்று கூறினால் சீறி விழுவார்கள். 'வேறு வீடுகள் இல்லையா எங்கள் வீடுதான் கிடைத்ததா?' என்று கேட்பார்கள். ஒரு நாள் கொடுக்கும் கொடையால் உடனேயே அவர்களுக்குச் சலிப்பு ஏற்பட்டுவிடுகிறது. இதற்குக் காரணம் என்ன? 'கொடையும் தயையும் பிறவிக்குணம்' என்கிறார் ஔவையார், அந்தப்பிறவிக்குணமாகிய கொடை இல்லாமைதான். பிறவிக்குணமாகிய கொடையும் தயையும் உள்ளவர்கள்தான் கொடுப்பதில் இன்பம் காண்பவர்கள். அவர்களுக்கு எத்தனைதரம் கொடுத்தாலும் அத்தனை தரமும் மகிழ்ச்சி தானே!

அதியமானின் கொடையைப் பற்றி ஔவையார் கூறுகிறார். அதியமான் ஒருநாள் சென்றாலும் மகிழ்ச்சியோடு கொடுப்பானாம், இரண்டு நாள் சென்றாலும் மகிழ்ச்சியோடு கொடுப்பானாம். அடுத்துப் பலநாள் சென்றாலும் மகிழ்ச்சியோடு கொடுப்பானாம். பலரையும் உடன் கூட்டிச்சென்றாலும் மகிழ்ச்சியோடு கொடுப்பானாம். சலிப்படைவதே இல்லையாம். ஏன் அப்படி? அவன் ஈத்து உவக்கும் இன்பம் அறிந்தவன். தன்னிடம் வந்தவறியவர்கள் வயிறார உண்ணும்போது அவர்கள் முகத்தில் தோன்றும் மலர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தவன். அதனால் இன்பம் அடைந்தவன். புலவர்கள் பாடி வரும் பொழுதெல்லாம் பெரும் பொருள் கொடுத்துப்புலவர்களின்



முகத்தில ஏறபடும மகிழுசசியைக கணடு மகிழநதவன்.

முதல்நாள் வறியவர்க்கும் புலவர்களுக்கும் காட்டிய அன்பையும் - கொடுத்த கொடையையும் - முதல்நாள் போலவே எல்லா நாளும் தொடர்வானாம்.

அது மட்டுமல்ல அவனிடம் போனால் பரிசில் கிடைப்பதும் நிச்சயமான ஒன்றாம். எதைப் போல நிச்சயமானது என்றால் யானை தனது கொம்பின் இடையே வைத்திருக்கும் உணவு எப்படி அதன் வாய்க்குத் தப்பாதோ அப்படி நிச்சயமாம்.

*"ஒரு நாட் செல்லலம்*
*இருநாட் செல்லலம்*
*பலநாள் பயின்று*
*பலரொடு செல்லினும்*
*தலைநாட் போன்ற*
*விருப்பினன் மாதே*
*அணிபூண் அணிந்த*
*யானை இயல்தோ*
*அதியமான் பரிசில்*
*பெறூஉங்காலம்*
*நீட்டினும் நீட்டா*
*தாயினும் யானைதன்*
*கோட்டிடைவைத்த*
*கவளம் போலக்*
*கையகத்துவது*
*பொய்யாகாதே*
*அருந்தே மாந்த*
*நெஞ்சம் வருந்தவேண்டா*
*வாழ்க அவன்தாளே!"*

### பெருஞ்சித்திரனார் ஈத்துவக்கும் இன்பம்

வள்ளுவர் கூறும் ஈத்துவக்கும் இன்பத்தை அரசர்கள் எய்தியதில் ஒன்றும் புதுமை இல்லை. ஆனால் அரசரிடம் சென்று பரிசில் பெற்ற புலவர் ஒருவர் அந்தப்பொருளை எதிர்காலத்துக்கு வேண்டுமென்று பாதுகாத்து வையாது வறியவர்களது பசி தீர்க்கக் கொடுத்து வறியவர்களது முகத்தில் மலர்ச்சி காண்பதை இன்ப மாகக் கருதினாரே அது புதுமையானது. அந்தப் புலவர் பெருஞ்சித்திரனார். அவர் பாடிப் பரிசில் பெற்றது குமணவள்ளலிடம். எதிர்காலத்துக்கு வேண்டுமென்று கூறாது எல்லோர்க்கும் கொடுக்கும்படி கூறியது தனது துணைவிக்கு.

பெருஞ்சித்திரனார்தனது துணைவியைப் பார்த்துக் கூறுகிறார்."நின்னை விரும்பி வாழும் மகளிர்க்கும் கொடு, நீ விரும்பும் மகளிர்க்கும் கொடு, நினது உறவினர்களாகிய மகளிர்க்கும் கொடு, வறுமைக் காலத்தில் நமக்கு உதவிசெய்து திரும்பத்தருவோம் என்று நம்பி இருந்தவர்களுக்கும் கொடு, இன்னும் ஆரார்க்குக் கொடுக்கவேண்டும் என்று என்னோடு ஆராயாமலே கொடு, இந்தப்பொருளை வைத்திருந்தால் எதிர்காலத்தில் வசதியாக வாழலாம் என்று நினையாமலும் கொடு, இது குமண வள்ளல் வழங்கிய சொத்து."

பெருஞ்சித்திரனாரது ஈத்துவக்கும் உள்ளம் எவ்வளவு பரந்ததாகக் காணப்படுகிறது. இவரது செயல் நமக்குச் சமயக்கருத்தையும் நினைவூட்டுகிறது.

இறைவனிடம் பெருங்கருணையை எதிர்பார்ப்பவர் தாம் ஏனைய உயிர்களுக்குக் கருணைகர்ட்ட வேண்டும் என்கிறது சமயம்.

பெருஞ்சித்திரனாரும் குமணனிடம் பெற்ற பொருளைத்தான் அநுபவித்தது போலவே ஏனையவர்களும் அநுபவிக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

*"நின்னயந்துறைநர்க்கும்*
*நீ நயந்துறைநர்க்கும்*
*பன்மாண்கற்பினின்*
*கிளைமுதலோர்க்கும்*
*கடும்பின் கடும்பசி தீர*
*யாழநின்*
*நெடுங்குறி யெதிர்ப்பை*
*நல்கியோர்க்கும்*
*இன்னோர்க்கென்னாது*
*என்னொடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்தும்*
*என்னாது நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி*
*மனை கிழவோயே*
*பழந்தூங்கு முதிரத்துக்*
*கிழவன் திருந்துவேற் குமணன்*
*நல்கிய வளனே"*

*

## துரியோதனனுக்கு ஸ்ரீகிருஷ்ணன் கூறிய யோசனை



மகாபாரதப் போர் தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. பகல்வேளையில் போரில் ஈடுபட்டாலும் - சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு போர் நின்றதும் பாண்டவர்களும் கௌரவர்களும் பகைமை பாராட்டாமல் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது வழக்கம்.

போரில் பீஷ்மர், துரோணர், கர்ணன் ஆகியவர்கள் மூவரும் இறந்துவிட்டனர்.

இந்த நிலையில் துரியோதனன் ஒரு நாள் தர்மரிடம் சென்று, "அண்ணா நான் போரிடும்போது என் உடலில் போர் ஆயுதங்கள் எதுவும் ஊடுருவிச் சென்று தாக்காதபடி, என் உடல் வலிமையுடன் இருப்பதற்கு ஏதாவது வழி சொல்லுங்கள்" என்று கேட்டான்.

தர்மர் துரியோதனிடம் பகைமை பாராட்டாமல் கள்ளம் கபடமின்றி பின்வருமாறு கூறினார்.

"தம்பி! உன் உடலைப் போர்க் கருவிகள் ஊடுருவிப் பாயாமல் இருக்கவேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் உள்ளது. அதைச் சொல்கிறேன் கேள்...

உன் தாய் காந்தாரி மிகச் சிறந்த பதிவிரதை. அவள் தன் கணவன் குருடன் என்பதால், தானும் தன் கண்களைத் துணியால் கட்டிக் கொண்டு யாரையும் எதையும் பார்க்காமல் வாழ்ந்து வருகிறாள்.

"ஆதலால் உன் தாயின் கண்கள் ஒரு தெய்வீகச் சக்தியைப் பெற்றிருக்கின்றன. அவள் யாரையாவது ஒருமுறை பார்க்க நேர்ந்தால், அப்படி பார்க்கப்பட்டவரின் உடல் வஜ்ரம் போன்று உறுதியும் வலிமையும் பெற்றுவிடும்."

"அதனால் நீ உன் ஆடைகளைக் களைந்துவிட்டு - உன் தாயின் எதிரில் போய் நின்று -

( XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் எதிர்க்கட்சிகளை திகைக்க வைத்த திடீர் தேர்தல்!

மலேசியாவில் இம்மாதம் 29ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. பிரதமர் மஹதிர் மொஹமட்டின் திடீர் தேர்தல் அறிவிப்பு எதிர்க்கட்சியினரை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டுள்ளது.

நாடாளுமன்றக்கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்த சமயமே நவம்பர் 18



பிரதமர் மஹதிர் மொஹமட்

ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று நாள்களிலேயே - அதாவது 21ஆம் திகதி வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டு 29ஆம் திகதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகள் பலவீனம் அடைந்துள்ள இந்த வேளையில் பிரதமர் முன்கூட்டியே தேர்தலை நடத்தலாம் என்று கடந்த சில வாரங்களாக ஊகங்கள் தெரிவிக்கப்பட்டுவந்தன. எனினும் நாடாளுமன்றத்தைக் கலைத்து, மிகக்குறுகிய காலத்தில் தேர்தலை நடத்துவது மலேசியாவின் அரசியல் வரலாற்றிலேயே இது முதலாவது சம்பவம் ஆகும்.

தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆளும் கட்சிக்கு சாதகமான சூழ்நிலை

மலேசியாவில் எதிர்க்கட்சியினர் பலவீனம் அடைந்திருப்பது மட்டும் அல்ல நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டிருப்பதும் தேர்தலில் பிரதமர் மஹதிர் மொஹமட்டின் ஆளும் கட்சிக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கி உள்ளது.

தேர்தலில் மற்றொரு சாதகமான நிலை சுமார் ஆறரை லட்சம் இளம் சந்ததியினர் தமது வாக்குகளைப் பிரயோகிக்கமுடியாத நிலைமையே. அடுத்த தேர்தல் முறைப்படி 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் என்று இருந்ததால் ஜனவரியில்தான் இவர்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட உள்ளன. மலேசியாவில் இளம் சந்ததியினரின் ஆதரவு எதிர்க்கட்சிகளுக்கே இருந்து வருகிறது. அடுத்த ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் தேர்தலில் வெற்றி தோல்விகளை இவர்களின் வாக்குகள் நிர்ணயிக்கக்கூடியதாக இருக்கும்.

### வழக்குத் தாக்கல்

தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு தேர்தல் கமிஷன் விடுத்த உத்தரவை ஆட்சேபித்து கோலாலம்பூரிலுள்ள நீதிமன்றம் ஒன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தம்மைப் புதிய வாக்காளராகப் பதிவுசெய்துகொள்ள இருந்த ஜேமோ என்ற இளைஞன் இந்த மனுவைத் தாக்கல்செய்தார்.

தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு தேர்தல் கமிஷன் விடுத்த உத்தரவால் சுமார் ஆறரை லட்சம் பேரின் வாக்குரிமை மறுக்கப்பட்டுவிட்டதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுமீதான விசாரணை, திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பாக பிரதமர் மஹதிர் மொஹமட் கருத்துத் தெரிவிக்கையில், புதிய வாக்காளர்களுக்கு தாம் பயந்துவிடவில்லை என்று தெரிவித்தார்.

சட்ட நடவடிக்கைகளோ அல்லது எதிர்கட்சியின் போராட்டங்களோ தேதர்தலில் பிரதமர் மஹதிர் மொஹமட்டின் வெற்றியைத் தடுத்துவிட மாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதான எதிர்க்கட்சியான DAP எனப்படும் ஜனநாயக நடவடிக்கைக் கட்சி பிரதமரின் சர்வாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளது. மானக்கேடான செயல் என்று அது வர்ணித்துள்ளது.

எதிர்க்கட்சிகள பள்ளிவாசல்களை தமது பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த திட்டமிடுவதாகவும் அதனை முறியடிப்பதற்கே புனித ரம்ழான் நாள்களுக்கு முன்னர் தேர்தலை நடத்த முடிவுசெய்யப்பட்டதாகவும் பிரதமர் தமது நடவடிக்கைகளுக்கு நியா

## உலக உலா
**என்.பி.சீலன்**

யம் கற்பித்துள்ளார்.

வெற்றிவாய்ப்பு உள்ள போதிலும், கடந்த 17 வருடகாலமாக மலேசியாவை ஆட்சிசெய்து வரும் மஹதிர் மொஹமட்டுக்கு எதிர்வரும் தேர்தல் ஒரு முக்கிய சவாலாகவே கருதப்படுகிறது.

உதவிப் பிரதமர் அன்வரைப் பதவி நீக்கம் செய்ததுக்கும் அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கும் இந்தத் தேர்தல் மூலம் மக்களின் அங்கீகாரத்தைக் கோருகிறார் பிரதமர் மஹதிர் மொஹமட். அன்வரின் விவகாரத்தில் பிரதமர் சர்வாதிகாரி போன்று செற்பட்டதாக மலேசியாவின் மத்தியவர்க்கத்தவர்கள் நம்புகின்றனர்.

### ஆளும் கட்சிக்குள் பிளவு

அன்வர் பதவி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து பிரதமரின் ஐக்கிய மலே தேசிய நிறுவனம் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. இந்தப் பிளவு தனது கட்சியை எதிர்வரும் தேர்தலில் பெருமளவு பாதிக்கமாட்டாது என்று பிரதமர் கருதுகிறார். 1998 நடுப்பகுதியில் நடைபெற்ற ஐக்கிய மலே தேசிய நிறுவனம் கட்சியின் வருடாந்த மாநாட்டில் அன்வரின் ஆதரவாளர்கள் பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி இருந்தனர்.

தற்பொழுது ஆட்சியில் இருக்கும் தேசிய முன்னணிக் கூட்டணியில் பிரதமரின் ஐக்கிய மலே தேசிய நிறுவனம் கட்சி பிரதான கட்சியாக இருந்து வருகிறது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் தேசிய முன்னணிக் கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தது. எதிர்வரும் தேர்தல் முடிவு சாதாரண அறுதிப் பெரும்பான்மையை மட்டும் பெற்றுக் கொடுக்கலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### 4 கட்சிகள் தனித்தனியே போட்டி

பிரதமர் மஹதிர் மொஹமட்டின் தேசிய முன்னணிக் கூட்டணிக்கு எதிராக நான்கு பிரதான எதிர்க்கட்சிகள் போட்டியிடுகின்றன. ஆனால் இந்த நான்கு கட்சிகளும் இணைந்து போட்டியிடாது தனித்தனியாக கூட்டணி அமைத்தே போட்டியிடுகின்றன. அன்வரின் மனைவியினால் புதிதாக உருவாக்கப்பட்ட நீதிக்கட்சியும் இந்த நான்கு கட்சிகளில் ஒன்று. இந்த நான்கு கட்சிகளும் தனித்தனியாகக் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டாலும் ஒரு விடயத்தில் மட்டும் இணக்கம் கண்டுள்ளன. தாம் ஆட்சிக்கு வந்தால் அன்வர்தான் பிரதமர் என்று இந்தக் கட்சிகள் அறிவித்துள்ளன.

பிரதமர் மஹதிர் மொஹமட்டுக்கு மலே இனத்தவர்களினதும் இந்தியர்களினதும் ஆதரவு பெருமளவு இருந்து வருகிறது. சீனர்களின் ஆதரவு பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயக நடவடிக்கைக் கட்சிக்கே உள்ளது.

மலேசியாவில் தேர்தல் பிரசாரம் உச்சக்கட்டத்தில் இருந்த சமயம் கடந்த 23அம் திகதி சீனப் பிரதமர் றோங்யி கோலாலம்பூர் வந்தது எதிர்க்கட்சிகள் மத்தியில் பெரும் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டுள்ளது. சீனர்

## மஹதிருக்கு வெற்றி வாய்ப்பு நாளை மறுதினம் வாக்குப் பதிவு

களின் வாக்குகளைப் பெறுவதற்கே தேர்தல் சமயத்தில் சீனப் பிரதமரின் விஜயத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக எதிர்க்கட்சிகள் பிரதமர் மீது குற்றஞ்சாட்டி வருகின்றன.

### அன்வர் போட்டியிடார்

தற்பொழுது ஆறுவருடச் சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருக்கும் அன்வர் எதிர்வரும் தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்துவிட்டார். அவரைப் போட்டியிட வைக்கும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் தோல்வி கண்டிருப்பது எதிர்வரும் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்குப் பெரும் பின்னடைவாகவே கருதப்படுகின்றது.

கோலாலம்பூரில் அன்வர் சார்பாக வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தாம் போட்டியிடப்போவதில்லை என்று கடைசி நேரத்தில் அன்வர் அறிவித்துவிட்டார்.

அன்வர் வேட்பு மனுத்தாக்கல் செய்தாலும் அது நிராகரிக்கப்படலாம் என்கின்றனர் அன்வரின் வழக்கறிஞர்கள்.

நான்கு குற்றச்சாட்டுக்களின் பேரில் கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி அன்வருக்கு ஆறு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதிகார துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டும் இதில் அடங்கும். அதிகார துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர் தண்டனை காலம் முடிந்த பின் ஐந்து வருடத்துக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்ற சட்டம் மலேசியாவில் இருந்துவருகிறது. எனினும் அன்வர் தன்மீது விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருப்பதால் அவர் தேர்தலில் போட்டியிடத் தகுதி உடையவர் என்றும் வாதிக்கப்பட்டுவருகிறது.

ஏப்ரல் 14ஆம் திகதி அவருக்கு ஆறு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பின்னரும் நாடாளுமன்றத்தில் அவரது ஆசனம் வெற்றிடமானதாக அறிவிக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டு வருகிறது. எனினும் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று அன்வர் அறிவித்திருப்பது இந்த வாதப்பிரதிவாதங்களுக்கு தற்பொழுது முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

### கண்டனம்

எதிர்வரும் தேர்தலில் பிரதமர் மஹதிர் மொஹமட்டுக்கு ஆதரவாக வெகுஜனத் தொடர்புச்சாதனங்கள் பிரசாரம் செய்துவருகின்றன என்று எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துவருகின்றன.

அரச, தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், வானொலிகள் ஆகியவை மஹதிர் மொஹமட்டுக்கு ஆதரவாக நடத்திவரும் பிரசாரங்கள் மலேசியாவில் வெகுஜனத்தொடர்பு சாதனங்களின் தனித்துவத்தை கேள்விக்குறியாக்கி விட்டுள்ளது.



தற்பொழுது ஆறுவருடச் சிறைவாசம் அனுபவித்துவரும் முன்னாள் உதவிப் பிரதமரும் நிதி அமைச்சருமான அன்வர்.

மலேசியாவில் பத்திரிகை நிறுவனங்கள் ஒவ்வொரு வருடமும் பிரசுர லைசென்ஸை புதுப்பிக்கவேண்டும். இந்த நடைமுறைகள் அரசுக்கு எதிரான பத்திரிகை நிறுவனம் ஒன்றை மூடிவிடவும் அதன் வெளியீடுகளை நிறுத்தவும ஆளும்கட்சிக்கு வாய்பைஅளித்துள்ளது. இதே நடைமுறையைப் பயன்படுத்தியே 1987 ஆம் ஆண்டு "ஸ்ரார்" பத்திரிகைக்கு 5 மாதகாலம் தடை விதிக்கப்பட்டது.

ஆளும் கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்தால் ஆளும்கட்சி மீண்டும் தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் பழிவாங்கப்படலாம் என்று பத்திரிகைகள் அஞ்சுகின்றன.

### பொருளாதார நெருக்கடி

மலேசியாவின் உதவிப் பிரதமரும் நிதி அமைச்சருமாக இருந்த அன்வருக்கும் பிரதமர் மஹதிர் மொஹமட்டுக்கும் இடையில் நெருக்கடி ஆரம்பமாவதற்கு பிரதான காரணமாக இருந்ததே பொருளாதார நெருக்கடிதான்.

ஆனால் பிரதமர் எடுத்த நடவடிக்கைகளால் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மலேசியா மீண்டுவிட்டது. சர்வதேச நாணயச் சபையிடம் உதவிபெறாது பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிட்டதாக பிரதமர் மஹதிர் மொஹமட் கூறுகிறார். "சர்வதேச நாணயச் சபையிடம் கடன் பெற்றால் அதன் கட்டுப்பாடுகளுக்கு அடிபணியவேண்டி இருந்திருக்கும். எமது பொருளாதாரக் கட்டுப்பாடுகளை இழந்திருப்போம்" என்று மஹதிர் மொஹமட் கூறுகிறார்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மலேசியாவின் பொருளாதாரம் பெருமளவு உயர்ந்துள்ளது. முதலீடுகள் பெரும் அளவில் அதிகரித்துள்ளன. இதுவே பிரதமர் மஹதிர் மொஹமட்டுக்கு வெற்றிவாய்ப்பை அளித்துள்ளது.

*



அன்வருக்கு ஆதரவாக பெண்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

## "நூற்றாண்டின் வழக்கு"

மலேசியாவின் வரலாற்றில் "நூற்றாண்டின் வழக்கு" (Trail of the century) என்று கருதப்பட்ட உதவிப் பிரதமரும் நிதி அமைச்சருமாக இருந்த அன்வர் மீதான வழக்கு விசாரணை 1998 நவம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாகி 1999 ஏப்ரல் 14ஆம் திகதி முடிவடைந்தது.

நீதிபதி ஒகஸ்டின் போல் நான்கு குற்றச்சாட்டுகளுக்காக அன்வரைக் குற்றவாளியாகத் தீர்ப்பு அளித்தார்.

ஆண்களுடனும் பெண்களுடனும் பாலியல் தொடர்பு வைத்திருந்ததாகவும் தமது தவறுகளை மூடிமறைப்பதற்காக அதிகாரிகளைப் பயன்படுத்தியதாகவும் இதன்மூலம் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்ததாகவும் அன்வர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு 6 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து கோலாலம்பூரில் மாணவர்கள் பெரும் கிளர்ச்சி செய்தனர். மலேசியாவின் நீதித்துறையில் சீர்திருத்தம் செய்யுமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். அன்வருக்கு ஒருவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டாலேயே அவர் சிறைத்தண்டனைக் காலம் முடிந்தநாளில் இருந்து 5 வருடங்களுக்குத் தேர்தல்களில் போட்டியிடமுடியாது.

தற்பொழுது வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு எதிராக அன்வர் சார்பாக உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் புறம்பாக மேலும் பல குற்றச்சாட்டுக்கள் அன்வர் மீது சுமத்தப்பட்டு தற்பொழுது நீதிமன்றத்தில் அவர் ஆஜர் செய்யப்பட்டுவருகிறார்.

அவற்றில் ஓரினச் சேர்க்கை சம்பந்தமான ஐந்து குற்றச்சாட்டுக்களும் அடங்கும். ஊழல் குற்றச்சாட்டுக்களும் அன்வர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கும் அன்வருக்கு சிறைத்தண்டனைகள் விதிக்கப்படலாம்.

அன்வர் மீதான நீதிமன்ற விசாரணைகள் உரிய முறையில் நடத்தப்படவில்லை என்று பிரதமர் மஹதிர் மொஹமட் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பிரதமர் இதனை வன்மையாக மறுத்து வருகிறார்.

அன்வர் மீதான நீதிமன்ற விசாரணைகள் பகிரங்கமாகவே நடத்தப்பட்டு வருகின்றன. உலக நாடுகள் முழுவதும் நீதிமன்ற விசாரணைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. மலேசியாவிலேயே சிறந்த வழக்கறிஞர்களாகக் கருதப்படும் ஒன்பது பேர் அன்வர் மீதான வழக்குகளில் அன்வர் சார்பாக ஆஜராகி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் என்ன செய்வதெனத் தீர்மானிக்கும்

# நிலைநழுவி வெதும்பிய மனங்களுடன் தமிழ் மக்கள்!

## இனவிவகாரம் எவ்வழி திசைமாறும் என்பதற்கு இன்றைய மாவீரர் தின உரை சமிக்ஞை காட்டுமா?

வடக்கில் போர் அனல் வீசுகிறது. மக்கள் நாடோடிகளாக அலைகிறார்கள். இராணுவ மோதல்களின்போது பொதுமக்கள் இடையில் சிக்கி இறக்கவும் நேரிடுகிறது. புனித பிரதேசமான மடுமாதா ஆலயத்தில் தஞ்சம்அடைந்திருந்த அப்பாவி மக்களில் 38 பேர் ஒரு சில விநாடிகளில் பலிஎடுக்கப்பட்டுள்ளனர். காயமுற்ற ஏனைய 54 பேரும் உரிய சிகிச்சை வசதியின்றி வாடுகிறார்கள். போர் நடைபெறும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்குப் போதிய உணவு மற்றும் மருந்துப்பொருள்கள் கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மனம் சோர்ந்து விரக்தியுற்ற நிலையில் உலகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



இவ்வாறு வடக்கில் மக்கள் அவலப்பட்டுக் கொண்டிருந்தாலும் அது குறித்து எவ்வகையிலும் பொருட்படுத்தாது தெற்கில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் நாளாந்தம் சூடேறிவருகின்றது. அரசாங்க சார்பு ஊடகங்களான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பவற்றில் ஆளுங்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான சந்திரிகா ஆதரவுப் பிரசாரம் அனல் கக்குகிறது. அவற்றில் எங்கும், எதிலும், எப்போதும் எதிர்க்கட்சி வேட்பாளர் ரணிலை கண்டனம் செய்யும் பிரசாரத்தையே மிக அதிகளவில் காணமுடிகிறது.

பதிலுக்கு ஐக்கிய தேசியக்கட்சி தரப்பிலும் எதிர்ப்பிரசாரம் தீவிரமாக நடத்தப்படுகிறது. வாக்கு வாங்குவதற்காக ஏட்டிக்குப் போட்டியாக, அடுத்தவர் மீது அரசியல் சேறு பூசும் போர் தெற்கில் நடந்துகொண்டிருக்கிறது.

இரண்டு பிரதான வேட்பாளர்களும் தமது பிரசாரப் பீரங்கிகளைப் பெரிதாக முழக்கினாலும் கூட, வாக்கு எண்ணிக்கையின் முதற் சுற்றிலேயே இருவரில் எவருக்கும் ஐம்பது சதவீதத்துக்கு மேலான வாக்குகள் கிடைப்பது சந்தேகம் என்பதே பொதுவான அவதானிப்பும் மதிப்பீடுமாக உள்ளது. மோசடிகள், குழப்பங்கள், குளறுபடிகள் இல்லாது தேர்தல் சுதந்திரமாகவும் அமைதியாகவும் நடைபெறும்பட்சத்தில், சிறுபான்மையினரின் வாக்குகளே வெற்றியை நிர்ணயிக்கும் எனப் பெரிதும் நம்பப்படுகிறது; எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் சிறுபான்மையின மக்களின் வாக்குகளே புதிய ஜனாதிபதியை நிர்ணயிக்கும் எனப் பரவலாக மதிப்பிடப்படுகிறது. அதன் காரணமாக இரண்டு தரப்புகளுமே தமிழ்ப்பிரதேச வாக்குகளில் கண்வைக்கத் தொடங்கியுள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதை முன்வைத்தே தாம் ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்துக்கு முந்தி நடத்துவதாக ஆளுங்கட்சி வேட்பாளர் சந்திரிகா அறிவித்திருந்தது சிங்கள வாக்குகளை நாடியல்ல; தமிழர்களின் வாக்குகளைக் கண்வைத்தே என்பது மிக வெளிச்சமானது. அந்த அத்திவாரத்தில் வைத்தே சந்திரிகா தனது தேர்தல் பிரசாரத்தை நாளாந்தம் கட்டி எழுப்பிக்கொண்டிருக்கிறார். கடந்த ஐந்து

### உள்ளும் புறமும்

குறுமுனி

வருடங்களாகச் செய்யமுடியாத ஒன்றை மீண்டும் பதவிக்கு வந்தால் செய்து முடித்துவிடுவார் என்று மக்களை நம்பவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.


சமாதான வழியில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகக் கூறி 1994இல் பதவிக்கு வந்தவர் ஜனாதிபதி. ஆனால் ஆட்சிக்கட்டிலில் ஏறியதும் அவரது சிந்தனையும் போக்கும் தலைகீழாக மாறின. சமாதானத்துக்கான போர் என்று அர்த்தம் இல்லாத, பயன்தரமுடியாத ஒரு திட்டத்தை உருவாக்கி அதனைக் கைவிடாமல் அழுங்குப் பிடியாகக் கைக்கொண்டுவருகிறார். தமது முந்திய சிந்தனை மாறியமைக்கான காரணத்தை முன்வைத்து போரை நியாயப்படுத்தவும் செய்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காகவே சமாதானத்துக்கான போர் நடத்தப்படுவதாக சந்திரிகாவும் அவரது அரசாங்கச் சகபாடிகளும் கூறிவந்த போதிலும், அது அரசியல் இலாபங்களை ஈட்டுவதற்கான ஏற்பாடாகவே அமைந்திருக்கிறது. அரசியல் அட்டவணைகளுக்கு இணங்கவே இராணுவ நடவடிக்கைகளை அரச படைகள் மேற்கொண்டு வந்தன. இராணுவ வெற்றிகளைக் காட்டித் தென்னிலங்கையரின் வாக்குகளை வாங்கும் தந்திரோபாயம் அது.

வயம்பயா மாகாண சபைத்தேர்தலை முன்னிறுத்தி ஓர் இராணுவ நடவடிக்கையும் ஐந்து மாகாண சபைகளின் தேர்தலை முன்னிறுத்தி மற்றொரு பெரிய இராணுவ நடவடிக்கையும் என்றவாறு நடத்தப்பட்டன. அனேகமாக கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் பலவும் அரசியல் அட்டவணைகளை முன்னிறுத்தியே நடத்தப்பட்டன என்று இராணுவ ஆய்வாளர்கள் நிரூபித்தமை குறிப்பிடத்தக்கது.

தீர்வுப்பொதி ஒன்று உண்டு; பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாண்பதற்கு எப்போதும் கதவுகள் திறந்துள்ளன என்று பேட்டிகள், மாநாடுகளில் வாய் ஓயாது கூறிவந்த சந்திரிகா, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் யோசனையை இதுவரை காலமும் நிராகரித்து வருகிறார்.

### உள்ளுக்குள் அடைக்கும் உத்தி



இனப்பிரச்சினையை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு உட்படுத்தினால், அது சர்வதேச அக்கறையை கொண்டுவந்துவிடும் என்ற அச்சம் அரசுக்கு. இனவிவகாரத்தை இன்னமும் உள்நாட்டு விவகாரமாக உள்ளுக்குள் "அடைத்து" வைத்திருக்கவே அது விரும்புகிறது. மூன்றாந்தரப்பு மத்தியஸ்தர் தமிழ் மக்களின் நியாயமான-அரசு வழங்க உத்தேசித்திருப்பதை விடக்கூடுதலான - உரிமைகளை வழங்கவேண்டும் என்று கூறிவிட்டால், தான் நினைத்ததைத் தமிழர்கள் மீது திணிக்கும் எண்ணம் ஈடேறாது என்ற அச்சம் இன்னொரு புறம் அரசுக்கு!

மேலும் விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினையினால் உண்டான ஓர் அமைப்பு அல்லது இனப்பிரச்சினையால் உற்பத்திசெய்யப்பட்ட அமைப்பு என்றே அரசாங்கத்தின் கருத்து நிலை உள்ளது. இனப்பிரச்சினையே நோய். விடுதலைப்புலிகள் அதற்கான குணங்குறியே. நோய்க்கு மருந்து கொடுத்து அதனை இல்லாததாக்கிவிட்டால் குணங்குறி மறைந்துபோகும் என்ற "தத்துவமும்" அரசாங்க வட்டாரங்களில் செறிந்துள்ளது. அதன் அடிப்படையிலேயே விடுதலைப்புலிகளுடன் பேசுவதை அரசாங்கம் தவிர்க்கவிரும்புகிறதோ என்ற கேள்வியும் எழுகிறது.

இதனாலேயே, விடுதலைப்புலிகளை ஓரங்கட்டிவிட்டு, (அவர்களை ஒழித்து விடலாம் என்ற நம்பிக்கையுடன்) ஏனைய தமிழ்க்கட்சிகளின் உதவியுடன் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகவும், "அரசமைப்புப் புரட்சி" மூலம் தமது தீர்வுப் பொதியை நிறைவேற்றப் போவதாகவும் சந்திரிகா அடிக்கடி கூறிவந்தார்.

கடந்த ஐந்து வருடகாலமாக சந்திரிகாவால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியவில்லை. இவருடைய பதவிக்காலத்தில் தமிழர்களின் அவலங்களும் தொல்லைகளும் அவர்கள் மீதான கட்டுப்பாடுகளும் அவர்களைச் சந்தேகத்துடன் பார்ப்பதும் முன்னரைவிட அதிகரித்துள்ளன. இவரை எவ்வாறு ஆதரிக்கமுடியும்? சிங்களத் தீவிரவாதிகளுக்கிடையே எதிர் நீச்சலடிக்கும் அரசியல் துணிவு ஐந்துவருடங்களாக இவருக்குப் பிறக்கவில்லை. இனி அந்தத் துணிவு வரும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது? - இவை தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்விகள்.

முன்னர் பதவியிலிருந்த தென்னிலங்கைத் தலைவர்களை விட தமிழர்கள் விடயத்தில் சந்திரிகா கரிசனை காட்டுவார் என்று அவர்கள் நம்பினர். ஆனால் இப்போது அவரும் முந்திய தலைவர்களின் பட்டியலில் சேர்ந்துள்ளார் என்று கண்டுவிட்டனர். ஆகையால் இவருக்கு வாக்களித்து எந்தப் பயனும் புதிதாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் நிலையில் தமிழ் மக்களில் மிகமிகப் பொரும்பாலானோர் இல்லை.

கடந்த திங்கட்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு ஒன்று ஜனாதிபதியைச் சந்தித்தபோது விடுதலைப்புலிகளுடன் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தர் ஊடாக பேசவேண்டும் என்று கோரியது. அதற்குப் பதிலளித்த சந்திரிகா "அது பற்றித் நான் நடவடிக்கைஎடுக்கிறேன்" என்று மட்டும் மொட்டையாகக் கூறி விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

தமிழர்களின் வாக்குகளுக்காக அலையும் இந்த வேளையிலும், மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தைப் பரீசீலனை செய்வதில் வேண்டிய அக்கறை அவருக்கு இல்லை என்பது நன்றாகப் புரிகிறது அல்லவா?

### ஐ.தே.க. வேட்பாளர்

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளார். மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனா அல்லது தொடர்பாளர் ஊடாகவா அல்லது இருதரப்பும் நேருக்கு நேரா என்று எதனையும் விளக்கமாக, விவரமாக அவர் சொல்லவில்லை.

விவரங்களை வெளியிட்டால், அவற்றை வைத்துக்கொண்டு [illegible] தென்னிலங்கை தமக்குப் பாதகமான பிரசாரத்தை மேற்கொள்ளும் என்று ரணில் கருதக்கூடும். அதேவேளை புலிகளைச் சம்பந்தப்படுத்திப் பேசினால் தமிழர்களின் வாக்குகளைக் கவருவது சுலபம் என்ற நோக்கத்துடனும் ரணில் அவ்வாறு கூறியிருக்கலாம்.

மேலும் சந்திரிகா கொண்டுவந்த தீர்வுப் பொதிக்கு ஆதரவு அளிக்காத ஐக்கிய தேசியக் கட்சி, ஒற்றையாட்சி அரசு முறையை கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும் ஐக்கியதேசியக்கட்சி, விடுதலைப்புலிகளுடன் பேசும்போது தனது நிலையை மாற்றுமா? மாகாணசபைக்கு மேலே - அப்பால் - போகாமல் அதற்குள்ளேயே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்பதே அந்தக்கட்சியின் நிரந்தர சிந்தனையாக உள்ளது.

பிரேமதாசா காலத்திலேயே - விடுதலைப் புலிகள் அரசுடன் பேசுவதற்கு நெருங்கிய காலத்திலேயே - மாகாணசபைக்கு அப்பால் சென்றால் சிங்களப் பேரினவாதம் தலையில் அடித்துவிடும் என்ற அச்சம் அவருக்கு இருந்தது. அதனால் மாகாணசபைகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி ஏதாவது செய்யலாமே அன்றி, காற் சமஷ்டி அரைச்சமஷ்டி என்று கூட நினைத்தும் பார்க்கமுடியாது என்று பிரமேதாசா யாழ்ப்பாணத்துப் பிரமுகர் ஒருவரிடம் தெரிவித்திருந்தார்.

நிலைமை அவ்வாறிருக்க, தமிழர்களின் சுயாட்சி அபிலாசையை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு ரணிலிடம் புரட்சித்தன்மை உண்டா? அவரை நம்பமுடியுமா? என்ற கேள்வி எழுகிறது.

ரணில் விக்கிரமசிங்கா இவ்வார முற்பகுதியில் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இனப்பிரச்சினைத் தீர்வுகுறித்துத் திட்டவட்டமான யோசனைகள் எதனையும் காணமுடியவில்லை. "மக்களுடனான ஒப்பந்தம்" என்ற பொழிப்பான தலையங்கம் இடப்பட்டிருந்தாலும் அதில் இனப்பிரச்சினை தொடர்பான ஆக்கபூர்வமான விடயங்கள் காணப்படவில்லை. இடைக்கால நிர்வாகசபை, விடுதலைப்புலிகளுடன் பேச்சு என்ற அம்சங்கள் மட்டுமே உள்ளன.

ஆகையால் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும் தமிழ் மக்கள் பெரிதாக எதனையும் எதிர்பார்க்க முடியாது என்ற கருத்துத் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகிறது.

மேலும் கடந்த சுமார் ஐம்பது வருட காலமாக ஐக்கியதேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினையை வைத்தே தமக்கு அரசியல் லாபம் தேடியதையும் ஆட்சி பீடம் ஏறியதையும் -

ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வந்த கட்சி ஏதாவது செய்யும் என எதிர்பார்த்துத் தமிழ் மக்கள் அதனை ஆதரித்து வாக்களித்த போதிலும் கடைசியில் தாம் ஏமாற்றப்பட்டதையும் -

ஒரு கட்சி தமிழ்மக்களுக்கு சில சிறு உரிமைகளையும் சலுகைகளையும் வழங்க முற்படும் போதெல்லாம் அடுத்த கட்சி எதிர்த்துக் குழப்பி விடும் தொடர் சரித்திரத்தையும் -

தமிழர்கள் ஏமாற்றப்படுபவர்களாகவும், தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் ஏமாற்றுபவர்களாகவும் தொடர்வதையும் -

நினைத்துத் தமிழ்மக்கள் விரக்தி அடைந்திருக்கின்றனர். தங்கள் விடயத்தில் இரண்டு தரப்புகளும் மோதகமும் கொழுக்கட்டையும் போன்றனவே என்று கருதுகிறார்கள். எந்தக்கட்சி வெற்றி பெற்றாலும் தமது அவலங்கள், வேதனைகள் நீங்கமாட்டா என்ற எண்ணமே தமிழர் மனங்களில் குடிகொண்டிருக்கிறது.

இதனால் இப்போதைய ஜனாதிபதித் தேர்தலில் புதிய அணி ஒன்றை ஆதரித்தால் தமிழர்களை மாறி மாறி ஏமாற்றிவரும் இரண்டு கட்சிகளுக்கும் பாடம் புகட்டுவதாக அமையும் என்று சிலர் கருதுகிறார்கள். அவ்வாறு புதிய அணியை ஆதரிக்கும் பட்சத்தில் இரண்டாவது, மூன்றாவது விருப்பு வாக்குகளை அழித்துவிடவேண்டும். தமிழ் மக்களின் வாக்குளைப் பெற்று இதுவரை ஆட்சிபீடமேறி அவர்களை ஏமாற்றிய கட்சிகளுக்குப் போடக்கூடாது என்றும் அதேசாரார் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

ஆட்சேபத்தை தெரிவிக்குமுகமாக தேர்தலில் கலந்து கொள்ளாமல் பகிஷ்கரித்தால் தமிழ் மக்களின் மனநிலையை வெளிஉலகுக்காவது தெரிவிக்கலாம் என்று யோசனை கூறுவோரும் உள். ஆனால் தமிழர்கள் வாக்களிக்கவில்லை என்று தெரிந்ததும் அவர்களின் வாக்குச் சீட்டுக்கள் நிரப்பப்படாமல் இருக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை என்ற விடயமும் அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளை அழித்துவிட்டால் அத்தகைய மோசடியை தவிர்க்கலாம் என்று கருதுவோரும் உள்.

### ஆட்சி மாற்றம் நன்மை தருமா?

ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டால் ஏதோ [illegible] மாற்றம் பிறக்கும். அந்தச் சூழ்நிலையில் தமிழர் விவகாரத்தை கையாளும் தன்மையிலும் மாற்றம் ஏற்படக்கூடும். எனவே ரணிலை ஆதரிப்பது நன்மை பயக்கும் என்ற கருத்தும் நிலவி நிற்கிறது. எப்படியோ, ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாண மக்கள் என்ன நிலைப்பாட்டைக் கைக்கொள்வர் என்பதனைத் திட்டவட்டமாகச் சொல்லமுடியாத நிலையே நேற்று வரை காணப்பட்டது. போரை நிறுத்தாமல், தமிழ் மக்களின் துன்பதுயரங்களையும் அவலங்களையும் பொருட்படுத்தாது நடத்தப்படும் ஜனாதிபதித் தேர்தலால் எங்களுக்கு என்ன விடிவு வந்துவிடப் போகிறது என்ற வெதும்பிய மனநிலையையே பொதுவாகத் தமிழ் மக்களிடம்காணமுடிகிறது.



வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துவருகிறது. இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத -விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாக்களிப்பு நடைபெறுமா என்பது சந்தேகமே. கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை உருவாக்கி அவர்களும் வாக்களிக்க வகைசெய்வதாக கூறப்பட்டாலும் அது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பதில் தெளிவில்லை. கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் கள்ளவாக்குப் போடுவதையே ஊக்குவிக்கும் எனக்கருதப்படுகிறது.

கிழக்கைப் பொறுத்தவரையில் அங்கு தேர்தல் காற்று கணிசமாக வீசத்தொடங்கியிருப்பதாகத் தகவல். எனினும் தமிழ் மக்கள் தேர்தல் குறித்து பெரிதாக ஆரவாரப்படவில்லை என்றும் செய்திகள் கிடைக்கின்றன.

தமிழர்களுக்கு மட்டுமன்றி, நாட்டுக்கு மட்டுமன்றி ஜனாதிபதித் தேர்தலுக்கும் இன்று ஒரு முக்கியநாள் எனலாம். தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்று சனிக்கிழமை மாலையில் ஆற்றவிருக்கும் மாவீரர்தின உரை எவ்வாறு அமையும்? என்ன செய்தியைச் சொல்லப்போகின்றது என்பதனை அறிய தமிழர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் ஆர்வமாக உள்ளனர் என்று கூறலாம்.

அவரது இன்றைய உரை தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் எந்த வழிசெல்லும் என்பதற்கான சமிக்ஞை காட்டுவதாக அமையும் என்று அவதானிகள் பலரும் கருதுகிறார்கள். அதனைப் பொறுத்தே தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் என்ன செய்வது என்ற ஒரு தீர்க்கமான முடிவுக்குவர ஏதுவாகும் என்றும் நம்பப்படுகிறது.

கடந்த வருட மாவீரர்தின உரையில், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசுடன் பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அவர் அறிவித்திருந்தார். அதன் பெறுபேறாக நாட்டின் அரசியல் அரங்கின் கோலங்கள் மாறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆக்கபூர்வமாக எதுவும் நடைபெறும் என நம்பப்பட்டது. ஆனால் அப்படி எதுவுமே நடந்துவிடவில்லை. விடுதலைப்புலிகளின் விருப்பக்கொடையை(offer) அரசாங்கம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. முழுஅளவில் நிராகரித்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையிலும், இந்த மாதத்தில் விடுதலைப்புலிகளுக்கு கிடைத்துள்ள இராணுவ வெற்றியின் பின்னணியிலும் தலைவர் பிரபாகரனின் உரை எவ்விதம் அமையப்போகிறது என்பதனைத் தமிழர்கள் மட்டுமன்றி நாட்டு மக்கள் அனைவரும் அறிய ஆவலாக இருப்பர்.

சாதாரண மக்களைவிட அரசியல் தலைவர்களே இதில் அதிக ஆர்வம் காட்டுவர். இலங்கை அரசியல்வாதிகளில் மிகக்குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் மாவீரர்தின உரை சொல்லப்போகும் செய்தியைஅறிய மிகமிக அக்கறையாக இருப்பர். அதற்கேற்றவாறு அவர்கள் தமது தேர்தல் பிரசார உத்திகளையும் உரைகளையும் மாற்றியமைக்கவேண்டிய தேவை அவர்களுக்கு உண்டாகலாம்.

இலங்கையர் மட்டுமா? இந்திய, அமெரிக்க அரசுகள் உட்பட சர்வதேசங்களும் தலைவர் பிரபாவின் உரை எந்தவகைச் சமிக்ஞை காட்டுகிறது என்பதனை அறிய ஆர்வத்துடன் இருப்பர். புலம்பெயர்ந்து பல வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களுக்கு மாவீரர் தின உரையை சமகாலத்தில் கேட்கும் வாய்ப்புக்கிடைக்கும். அவர்களும் இதில் மிக ஈடுபாடாக இருப்பர்.

- இலங்கையின் - இனப்பிரச்சினையின் - நிலை எவ்வழி திசைமாறப்போகிறது என்பதனை கோடிட்டுக் காட்டுவதாக இன்றைய மாவீரர் தின உரைஅமையும் என்று கொள்ளலாம்.

*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளை ரோஜா முள்

## பாகம் II



## 1

கண்களைக் கொள்ளைகொள்ளும் வனப்புமிக்க ரோஜாத் தோட்டம் அந்த பங்களா வைச்சூழ நான்கு திசைகளிலும் வியாபித்து இருந்தது. சுற்று மதில் கொண்ட பரந்தவளவின் மத்தியில் வெண்ணிறமான பளிங்கு மாளிகையாக அந்த பங்களா - கம்பீரமாக - ரோஜா அலைகடலில் - தெப்பமாக மிதந்துகொண்டிருந்தது. பெரும்பாலும்அனைத்துமே வெள்ளை ரோஜா மலர்கள்தான்.

ரோஜா மலர்க்கடலில் ஆங்காங்கே சிவப்பு,மஞ்சள் மற்றும் வெவ்வேறு கலப்பின மலர்கள் கண்சிமிட்டத் தவறவில்லை. இத்தனை மலர்களும் அழகுக்கு அழகுசெய்ய மிதக்கும் அம்மாளிகையின் பாதுகாப்புக்கா அத்தனை முட்கள்?

நடைபாதைகள் - வாகனவழிகளை வரையறுக்கும் எல்லைகளாக அடுக்கிவைக்கப்பட்ட பாரிய பூச்சட்டிகளில் பூத்துக்குலுங்கும் மினி ரோஜா மலர்கள் தனிக்கோலம்போடத் துடித்தன. பூச்சட்டிகளைத்தாண்டி உள்ளே புகுந்தால் முள்ளிலே சேலைபட்ட கதைதான். அத்தனை நெருக்கமாகவும் செழிப்பாகவும் வளர்க்க ரோஜா என்ன காட்டுப் புதரா? ஆம் உண்மைதான்.

சுமார் இரண்டு ஏக்கர் அளவான - சதுரவடிவிலான - அந்தவளவுநடுவிலே மூன்று மாடிகளைக்கொண்ட அந்த வெள்ளைப் பளிங்கு மாளிகை - வளவு முழுவதும் புதைத்துக்கிடக்கும் நிலத்துக்கு அடியிலான துளைகளிடப்பட்ட தண்ணீர்க் குழாய்கள் - அவை எப்போதும் இதமான ஈரத்தைச் செடிகளுக்கு அளவாக வழங்கிக்கொண்டிருக்கும் பொறிமுறை. எட்டா உயரச் சுற்றுமதிலின் மேல் விளிம்பில் தாண்டமுடியாத் தடைகள்.

இதுதான் கரோல் - டானியல் இருவரும் இனிக்க வாழ நினைக்கும் மாளிகை. நகரத்துக்குச் சற்றே புறமாக - எனினும் பிரதான சாலையின் ஓரமாக - பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு கரோல் தெரிவு செய்த இடம் அது. அவளது மனம் போல மலர்ந்து பூத்துக்குலுங்கும் ரோஜாச் செடிகளை உருவாக்க அவள் பட்டபாடு சொல்லிமாளாது. எத்தனை செல்வத்தை இறைத்து இழந்தாலும் அவள் பிரயாசையின்றி அவை மலர்ந்திருக்க முடியாது.

**மு.சிவநேசன்**

மலைச்சாரல் இறக்கத்தில் - நாளாந்தம் நகரத்தை நோக்கி வரும் இலட்சக்கணக்கான வாகனங்கள் - அவற்றில் வரும் பலமில்லியன் மனிதர்களின் கண்ணில் இந்த பங்களா படத்தவறாது.

நகரில் தரையிறங்கத் தாழப்பதிந்துவரும் விமானங்களில் - ஜன்னலோர ஆசனங்களைப் பிடித்தவர்கள் கூட இந்த ரோஜாக் கடலைக் கண்டு வியக்கலாம். கொடுத்துவைத்தவர்கள் இக்காட்சி காண்பவர்கள் என்று சொன்னால் மிகை ஆகாது.

கரோலின் உயிர்த்தோழி எமிலி தெரிந்துகொடுத்த நம்பிக்கைக்குரிய தொழிலாட்கள் மற்றும் பணிப்பெண்கள் பங்களாவையும் வளவையும் பராமரிப்பதில் ஈடுபட்டிருப்பதும் பாதுகாப்பையும் பலத்தையும் மேலும் உறுதிசெய்தே இருந்தது.

❖ ❖ ❖

டானியல் அசமந்தமாக இருந்தாலும் கூட கடந்தகாலக் கசப்பான அனுபவங்கள் கரோலை எதிலும் விழிப்பாகவே செயற்படவைத்தன. அவளது மதிநுட்பம் அப்படி! தானும் டானியலும் நிம்மதியாக வாழவேண்டும் என்ற ஒன்றிலேதான் அவள் குறியாக இருந்தாள்.

எவ்வளவுதான் சொத்துசுகம் இருந்தாலும் அவையெல்லாம் மனதுக்குச்சுமையாகவே தென்படுவதை அவள் உணர்ந்திருந்தாள். அவளது நகைகளும், வைரங்களும், டொலர்களுமாக பல மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் நகரின் மிகப் பாதுகாப்பான வங்கி ஒன்றின் லொக்கர்களுக்குள்ளே இடம்பிடித்து இருந்தன. அவளோ டானியலோ தவிர எவரும் அவற்றை அணுகமுடியாது என்ற நிலைமை.

அந்த வங்கியில் பெரும்பாலும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் நடவடிக்கைகள் குறைவே என்றே கூறலாம். பெரிய நிறுவனங்களுக்கும், பெரிய புள்ளிகளுக்கும் மட்டுமே அதனை அணுகக் கட்டுபடியாகும் என்பதுதான் உண்மை.

இத்தகைய எடுபாடுகளில் கரோலுக்கு ஈடுபாடும் விருப்பமும் இல்லைத்தான். சிம்பிளாக வாழ அவளுக்கு விருப்பம். ஆனால்சூழஉள்ள உலகம் பொல்லாதது என்பதை அவள் உணர்ந்து இருந்தாள். நாளாந்த தேவைக்கு மேலதிகமாக வீட்டில் பணத்தையோ பெறுமதியான பொருள்களையோவைத்துக்கொண்டு நிம்மதியின்றித் திண்டாட அவள் தயாரில்லை.

தானும் டானியலும் நினைத்த நேரம் நினைத்த இடமெல்லாம் சுதந்திர மனிதர்களாய்ச் சென்று சுழல வேண்டும் என்று நினைப்பவள் அவள்.

குண்டு துளைக்காத அந்தக் கார் அவர்களின் மாளிகைக்குள்ளிருந்து மெல்ல வெளிப்படுகிறது.

அந்த வெண்பளிங்கு மாளிகை சூழவுள்ள வெள்ளை ரோஜா மலர்த் தோட்டத்துக்குள் பிரசவிக்கும் வெண்புறாவாக அது வெளிப்படும் காட்சியை உயரத்திலிருந்து கண்டால் கண்கள் குளிரும்தான்.

வெண்ணிறமான காரின் சில்லுகள் பச்சைப்புல் மெத்தைத்தரையைத் தழுவி உருண்டுவர வாசலை நோக்கி மெதுவாக அது நகர்கிறது. சாரதி ஆசனத்தில் எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்கும் கரோல் - உல்லாசத்துக்காக அன்றி வேறெப்போதும் டானியலிடம் ஸ்டெயரிங்கைத் தரவிரும்புவதில்லை.

அவன் மீது உயிரையே வைத்திருக்கும் அவளுக்கு எப்போதும் பாதுகாப்பிலேயே குறி இருக்கும். எதிரிகள் என்று யாரும் வெளியே இல்லாவிட்டாலும் கூட அவனுக்கு ஏதாவது ஆபத்து வந்துவி[illegible] என அவள் உள்ளூர ஏங்கியபடியே காலம் கழித்தது உண்மை.


வழமைதான் என்றாலும் இன்று ஏதோ விசேடமாக - மென்காற்றில் ஆடி அசைந்து ரோஜா மலர்கள் தம்மை வரவேற்பதாக அவள் உணர்கிறாள். கண்ணாடிகளை இறக்கிவிட்டு அவற்றில் இருந்துவரும் வாசனையை அப்படியே நெஞ்சு நிறைய அள்ளிக்கொள்கிறாள்.

சில நாள்கள் முன்பு மலர்ந்த பூக்களின் இதழ்கள் காற்றுப்பட்டுக் கொட்டுப்படும் காட்சிகூட அவள் மனதை அள்ளியது. காரை நிறுத்திவிட்டு இறங்கிவந்து தெரிவுசெய்து சில மலர்களை முட்களுடன் பறித்து வந்து டாஷ்போர்ட்டின் மேல் வரிசையாக அடுக்கிவிட்டாள்.

கண்ணாடிகள் பூட்டப்பட மீண்டும் கார் தவழத்தொடங்குகிறது. வீதிக்குவந்ததும் அங்குவரும் கணக்கில்லா வாகனஅணிக்குள் அது கலந்துகொண்டது. இனிமேலும் அதனைத் தொடர்ந்துகொள்வதும் - அடையாளம் காண்பதும் அவ்வளவு சுலபமில்லைத்தான்.

❖ ❖ ❖

கண்ணாடிகள் கட்டடத்தைத் தாங்குமோ என்று காண்போர் வியக்கும் வகையில் - தூண்கள் கூட அலங்கார வேலைப்பாடுகள் மறைப்பதால் பெரிதாகத் தென்படாத வகையில் - முற்றிலும் கண்ணாடியால் அமைக்கப்பட்ட அத் தளமாடியில்தான் மிகவும் பாதுகாப்பான அந்த வங்கி அமைந்திருக்கிறது.



இந்தக் கண்ணாடிச் சுவர்கள்தானா மேலேயுள்ள பத்துமாடிகளையும் அங்குள்ள அலுவலகங்களையும் தாங்கி நிற்கின்றன? சற்றே கறுப்பான கண்ணாடி என்றாலும் உற்றுப் பார்த்தால் வங்கியின் அலுவலக நடவடிக்கைகள் எல்லாம் ஏதோ திறந்த வெளியில் நடப்பது போலத்தான் இருக்கும்.

தளமாடி 'G'இல்வங்கி அமைந்துவிட்டதால் - வங்கி அலுவல்களுக்கென வருபவர்கள் மாத்திரமே அத்தளத்தில் பிரவேசிக்கமுடியும். காரணமின்றி எவரும் அங்கே நடமாடமுடியாது. நடந்து வருபவர்கள் நேரடியாக வங்கி முகப்பின் ஊடே அதற்குள் பிரவேசிக்கமுடியும்.

வங்கிக்கான வாகனத்தளம் தளக்கீழ் மாடியான B1இல் அமைந்திருக்கிறது. அதில் வாகனத்தை நிறுத்திவைத்துவிட்டு அங்கிருந்து இயங்கும் கண்ணாடி இழையிலான லிப்ட் அறைக்குள் புகுந்துகொண்டால்அது வாடிக்கையாளர்களுக்கான வங்கி முற்றத்தில் (Customers' Lobby)அவர்களைக் கொண்டுவந்து விட்டுவிடும் [illegible] 'ஏசி.' தரும் இதமான குளுகுளு முற்றம்.

பூச்சட்டிகளில் வகைவகையாகச் செழிப்புற வளர்ந்துநிற்கும் செடிகள். அவை நிஜமா? பிளாஸ்டிக்கா? என்று கிள்ளிப் பார்த்தாலும் விளங்கவில்லை.

பாரிய மீன்தொட்டிகளில் நீந்தி விளையாடும் தங்கநிற மீன்களின் கூட்டம் காண்போரை அசத்திவிடும். இவற்றினதும் செடிகொடிகளினதும் அழகைப் பருகவென்றே வங்கிக்கு வந்து போகலாம் போலிருக்கும்.

இருந்தால் ஆளையே புதைத்துவிடும் சொகுசு ஆசனங்களில் அமர எவருக்கும் அவகாசம் கிடைப்பதில்லை. வந்ததும் அவரவர் அலுவல்கள் கவனிக்கப்பட்டுவிடுவதனால் அவர்கள் உடனே திரும்பிவிடுகிறார்கள்.

முற்றிலும் கண்ணாடி என்றால் அது பாதுகாப்பான வங்கியா? ஆம் கேள்வி நியாயம்தான். விடையும் 'ஆம்' என்பதுதான்.

வங்கியின் சுற்றுப்புறச் சுவர்கள் சற்றே கருமையான கண்ணாடியால் ஆனவை. உள்ளக அறைக்கண்ணாடிகளின் கருமை மேன்மேலும் அதிகரித்தே செல்கிறது. எனவே வெளிச்சம் உள்ள பகற்பொழுதுகளில் வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு வெளிக்காட்சிகளே பெரும்பாலும் கண்ணாடிகளில் தெறிக்கும். உற்றுப் பார்த்தால் அன்றி உள்ளே நடப்பவை தெளிவாக விளங்காது.

காரணமின்றி உற்றுப்பார்ப்பவர்களை வங்கியின் ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு அதிகாரிகளும் உற்றுத்தானே பார்ப்பார்கள். எனவே இந்த வினை வேண்டாம் என்று தேவையற்றவர்கள் விலகிவிடுவார்கள்.

**விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர்**

24மணிநேரமும்செயற்படும் வங்கி என்றாலும் இரவில் பெரும்பாலான பிரதேசம் ஓய்ந்துவிடும். நடமாட்டம் அதிகம் இருப்பதில்லை. எனினும் வங்கி ஒளிவெள்ளத்தில் மிதக்கும். வெளியே இருட்டு என்பதால் - உள்ளே உள்ளதெல்லாம் தெளிவாகத்தெரியும். ஓர் 'ஈ' பறந்தால் கூட பளீச்சென்று புலப்படும் அந்த நிலைமையில் பாதுகாப்பு சிறப்பாகத்தானே இருக்கும்.

வெளியே படுபிசியான வீதி. வங்கிக்கான சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் போதாதென்று எந்நேரமும் ரேடியோ தொடர்புடனான பொலீஸ் வாகனங்கள் அப்பிரதேசத்தில் சுழன்றுகொண்டிருக்கும். வங்கியில் கொள்ளைபோனால் அப்பணத்தில் அமெரிக்காவையே வாங்கிவிட முடியும்.

வங்கியின் பெறுமதியான பாதுகாப்பு அறை எங்கே இருக்கிறது என்பதுதான் பரமரகசியம். அதன் அமைப்புக்களைக் கண்டுபிடித்துவிடுவது அவ்வளவு சுவபமானதல்ல. அங்கு கடமை புரிபவர்களில் கூட பலரும் அதன் இடத்தை அறியார். முகாமையாளரின் அறைக்குள்ளிருந்து இயங்கும் லிப்ட்டுகள் வாடிக்கையாளர்களுக்கான லொக்கர் தளத்துக்கு அவர்களை இட்டுச் செல்லும்.

இத்தளம் எந்தமாடியில் இருக்கிறது?

அந்த லிப்டில் மாடி இலக்கங்கள் கிடையாது. L1, L2 என தமக்குத் தேவையான லொக்கர் தளங்களைத் தெரிவுசெய்து லொக்கர்களை அணுக வேண்டும். அதற்கான லிப்ட் இயக்கங்களுக்கு வங்கி முகாமையாளரின் எலக்ரோனிக் உத்தரவும் அவசியமாகிறது.

இதைவிட வங்கியின் பிரதான காப்பறைகள் அக்கட்டடத்தில் எங்கோ இருக்கின்றன. அவற்றை அணுகத் தேவையான லிப்டுகள் எங்கிருந்து புறப்படுகின்றன? எங்கே போய் முடிகின்றன என்பது அங்கு பலகாலம் கடமைபுரிபவர்களுக்கும் கூட புரியாத புதிர்தான். அதுவும் லிப்டில் புறப்பட்டு ஓர் இலக்கத்தை அழுத்திக் காப்பறைகளை எட்டிவிடல் முடியாது.

வங்கியின் தளமாடியில் இருந்து புறப்படும் லிப்டில் எலக்ரோனிக் உத்தரவுடன் X-1 என்ற தளத்தை அடையவேண்டும். அது எந்தத் தளமோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். அந்த X-1 தளத்தில் வந்து சேரும் வேறொரு லிப்டில் மீண்டும் தொற்றிக்கொண்டு எலக்ரோனிக் உத்தரவுகளைப் பிறப்பித்தாக வேண்டும். V1, V2, V3 போன்ற மேலதிக உத்தரவுகள் முதலாம், 2ம், 3ம் (Vault) பாதுகாப்புப் பெட்டக அறைகளுக்கு அதிகாரிகளை எடுத்துச்செல்லும்.

லிப்டுகளுக்கான எலக்ரோனிக் உத்தரவுகள் சரிவர வழங்கப்படாதவிடத்து அவற்றுக்குள் அகப்பட்டுக் கொள்ளவேண்டியதுதான். மீட்பு பணிக்காக வரும் பாதுகாப்பு அதிகாரிகள்தான் பின்பு கருணைகாட்ட வேண்டும்.

இந்த் வங்கியின் வாடிக்கையாளர் வாகனத்தளமான B1ஐ நோக்கியே கரோலின் வெண்புறா - கார் புறப்பட்டு வீதியில் இறங்கிவிட்டது. அருகே டானியல்!

( தொடரும் )

**திடீர்த் திருப்பங்கள்!**
**இரத்தத்தை உறையவைக்கும் திகில்!**
**விளங்காத தொழில்நுட்பம்!**
**அதிஉச்ச விறுவிறுப்பு!**
**மேலும் பல நவீன உலக நடப்புகள்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நெறி காப்போம்!

கடல் போலும் ஆசையினால் உலகவாழ்வில்
கலங்குகின்ற மானிடமே ஒன்று கேளாய்
விடம் போல ஆசையது மனதில் ஏறின்
வீணான துன்பங்கள் தம்மில் வீழ்த்தும்;
திடவுறுதி எல்லாமும் சிதறிப் போகும்;
சீரான வாழ்க்கை நெறி சிதைந்த போகும்.
திடமான புதுஉணர்வு மனதை வெல்லும்
திறனாலே புவிவாழ்வு இனிமை சிந்தும்.

ஆங்காங்கே வாழ்கின்ற மனிதரெல்லாம்
அகிலத்தாய் ஈன்றெடுத்த சோதரர்கள்
பாங்குறவே வாழ்நிலையில் சூழலாலே
பலநெறிகள் மனிதரிடை எழுந்ததுண்டு
ஓங்குயரும் நன்நெறிகள் தம்மையெல்லாம்
உதறி மனம் விலங்குநிலை அடைதலிங்கு
தீங்குதரும்; அறிவுகெடும்; தீயபண்பு
சேர்ந்த பின்னும் மனிதரெனும் பெயருமுண்டோ?

விலங்குகளாய் அந்நாளில் வாழ்ந்தபோது
விதவிதமாய் நாவினிலே எழுந்த ஓசை
வழங்கிவரும் நாளினிலே மொழிகளென்று
வளர்ந்த பின்பு சிந்தனையும் சிறப்பும் பெற்று
துலங்கியது மனுநீதி வாழ்க்கை தோறும்
தோன்றியது மானிடரே நாகரிகம்
நலங்கெடவே இவையாவும் விட்டுத்தள்ளி
மனம் போன போக்கில் நாம் வாழ்வதாமோ?

பாலியலில் நெறிமுறைகள் படைத்து வைத்தார்
பருவநிலை உணர்ச்சிகளில் விதிகள் செய்தார்
மேலுறவே மனந்தன்னை கட்டியாளும்
மிருகநிலை இல்லாநன் மேன்மை கண்டார்
காலமதில் ஆபாசக் காட்சியாலே
கண்ணின்றிப் பாலுணர்வின் அடிமையாகி
கோல எழில் குணநெறிகள் கல்வி என்னும்
கொள்கை நெறி விட்டெங்கு மனிதம் போகும்?

ஆனதினால் மானிடரே மனிதநீதி
அத்தனையும் மறவாது கற்பு என்னும்
மானநெறி கன்னியர்க்கும் காளையர்க்கும்
மதிகேட்டைத் தடுத்திங்கே மகிமை நல்கும்.
ஈனமுறும் கவர்ச்சி வெறும் காமலீலை
எந்நாளும் மனிதரெனும் பெயரை வீழ்த்தும்
மேனிலைகள் குன்றாது நம்மைக் காக்கும்
மனிதநெறி என்கின்ற மாண்பு காப்போம்.

ஞாலமிதில் வாழ்வுநெறி நாகரிகம்
நாசமுற கீழ்நிலைகள் பெருகுமென்றால்
ஆலயங்கள் வணக்கமுறை மதங்கள் ஏனோ?
ஐயையோ மானிடமே அறிவு எங்கே?
சீலமுறுஞ் சிந்தனையின் திறன்களெல்லாம்
சிதைந்திடவே நெறிபிறழ்வு வாழ்க்கையாமோ?
காலமிது துணைபுரிய மனிதரெல்லாம்
கருத்துடனே மனிதநெறி காத்துவாழ்வோம்.

- வளலாய் ரஞ்சன் -

# கொழும்புப் பயணம்.....!

கஸ்தூரி சிகப்பு!
கிளிமூக்கு! நல்ல உயரம்!
நதி போல நடை
கண்களும் பெண்களும்
பொறாமை கொள்ளும் கொள்ளை
அழகு!
அவளை வர்ணிக்க.......!
நான் ஒன்றும் கவிஞன் அல்ல;
ஆனால்
தீபன் நன்றாய் கவிதை சொல்
வான்.
அவளைப் பற்றிக் கதையா விடில்
அவன் மனம் தூங்காது.
அவளுடன் பேசாவிடில்
மதியம் கூட உண்ணான்.
அவளுக்கும் அவன் மீது
ஆசை!
எல்லாப் பெண்களும் அவனுடன்
நல்லாயே பேசுவார்கள்.
அவன் வகுப்பில்
முதல் மார்க்கு; நான்
முதல் மக்கு.
அவன் பட்டப்படிப்புக்குப்
பேராதனை போனான்.
நான் பட்டறையில் கல்லடிக்க
பெரியப்பனிடம் போனேன்.
ஒவ்வொரு முறை எனக்கு வரும்
கடிதத்துடனும் கலவி கொண்டபடி
அவளுக்கும் கடிதம் வரும்!
எங்களைக் கொழும்புக்கு வரும்படி
அடிக்கடி எழுதுவான்.
என்ன செய்ய கடையைப்பூட்டி
விட்டுப்
போக முடியுமே!
பத்து வருடத்துக்கு முன் யாழ்.
வந்தவன்! இப்போதெல்லாம்
அவன் கடிதம் மட்டுமே வரும்.
அதை அப்படியே கஸ்தூரியிடம்
கொடுத்துப்படி என்றேன்.
கஸ்தூரி சொன்னாள்;
'பிள்ளைகளுக்கும் விடுதலை
வாருங்கோவன் ஒருக்காப்
போட்டு வருவம்!'

- தெய்வீ -

# காளான் குடைகள்

வெள்ளைக் காளையின் விஷமத்தாலே;
பள்ளம் பெற்ற பாலகர்தானோ!

மழைநார் கொண்டு மணமகளுக்கு
அழகாய்த் தொடுத்த மல்லிகைச் சரமோ!

வெப்ப நோயாலோ வெடித்த நிலத்தில்
கொப்பளிப்பானோ குளிர்காலத்தில்!

வெம்மையில் வராத அம்பாள் நோயேன்
தண்மையில் குளிரில் தாய்மண்ணிற்கு

எந்தப் பல்லவச் சிற்பியின் உளியும்
வந்துதொடாத வாலையின் மார்போ!

சந்திரச் சேவல் கார்முகிற் பேட்டை
மந்திரம் போட்டு மயக்கி மதிக்க

கார்முகில் கண்ட பிரசவ வலியில்
வேர்விட்டெழுந்த வெண்முட்டைகளோ!

அழுக்கினை மூடிய அகிம்சைக் குடைகளோ!
புழுத்தொழிற்சாலையின் புகைப் போக்கிகளோ!

நிலத்திலும் பரவிய நிறவெறிச் சைகையோ!
மலத்தின் மேலோர் மலைப்பிரசங்கமோ!

வெள்ள இராணுவம் விரைந்து வருகையில்
அள்ளுண்ணாமல் அடிநில எறும்புகள்

உயர்த்தப் பிடிக்கும் வெள்ளைக் கொடிகளோ!
முயலின் தலையோ; முழச் சாமரையோ!

தீர்வுப் பொதியின் திரண்ட வடிவோ!
ஊர் ஜனநாயக உண்மை நிலையோ!

பேச்சு மூச்சின்றிப் பெருமழை வரவே
'ஆச்சரியக் குறி' கொண்டது நிலமோ!

வன்மையின் உச்சம் மென்மையின் தொடக்கம்
மென்மையின் உச்சம் வன்மையின் தொடக்கம்

என்கின்ற 'ஓஷோ' தத்துவம் போல

அழுக்கினதுச்சம் தூய்மையின் தொடக்கம்
விளக்குவதற்கோ வெண்ணிறத் தோற்றம்!

காளான் குடைகளே கவிதையில் நானுமை
ஏளனம் செய்கிறேன் என எண்ணாதீர்

இயற்கை விதைத்த எச்சிறு துரும்பும்
உயர்வு தாழ்வெனும் உணர்வு கடந்தவை!

- ச.முகுந்தன் -




# எங்கே அந்த ரோஜாக்கள்!

அந்த முன்வீட்டில்
முப்பது றோஜாக்கன்றுகள்
ஏன்?
அந்த முடக்குவீட்டிலும்
கூட்டம் கூட்டமாய்
வடிவான றோஜாக்கள்...
நம்பமாட்டீர்கள்!
சந்தி வீட்டில்
அடுக்கடுக்காய்
எங்குபார்த்தாலும்
எடுப்பான றோஜாக்கள்.
எத்தனை வகைகளில்
கொத்தாகக்
கொழித்தபடி.....
ஆனால்! இப்போ......
மழைகாலம் தானே
மறுகரையில் பதிவைக்க
இடம் பெயர்க்கப்பட்டனவோ?
இல்லை,
அடுத்து ஊர் தெருக்களில்
தெருவிளக்காய்
நட்டுக்கிடக்கிறதோ
இல்லை,
பட்டுக்கிடக்கிறதோ
வாசத்திற்கு வேலை அற்றும்
வாடாமல் கிடக்குதோ
மழைக்கால றோஜாக்களின்
வதனங்கள்
வாடியிருக்கும்
பதில் பூக்களாய்
பூஜைக்கு அரங்கேறியிருக்கும்
மொட்டுக்கள் வெடிக்கும் சத்தம்
எங்களுக்குக் கேட்காவிடினும்
இதழ்களை இம்சிப்பதாய்
இலங்கையே சொல்கிறது!

- கலைவாணி -

# பக்குவம்

யார் பெரியதென்று அதிகாரப் போட்டியொன்றோர்
தாவரத்தில் நிகழ்ந்தது!
நான்தானே......
மணம், சுவைத்தேன் கொண்டு;
வரும் வண்டுகளைக் கூடிக் குலம் வளர்த்தேன்
''என்திறனே பெரி''தென்று எகிறியது பூ!
''இல்லை'';
நான்தான் கதிரவனை நக்கி உணவாக்கி
நீ கூட வாழ நீட்டுகிறேன்; ஆதலினால்
நான்தான் பெரிதென்று
நாண்டு இலை துள்ளியது.
''உங்கள் இருவரையும் உயரத்தில் வைத்ததுவே
எந்தன் பலம்தானே''
''எனவே நான்தான் பெரிசு''
என்று இலை பூ நடுங்க உலுப்பியது தண்டு;
மண்ணுள்...........
மௌனம் துறந்திடாமல், வடிவை வரிந்திடாமல்,
வாசம் பரப்பிடாமல்,
வர்ணம் நிரப்பிடாமல்,
யாருக்கும் தெரிந்திடாமல், நின்றவேர்கள்....
நெடுமூச்சு
விட்டு விட்டும் தம்கடனை
விடாமல் நிகழ்த்தினவாம்!
''தட்டுப்பாடு...... கவர்ச்சிக்கு என்றாலும் தாவரத்தின்
கட்டுப்பாடு என் கையில்;
நான்....... பலத்தைக் காட்டுங்கால்
பட்டுவிடும் தண்டு, இலை, பூ பாவம்'' என்று
நினைத்து 'அவைக்காய்'
எட்ட உள்ள நீர்தேடி
தொடர்ந்துவேர் வளர்ந்ததடா!
'பக்குவப் பட்டவற்றின்'
புகழ்... பாருக்கு எட்டிடுமா!

- த. ஜெயசீலன் -

# சில திங்கள் கடந்த பின்னர்.....!

முகவரியை கையில் வைத்து - என்
முன் மனையை தேடினேன் - களைத்தேன்
பள்ளம் விழுந்த வீதியில்லை - கரை
பக்கங்களில் குப்பையில்லை!

ஷெல் உடைத்த கட்டடங்கள்
சென்ற திசையெதிலுமில்லை
சொர்க்கமா இதுவென்று சொக்கிப் போனேன்!

அரைக்காற் சட்டையுடன் அன்ரிகள் நடக்க
'லிப்டிக்' கலரும் 'சன்கிளாஸ்' சைனிங்கும்
கண்ணை குத்தவே முழித்தேன் - விழித்தேன்
'அட்ரசைக்' காட்டி கேட்கவும் நினைத்தேன்.

எங்கும் தமிழ் பேசக் காணோம் - இது
யாழ். நகரா? இல்லை தலைநகரா?
தலைகால் புரியாது திகைத்தேன் - சலித்தேன்

நங்கையர் எல்லாம் நாகரிகமாக.......
நான்மட்டும் பழமையுடன் - புரியவில்லை
யாழ்ப்பாணமா! இது முன்னேறி விட்டதே
யாருக்கும் இங்கு தமிழ் தெரியவில்லையே
வழி மாறி வந்தேனோ?
வலுவின்றிப் போனேனா?

சரியாக வந்தது........
சாலைப் பக்கமாய் சென்று
சுற்றிலும் பார்த்தேன்
ஒருத்தரும் வரவில்லை
சற்று நிம்மதியானேன்.

மதிலின் பின்னிருந்து - மாயமாய்
ஓர் உருவம் சடாரென எழுந்து
'சலம் விடுவதற்கு எம்மிடம்
ஐசி யெடுத்தாயா?...........'
..........!..............!............!

- முத்துமாரி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எலக்ரோனிக் யுகத்தில்

**'புதிய நூற்றாண்டில் வங்கி வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் எவ்வாறு மாற்றமடையும்?' என்ற தலைப்பில் கடந்த வார சஞ்சீவியில் வெளியான கட்டுரையின் இரண்டாவது பகுதி இது.**

**இக்கட்டுரையை வரைந்தவர் மு.சிவநேசன்.**

தன்னியக்க கருமபீட இயந்திரங்கள் பெருமளவில் அறிமுகமாகிவருகின்றன. உலகநாடுகள் யாவற்றிலும் உள்ள வங்கிக்கிளைகள் அனைத்திலும் இவ்வியந்திரங்கள் அறிமுகமாகி அவை யாவும் ஒரே கணனிப்பொறி முறைக்கு இணைக்கப்பட்டால், கண்ணில்பட்ட இடமெல்லாம் இவ்வியந்திரங்கள் தென்பட்டால் வாடிக்கையாளர்களுக்குக் கொண்டாட்டம்தான். கட்டுக்கட்டாகப் பணத்தைப் பெட்டியில் எடுத்துச் செல்லும் அவசியம் எழாது. ஏன் சட்டைப்பையில் கூட அதிகம் பணத்தை எடுத்துச் செல்லவேண்டியதில்லை. ஒரு அடையாள அட்டை அளவான பிளாஸ்டிக் அட்டையே அவருடைய பணப் பெட்டி ஆகிவிடும். இது தொலைந்தாலும் களவுபோனாலும் கூட எடுத்தவருக்குப் பயனற்ற பொருளாகவே அமையும். தன்னியக்கக் கருமபீடங்கள் முன்னேறிவரும் நகரங்களில் ஆயிரக் கணக்கில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுவரும்வேளை வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை குறைக்கப்படலாம் என்ற அளவுக்கு வாடிக்கையாளர்கள் தமது கவனத்தை இத்தன்னியக்கக் கரும பீடங்களை நோக்கிச் செலுத்தி வருகிறார்கள்.

பணம் புதிய [illegible]வங்களை எடுப்பதும் அவை மக்[illegible]க்குச் சௌகரியமாக அமைவதும் வங்கி நடைமுறையில் மாற்றங்களைப் புகுத்தத்தான் செய்யும். முன்பெல்லாம் நாணயங்களாகவும் பின்பு பணத்தாள்களாகவும் இருந்த நிலை மாறி காசோலைகள் பெருமளவில் புழக்கத்திற்கு வந்தன. ஒரு காசோலையை ஒரு கொடுப்பனவுக்காக ஒருமுறைதான் பயன்படுத்த முடியும். இதை இன்றைய வாடிக்கையாளர்கள் பலரும் பெரிதாக ஏற்க விரும்புவதில்லை.

காசோலை புத்தகங்களைக் கொண்டுதிரிவது ஒரு சிரமம். குறிப்பிட்ட ஒருதொகைக்கு அதை வரைந்து பெற்றுக்கொண்டபின் மீண்டும் வங்கிக்கு ஓடவேண்டும். பிறவங்கிகளிலோ பிறகிளைகளிலோ வைப்பிலிட்டுவிட்டுத் தீர்வைக்குக் காத்திருக்கவேண்டும். இவற்றுக்குப் பதிலாக பிளாஸ்டிக் அட்டைகள் பிரபல்யமாகிவிட்டன. இந்த எலக்ரோனிக் (இலத்திரனியல்) பண அட்டையில் தகவல் பதியப்பட்டிருக்கும். அதை மீண்டும் மீண்டும் கொடுப்பனவுகளுக்காகப் பாவிக்க முடியும்.

இந்த எலக்ரோனிக் அட்டைகளை வங்கிகள் பல்வேறுவிதமாக அறிமுகப்படுத்திவருகின்றன. கணக்கில் உள்ள பணத்தை எடுப்பதற்கான அட்டைகள் ஒரு வகை. சேமிப்புக் கணக்குகளிலோ நடைமுறைக் கணக்குகளிலோ உள்ள பணத்தை இவ்வட்டைகளின் மூலம் ஒரு தன்னியக்கக் கருமபீடத்தில் பெற இயலும். தாம் கணக்கு வைத்திருக்கும் வங்கியின் கிளையில் மட்டுமன்றி தாம் செல்லுமிடமெல்லாம் இருக்கும் எந்தவொரு இயந்திரத்திலும் இதைக் காசாக்கிவிடும் வசதிகளை வாடிக்கையாளர் எதிர்பார்க்கிறார். வேற்றுநாடுகளுக்குச் செல்லும்போது கூட இந்த அட்டையுடன் சென்று சமாளித்து விடலாமா என்பதே அவரது எதிர்பார்ப்பு. இதற்கு நாணயமாற்று போன்ற சிக்கல்கள் இடையூறாக அமைக்கூடாது.

இரண்டாவது வகை கடன் அட்டைகள் Credit cards எனப்படுகிறது. இவற்றைப் பயன்படுத்தி பொருள்களைக் கொள்வனவுசெய்யவும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும் வாடிக்கையாளர்கள் பழகிவருகிறார்கள். இவற்றைப் பயன்படுத்த ஏற்கனவே கணக்கில் பணம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே இவற்றை வங்கிகள் கட்டுப்பாடுகளுடனேயே விநியோகித்துவருகின்றன.

மேற்சொல்லப்பட்ட இரண்டு வகையான அட்டைகளுக்கும் பணத்தைப் பெறவோ பொருள்களை வாங்கவோ ஒரு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருப்பது பல சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளருக்கு இடையூறாக அமைகிறது. இவற்றைக் கொண்டு பெரிய கொள்வனவுகளைச்செய்ய இயலுவதில்லை. சிலவேளைகளில் வங்கிகள் தமது தன்னியக்க இயந்திரங்களில் போதிய பணத்தாள்களை இருப்பில் வைக்கத் தவறிவிடுகின்றன. இத்தகைய இடையூறுகள் இனியும் தொடர்வதை வாடிக்கையாளர்கள் விரும்பமாட்டார்கள்.

இரண்டாவது வகையென இங்கு சொல்லப்பட்ட கடன் அட்டைகளைப் பயன்படுத்தி தன்னியக்க இயந்திரத்தில் ஒரு குறிப்பிட்டளவு பணத்தைப் பெறும் வசதிகூட அறிமுகப்படுத்தப் பட்டுவிட்டது. இது கடனுக்குப் பணத்தைப்பெற ஒரு சுலபமான நடைமுறை ஆகிவிடுகிறது. குறுகிய காலத்தில் கணக்கில் இடப்படவேண்டிய இச்சிறு கடன்களுக்கு வட்டி அறவிடப்படுகிறது. எனினும் இத்தொகை நாளடைவில் பெரிய தேவைகளுக்கும் உதவும் வகையில் அதிகரிக்கப்படல் வேண்டும் என்பது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பாகும்.

கணக்கிலிருக்கும் பணத்தை எடுக்கும் அட்டைகளுக்கே பணக்கொடுப்பனவில் உச்சவரம்பை விதித்திருக்கும் வங்கிகள், கடன் அட்டைகள் விடயத்தில்மேலும் எச்சரிக்கையாகவேஇருக்க நினைப்பது வங்கிகளைப் பொறுத்தவரை ஒரு முன்னெச்சரிக்கையான பாதுகாப்பு நடவடிக்கைதான். எனினும் அது வாடிக்கையாளர்களின் அதிகரித்துவரும் தேவைகளை ஈடுசெய்ய இடைஞ்சலாகவே அமைகிறது.

வங்கி வைப்புக்களோ, வங்கிக் கடனோஇன்றிப்பணப்பெறுமதிக்காகவே வழங்கப்படும் மூன்றாவது வகை அட்டைகளும் புழக்கத்துக்கு வந்துள்ளன. இவை எலக்ரோனிக் பணப்பை (Electronic Wallets)எனப்படுகின்றன. இவற்றில் இருந்து பணத்தைப் பெறவும் பொருள்களைக் கொள்வனவு செய்யவும் இயலும். இவற்றில் எலக்ரோனிக் தொழில்நுட்பம் மூலம் புகுத்தப்படும் பெறுமதியை அதிகரிக்கவும் வேறொருவருக்கு மாற்றிக்கொடுக்கவும் முடியும்.


இத்தகைய எலக்ரோனிக் பணப் புழக்கம் எதிர்வரும் ஆண்டுகளில் மிக வேகமாக அதிகரிக்கவேசெய்யும். வங்கிகள் வாய்ப்பளித்தால் இவை கிராமப் புறங்களுக்குள்ளும் புகுந்து கொள்ளத் தயாராகவே இருக்கும். இவற்றுக்காக எழும் கேள்வியை எதிர்வரும் ஆண்டுகளில் சமாளிக்க வங்கிகளால் இயலுமா? என்ற கேள்வி எழத்தான் செய்யும்.

போதிய தன்னியக்க இயந்திரங்கள் தேவைப்படும். அவற்றின் முன்னாலேயும் வரிசைகள் வந்துவிடக்கூடும். போதியளவு பணத்தை அங்கு கையிருப்பில் வைத்திடல் வேண்டும். பெருமளவில் விநியோகிக்க இவற்றை ஏற்கும் நிலையை வங்கிகள் உருவாக்கிடல் வேண்டும். எலக்ரோனிக் பணப்புழக்கம் பணத்தாள்களின் பாவனையை ஒதுக்கிவிடாமல் சமநிலையைப் பேணவும் வேண்டும். இன்றேல் சாதாரண வாடிக்கையாளர்கள், சிறு சிறு கொள்வனவுசெய்பவர்கள் பாதிக்கப்படலாம்.

காசோலைகளைப் போலவே எலக்ரோனிக் பணமும் ஓரளவுக்கு பணத்தாள்களின் பெருமெடுப்பிலான விநியோகத்தைச் சற்றுக்குறைக்கவே முயலும் எனலாம். இன்று நாட்டில் உள்ள பணப்புழக்கம் முழுவதையும் பணத்தாள்கள் மூலமே செய்வதென்பது கற்பனையிலும் நினைத்துப்பார்க்க இயலாத காரியம். எனினும் கிராமங்களில் இன்னும் காசோலைகளைக் கண்டு மருளுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். எனவே எலக்ரோனிக் பணப்புழக்கம் மேன்மேலும் அதிகரிக்கும்போதும் பணத்தாள்களுக்கான கோரிக்கையை ஒருசாரார் விடுத்துக்கொண்டுதான் இருப்பார்கள். இரண்டுவகை எதிர்பார்ப்புக்களையும் வங்கிகள் நிறைவுசெய்தே ஆகவேண்டும்.

# வாடிக்கையாளரின் படலை வரை

பல வங்கிகளும் பல கிளைகளும் அமைந்த வலையமைப்பு, வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்புகளை அதிகரிக்கும் அதேவேளை சிக்கல்களையும் தரத் தவறுவதில்லை. வங்கிகளின் நிர்வாகச் செலவுகள் போன்றவற்றின் அதிகரிப்பால் திணறுவது வாடிக்கையாளர்களே. எலக்ரோனிக்



அறிமுகம் வங்கித் தரகுகளைக் குறைந்த கட்டணத்தில் அறவிட வழி வகுக்கும்வரை வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த எந்தச் சேவையாலும் இயலாமற்போய்விடும். அத்தோடு வெவ்வேறு வங்கிகள் வெவ்வேறு வசதிகளுடன் அட்டைகள் பலவற்றையும் அறிமுகம்செய்வது வாடிக்கையாளர்களுக்குத் தலைவலியைத் தரக்கூடும். பலரும் எல்லா வகை அட்டைகளையும் பயன்படுத்திப் பயன் பெறத் துடிக்கிறார்கள். அந்தந்த அட்டைகளைக் காசாக்கும் இயந்திரங்களைத் தேடியோ, கடன் கொடுக்கும் அல்லது பொருள்களை விநியோகிக்கும் முகவர்களைத்தேடியோ அலைவது நகரங்களில் பழக்கப்படாதவர்களுக்கு ஒன்றும் சுலபமான காரியம் அல்லவே.

எனவே இந்தப் போக்கில் இதனை விட்டுவைக்காது வங்கிகள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டிய கட்டம் எழுகிறது. எல்லா வங்கிகளும் தமது இயந்திரங்கள், அட்டை அமைப்புக்கள், கடன்அட்டை முகவர்கள், விற்பனையாளர்கள் போன்ற அம்சங்களை ஒருமுகப்படுத்தினால் ஓரளவுக்கு சிக்கல்கள் சுமுகமாகத் தீரக்கூடும். எந்த அட்டையையும் எந்த இயந்திரத்திலோ முகவரிடமோ செலுத்திக் காரியத்தை ஒப்பேற்றிவிடும் வசதி வாடிக்கையாளருக்கு வாய்த்துவிடும்.

நிலைமை இப்படி ஆகிவிட்டால் எலக்ரோனிக் அட்டைகளைப் பொறுத்தவரை ஏகப்பட்ட வங்கிகளோ, அவற்றின் ஆங்காங்கே திறந்திருக்கும் கிளைகளோகூட அவசியமற்றதாகிவிடும். வாடிக்கையாளர்கள் வங்கியாளர்களின் முகம்பார்த்துப் பேசித் தமது அலுவல்களைச் செய்யாது எலக்ரோனிக் மொழிபேசிச் சுலபமாகக் காரியத்தை முடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அகப்பட்ட இடத்திலெல்லாம் இயந்திரங்கள் கண்ணில் பட்டால் போதும் என்ற நிலைமை.

காசோலைகள் தீர்வையாகும் முறைகளையெல்லாம் பார்க்கும்போது பல்வேறு வங்கிகளும் அவற்றின் பல்வேறு கிளைகளும் சிக்கலையே தருவதாக நவீன வாடிக்கையாளர்கள் நினைக்கக்கூடும். தீர்வைத் தரகுகள் வாடிக்கையாளரைப் பொறுத்தவரை அவசியமற்றவை. வெவ்வேறு வங்கிகள் வெவ்வேறு திட்டங்களைப் போட்டு விளம்பரம் செய்வதைவிட அனைத்துச் சேவைகள், வசதிகளையும் ஓரிடத்தில் பெற்றுப்போய்விடவே வாடிக்கையாளர் விரும்புவர்.

வங்கிகள் ஒருங்கிணைந்து செயற்படும்போது உருவாகும் செலவுச் சிக்கனம் வாடிக்கையாளருக்கே பயனைத் தருகிறது. எலக்ரோனிக் அறிமுகத்தினால், வங்கிகளின் ஒருமித்த செயற்பாட்டினாலும் அலைச்சலும் செலவும் மீதமாகும் என்றே வாடிக்கையாளர் கருதுகிறார்.

சர்வதேச வியாபாரம் பெருகிவரும் காலகட்டத்தில் நாட்டுக்குள் மட்டுமல்ல, நாடுகடந்தும் செல்லுமிடமெல்லாம் அதே வங்கிச் சேவையைப் பெறுவதே வாடிக்கையாளரைப் பொறுத்தவரை விரும்பப்படும் எனலாம். நாட்டுக்கு நாடு வெவ்வேறு வங்கிகளில் கணக்குகளை வைத்துக் கொண்டு வியாபாரத்தில் ஈடுபடவும் அவற்றுக்கெல்லாம் தரகு கொடுத்து அலுவல்களைச் செய்விக்கவும் வாடிக்கையாளர் தயாரில்லை.

எனவே வங்கிகள் பலவும், பல்வேறு நகரங்களில் நிர்வாக மையங்களையும் வீதிக்குவீதி போட்டிக்குக் கிளைகளையும், வெவ்வேறான தன்னியக்க இயந்திரங்களையும், வாடிக்கையாளரை ஈர்க்கும் வேறுபட்ட திட்டங்களையும் கொண்டிருப்பது எலக்ரோனிக் யுகத்தில் முட்டுக்கட்டையாகவே அமையும்.

வங்கிகள் தமது அனைத்துச் சேவைகளையும் கணனிகளையும் தன்னியக்க இயந்திரங்களையும் கொண்டு சாதித்து விடவும் இயலாது. பணத்தை வைப்பிலிடுவதும் மீளப்பெறுவதும் மட்டுமே வாடிக்கையாளர்களின் தேவை அல்லவே.


வியாபாரத்துறையில் காலத்துக்குக் காலம் வேண்டிய ஆலோசனைகளையும் கடன் வசதிகளையும் வங்கிகளிடம் வாடிக்கையாளர்கள் எதிர்பார்த்தே இருக்கிறார்கள். இவ்விடயங்களில் நேரடியாகவே வாடிக்கையாளர்கள் வங்கியாளர்களை அணுக வேண்டிய நிலைமை எழுகிறது.

விரிவுபட்டுவரும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகள், அறிமுகமாகிவரும் புதிய துறைகள், உற்பத்திகள், அவற்றையெல்லாம் தாமும் உள்வாங்கி மறுசீரமைப்பை நாடிநிற்கும் நிறுவனங்கள் என வேகமாக மாற்றமடைந்துவரும் நவீன உலகில் வங்கிக் கடன் இன்றி பல்வேறு நிறுவனங்களாலும் தனியாராலும் தாக்குப்பிடிக்கவே இயலாது. எனவே, அதிகரித்து வரும் அவர்களது தேவைகளை இனங்கண்டு உதவவேண்டியது வங்கி

# வங்கிக் கரும பீடங்கள்!

களின் பொறுப்பு ஆகிறது.

கடன் விண்ணப்பத்தைப் பெற்று ஆறஅமரப் பரிசீலித்துத் தனக்கு வசதியான நேரத்தில் கடனைக் கொடுக்கும் வங்கிகளின் மந்தமானபோக்கு இப்போது எடுபடாது. கடன் கொடுக்கும். தீர்மானத்தைக் கூடியவிரைவில் எடுத்தால்தான் வாடிக்கையாளர் மாற்று



வழிகளைத் தேடிக்கொள்ள வசதியாக இருக்கும். முடிவுகளைத் தாமதப்படுத்துவது எலக்ரோனிக் யுகத்தில் வாடிக்கையாளருக்குப் பாரிய நட்டங்களைக் கொடுக்கலாம்.

தமது பாதுகாப்பு ஒன்றையே குறியாகக் கொண்டு கடன் வழங்கலில் தயக்கம் காட்டும் வங்கிகளால் வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்ள முடிவதில்லை. உரிய நேரத்தில் கொடுக்கப்படாமல் காலந்தப்பிவிட்டால் கொடுத்த கடன்களிலிருந்து சரியான பயனை வாடிக்கையாளரால் பெறமுடிவதில்லை. இதனால் அவர் சிரமப்படும்போது அறவீட்டைச் சுலபமாக மேற்கொள்ள இயலுவதில்லை.

அறிமுகமாகிவரும் புதிய துறைகளில், ஆராயாது கடன்களை வழங்கி சிக்கலில் மாட்டிக்கொள்வதும் வங்கிகளைப் பொறுத்தவரை விரும்பத்தகாத நிலைமைதான். அதற்காக வாடிக்கையாளர்களைக் கைவிட்டு விடுதலும், அபிவிருத்தி, முன்னேற்றம் என்பவற்றைத் தடுப்பதாகி விடக்கூடும். எனவே இது விடயத்தில் பரந்த நோக்கும் ஆழ்ந்த அறிவும் வங்கிகளிடம் இருக்கவேண்டும் என்றே வாடிக்கையாளர்கள் எதிர்பார்ப்பார்கள்.

தமது வங்கி பாதுகாப்பானதாக இருக்கவேண்டும், பலமாக இருக்க வேண்டும், நவீன மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க வேண்டும், குறைந்த செலவில் சேவைகளை அள்ளி வழங்க வேண்டும், வேண்டிய இடத்திலெல்லாம் அதன் சேவை எட்டவேண்டும் என்றெல்லாம் வாடிக்கையாளர் எதிர்பார்க்கிறார்.

வாடிக்கையாளரைப் பொறுத்தவரை நாணயமாற்று நடைமுறைகள் கூட வியாபாரத்துக்கு இடைஞ்சலாகவே அமைகிறது. இத்தகைய சிக்கல்களைச் சுலபமாக்க தமது வங்கிகள் தாம் செல்லும் நாடெல்லாம் கிளைகளைக் கொண்டிருந்தால்என்ன? அதே காசோலைப் புத்தகத்தையோ எலக்ரோனிக் அட்டைகளையோ கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்திவிட்டால் என்ன? என்றெல்லாம் எதிர்பார்ப்புக்களை வளர்க்கவேண்டிய தேவை எழுகிறது. இதற்குரிய நாணயமாற்று வசதிகளை இலகுபடுத்திக் கொடுக்கவேண்டியது வங்கிகளே.

பெரிய கூட்டுத்தாபனங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் தமது அலுவலகங்களையும் தொழிற்சாலைகளையும் கொண்டிருத்தலால் அவற்றின் வங்கிச் சேவைகள் எங்கும் ஒரே விதமாகவே எதிர்பார்க்கப்படுகின்றன. இத்தகைய தேவைகளை அந்தந்த நாடுகளின் உள்நாட்டு வங்கிகள் வழங்குவதில் சிரமத்தையே எதிர்நோக்கும். உள்நாட்டு வங்கிகளை விட சர்வதேச வங்கிகள் இத்தகைய பாரிய வாடிக்கையாளர்களை இலகுவில் கவர்ந்துவிடுகின்றன.

பதினொரு ஐரோப்பிய நாடுகள் இணைந்து 1999 இல் அறிமுகப்படுத்திய 'யூரோ' நாணயம் ஐரோப்பாவின் பொது நாணயமாக வாடிக்கையாளர்களினால் ஏற்கப்படுகிறது. பல நாடுகளிலும் தமது வியாபாரத்தை நடைமுறைப்படுத்தும் வாடிக்கையாளர்களின் நாணயமாற்றுச் சிக்கல்களுக்கு இது நல்லதோர் நிவாரணம் ஆகிறது. இத்தகைய நாணயத்தில் அரசியல் பொருளாதார வேறுபாடுகளை மறந்து உலகநாடுகள் முழுவதும் இணைந்தால் அதுகூட வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரை கொண்டாட்டம்தான்.

இதனால் வாடிக்கையாளர்கள் நாணயமாற்றுத் தரகாக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு வழங்கும் பெருமளவு பணம் மீதமாகவே செய்யும் எனலாம். எல்லோரும் தமது உள்நாட்டுத் தேவைகளுக்குக் கூட பெறுமதியான - வலுவான - இப்போது நாணயத்தைப் பயன்படுத்த விரும்பவும் கூடும். செல்லுமிடமெல்லாம் ஒரே எலக்ரோனிக் அட்டையோ காசோலைப் புத்தகமோ ஒரே வங்கிக் கணக்கோ கைகொடுத்துவிடும். யூரோவில் இணைவதற்கு அதிலிருந்து தூர இருக்கும் நாடுகளின் வாடிக்கையாளர்கள் கூட முனையக்கூடும். இவர்களின் அபிலாசைகளுக்கெல்லாம் வங்கி நடைமுறைகள் தாக்குப்பிடித்தாக வேண்டும்.

உள்நாட்டு நாணயத்திலும் யூரோ நாணயத்திலும் ஆக இரண்டிற்குமே சம முக்கியத்துவம் கொடுத்து கணக்குகளை வைத்திருக்க வேண்டிய தேவை அந்தப் பதினொரு நாடுகளினதும் வங்கிகளில் தற்போது எழுந்துள்ளது. வாடிக்கையாளர்கள் சாயும் பக்கம் வங்கி தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தல் வேண்டும். இதற்கெனத்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்பு

தாட்சாயணி

எனக்கு ரெண்டு கொம்பு முளைத்திருக்கிறது. ஆரம்பத்தில் ரொம்பவும் சின்னதாக கண்ணுக்குத் தெரியாமற்றானிருந்தது. நாளாவட்டத்தில் கொஞ்சங்கொஞ்சமாய் முளைப்பு கிளைத்து வலுக்க ஆரம்பித்தது. அதைப்பற்றி நான் கொஞ்சங்கூட அலட்டிக் கொள்ளவில்லை. மறைவில் அதைப்பற்றி பலபேர் பிரஸ்தாபித்தாலும்கூட அதை நான் பெரிதாய் எடுத்துக்கொள்ளவில்லை. கொஞ்சங்கொஞ்சமாய் கூர்வுற்று வளர்கின்ற கொம்புகளுக்கு நறுநெய்பூசி வண்ணந்தீட்டி இன்னும் கண்ணைக் கவரும் விதமாய் செய்வதில்தான் கருத்தூன்றிக் கிடக்கின்றேன். ஆனாலும் ஒரு மனிதனுக்குக் கொம்பு முளைப்பது அசாதாரணம் என்பதால் என்னை ஒரு வினோதப் பிறவியாய், மந்திரக் கதைகளில் வருகிற யாளிமுகம்கொண்ட இளவரசனை நோக்குவது போல், ஒரு திகிலுடனும், பரபரப்பான வியப்புடனும் நோக்குகிறார்கள்.

இந்தக்கொம்பு எப்போது முளைத்ததென்பதை அவ்வளவு நுட்பமாகச் சொல்வதென்பது எந்தக் கணிப்பொறிக்கும் கொஞ்சம் கடினம் கொடுக்கும் காரியம்தான். மூன்றரை வயதில் ஓர் அசாதாரணமான மழை பெய்த விஜயதசமியில் எனக்கு ஏடு தொடக்கப்பட்டது. அப்போது எந்தவித பயமும், அழுகையுமில்லாமலே பள்ளிக்கூட வாத்தியார் 'ஆனா' எழுதும் முன்பே நான் எழுதிக்காட்டி அவரின் வியப்புப் பார்வையை அலட்சியமாய் ரசித்தபோதே அந்த அசாதாரணமான மழை என் கொம்புகளுக்கான வித்துக்கும் நீர் பகிர்ந்திருக்கவேண்டும். அப்போது குழந்தைத்தனமாய் பிஞ்சு படிந்து கிடந்த என் முன்தலைப்பிரதேசம் கொம்புகள் இடைஞ்சல் என்று ஏற்காமல் விட்டிருக்கலாம். பிறகு 'டபிள் டபிளாய்' வகுப்புகள் ஏறி என் கெட்டித்தனம் நிரூபித்து 'ஸ்கொலஷிப்பில்' வெ(ற்)றி கொண்டு யார் தயவுமில்லாமல் என் படிப்புச்செலவை அரச உதவியுடன் நானே ஏற்றுக்கொண்டபோது, முதன்முதலாக வழுவழுப்பாக, சின்ன உருண்டை விளிம்புகளாய் என் கொம்பு வெளிப்படத் தொடங்கியது.

"டேய், கண்ட கண்ட நேரம் றோட்டிலை திரிஞ்சு நேரத்தைக் கரியாக்காமல் போய்ப் படியப்பு....."

அம்மாவின் இரக்கம் தோய்ந்த பரிதாபமான கெஞ்சல். எனக்குள் முளைவிட்ட கொம்பு திமிறிக்கொண்டு தன் முகம் காட்டும்.

"நான் என்ன காசு கேட்டனே... உங்களிட்டை, ஒரு சதமும் எனக்கு நீங்கள் சிலவழிக்கத்தேவையில்லை. என்ரை காசு, என்னவும் செய்வன். அங்கை பவுடர் அப்பி, அப்பி உங்கட காசைக் கரிச்சுக் கொட்டுறாளே விமலா. அவளுக்குப் போய்ப் புத்தி சொல்லுங்கோ...."

கொம்புகள் குத்தக்கூடியவை. ஆனால் அப்போது ஆரம்பக் கட்ட வளர்வில் இருந்த அவை அம்மாவை லேசாக முட்டி கண்களில் நீரை மட்டும் தளம்பவைத்தன.

"அவன் கொலசிப்காரனெல்லே. அவனைப் படிக்கவைக்க எங்களுக்கு ஒரு சிலவுமில்லை"

அவள் பக்கத்துத் தலைகளுடன் பேசிக்கொள்ளும்போது என் கொம்புகளை நீவிவிட்டாற் போலிருக்கும்.

நாளாவட்டத்தில் நான் வளர்ந்து கொண்டிருந்தபோது சொட்டுச் சொட்டாய் கொம்புகளும் வளர்ந்தன. யார் இது? நண்பனா? பகைவனா என்றில்லாமல் யாரையும் முட்டித்தீர்த்தன.

பெட்டைகள் கூட வகுப்பில் நானில்லா வேளைகளில் என் கொம்பைப் பற்றிப் பேசிக்கொண்டனர்.

கொம்பு சில வேளைகளில் தங்களையும் குத்திவிடும் என்பதால் அதைப் பற்றிப் பேசும்போது கூட அவதானமாயிருந்தனர்.

கெட்டிக்காரனென்றாலும் கொஞ்சம் 'மென்ரல்' கேஸ் என்றும் இந்தக் கொம்புகள் மட்டும் இல்லையென்றால் தங்களில் ஒருத்தியே என்னை வளைத்துப் போட்டுக் கலியாணம் செய்து கொள்ளலாம் என்றும் அவர்கள் பேசியிருப்பதாக அவர்களது பரிகாசச் சிரிப்பினை உணர்கின்ற வேளைகளில் என் உள்ளுணர்வு சொல்லும். அப்போது என் கொம்புகள் இன்னும் கூர்மிகும்.

"பெட்டையள் அடுப்பூதிக் கிடக்க வேண்டியவளவை வந்திட்டாளவை படிக்கிறதுக்கு. ஆருக்காவது சொந்தமா மூளை இருந்தாத்தானை. உதிலை ஆராவது ஸ்கொலசிப்பிலை படிக்கிறாக்கள் இருந்தாச் சொல்லுங்கோடி பாப்பம். வந்திட்டாளவை தாய் தேப்பன்ரை காசைக் கரியாக்கி..... முகமெல்லாம் அப்பிக்கொண்டு மாப்பிளைதேட வெளிக்கிட்டாளவை..."

என் கொம்புகள் எந்த இடமென்று இன்றி உடம்பின் எல்லாப் பாகங்களையும் குத்தும். மிரளும் முகங்கள் எனக்கு 'மென்ரல்' தலைக்கேறி விட்டதென்றும், இனியும் சிரித்தால் ஆபத்திருக்குமென்றும், உணர்ந்து மெல்ல நழுவி விடும். போகட்டும் இவர்களுக்கென்ன... நானே என் கெட்டித் தனத்தாற் படிக்கிறேன். நான் என் காலில் நிற்கிறேன். பூமியில் படாத என் பாதங்களோடு.... ஹா.... எப்படி என் கற்பனை....?

மிக இளம் வயதுக்குள் 'கம்பஸில் கிளாசடித்து ஒரு எக்கவுண்டனாக வெளிவந்தேன். இன்னும் பல்கலைக் கழகச் சுவர்களில் என் சாதனை எதிரொலித்துக் கொண்டிருப்பதாக எனக்குள் ஒரு பெருமை. இந்த நேரம்தான் என் கொம்புகள் மிகப் பயங்கரமாய்த் தம் விஸ்வரூபம் காட்டத்தொடங்கின.

விமலா கல்யாணமாகி 'கனடா' வுக்கு ஸ்பொன்ஸர் செய்யப்பட்டாள். அவள் அங்கு 'ஏற்றுமதி'யாவதற்கு முன்பு பலபேரும் என் கொம்பைப் பார்த்துப் பயந்தார்கள். இப்போது அழகிய தேவதை போலிருக்கும் விமலாவுக்கும் 'சகோதர லட்சணத்தால்' பின்னாளிற் கொம்பு முளைக்கக் கூடுமோ என்று ஓர்அச்சம். எனக்கு கொம்பு முளைத்த விமலாவை எண்ணிப்பார்க்கவே விசித்திரமாக இருந்தது. காமதேனு போல இருப்பாளோ? இல்லை இந்த கொம்பு எனக்கே பிரத்தியேக உரிமை. இவை போன்ற 'அழகான' கொம்புகள் வேறு எவருக்குமே வாய்க்க முடியாது. விமலா என் தங்கையாக இருந்தாலென்ன....? அவளிடம் என்போன்ற அளவு கெட்டித்தனம் இல்லை. அவள் வெறும் மண்டு. அவள் மூளைக்குள் 'களி' இருக்கும் போது எப்படி இந்தக்கொம்புகள் அவளுக்கு விளையும்...?

நான் இப்படிக்கத்தியபோது வந்தவர்கள் பயந்து இந்த சகவாசமே வேண்டாமென்ற மாதிரி ஓடிப்போகப் பார்த்தார்கள். அம்மா கெஞ்சினாள்.

"அவள் தங்கமான பிள்ளை. இவனைப் போலயில்லை அவள். இவன் கூடச் சில நேரத்திலைதான் ஒரு மாதிரி..."

இதைவிட்டால் இனி விமலாவுக்குக் கல்யாணமே கூடாது என்கிற மாதிரி அவள் பேசினாள். நான் ஏதோ பேச முற்பட்டபோது என்னை உள்ளே பிடித்துத் தள்ளிவிட்டுத் தானே எல்லாவற்றையும் பேசிக்கொண்டாள்.

உள்ளே விமலா என் கொம்பைப் பிடித்து உலுக்கிக் கொண்டாள்.

"என்ன, அண்ணை, இந்த ஜென்மத்திலை நான் கலியாணங்கட்ட விடமாட்டாய் போலை...."

"அடி, உவங்களென்ன பெரிய ஆக்கள்? நானே உனக்குப் பெரிய மாப்பிள்ளையாப் பாத்து...."

"போ. அண்ணை, நீ பாப்பாய். உன்னை மாதிரியே ஒருத்தனை, இப்படிக் கொம்பு முளைச்ச ஒருத்தனும் எனக்கு வேண்டாம். எனக்கு சாதாரணமான ஒரு மனிசனே போதும்..."

என் கண்கள் எரிநெருப்பாய்ச் சிவந்தன. கொம்புகள் முறுகின. நரம்புகள் இறுகித் தளர்ந்து தசைக் கோளங்கள் துண்டுகளாய்ப் பிளந்து குமுறின.

"என்னெடி சொன்னனி. அப்பன்ரை காசெல்லாம் படிக்கிறன் படிக்கிறனெண்டு சொல்லி வீணாக்கி அழிச்சுப்போட்டு இப்ப என்னெடி கதைக்கிறாய்? உனக்கு எதிர்த்துக் கதைக்கிறதுக்கு என்னடி தகைமை கிடக்கு. ஒரு பி.ஏ, பிஎஸ்ஸி, ஒரு மண்ணுமில்லை என்னைப் பாரடி என்ரை பட்டங்களெல்லாம் எழுதி மாட்டிக் கிடக்கு. ஒரு சதம் செலவு வைக்காமல் படிச்சனாளெடி..."

கொம்புகள் மேலும் பலத்தோடு மூர்க்கமாய்க் குத்த ஆரம்பித்தன. கொம்புகளின் கூர்மை தாளாமல் விமலா கட்டிலில் விழுந்து விசும்ப ஆரம்பித்தாள்.

"சரியெடி தொடங்கு, உன்ரை சங்காரபரணத்தை."

அம்மா வந்தவர்களை வழியனுப்பி விட்டு உள்ளே வந்தாள்.

"என்னடா பொறுப்புள்ள ஒரு தமையனா அவளிண்டை கலியாணத்தை நடத்தி வைக்கிறதை விட்டிட்டு இதென்னடா..."

கவலையும்கோபமுமாய்க கேட்டாள்.

"நான்தானை சொல்லுறன் அவளுக்கு நான் செய்துவைக்கிறனெண்டு...."

அம்மா நம்பிக்கை இழந்தகண்களோடு பார்த்தாள்.

"மெய்யேடா சொல்லுறாய்....?"

குரலில் நிஜமாய் கொம்புகளில்லாத ஒரு மனிதனோடு கதைப்பது மாதிரி ஒரு பரவசம் ஒரு நிமிஷம் எனக்குள்ளிருந்த அம்மாப்பாசம் விழித்துக்கொள்ள சூரனுக்குஏற்பட்ட ஞானோதயமாய் இந்த கொம்புகளை உதறிவிட்டு மனித மிருகமாயில்லாமல் மனிதனாயிருக்கலாமென அம்மாவின் சந்தோஷத்துக்காக ஒரு ஆசை ஆரம்பிக்க, -

அதற்குள் விமலா திமிறி எழுந்தாள்.

"உவன் செய்து வைப்பானெண்டா நான் கட்டாயமா, கிணத்துக்கைதான் விழுவனம்மா. சொல்லிக்கிடக்கு. இப்பவே. ஒரு மிருகத்தோடை படுறபாடு பிறகும் ஒரு மிருகத்தோடை வாழேலாது....?"

ஒரு கணம் எனக்குள் உடைந்து நொருங்கிய கொம்புகள் மீண்டும் புதிசாய் புதுப்பொலிவுடன் சடுதியாய் முளைத்துப் பளீரிட்டன.

"சரியெடி பாப்பம், ஆரையாவது கட்டித்துலை. பிறகு இஞ்சை கண்ணைக் கயக்கிக் கொண்டு வந்தியோ நடக்கிறதே வேறை. சொல்லிக் கிடக்கு.."



அம்மாவால் யார் பக்கமும் உடனடியாகச் சார்ந்திருக்க முடியாமல் போயிற்று. என்றோ கனவு மிதந்த கண்களில் இப்போது கவலை திரண்டு வழிந்தது.

அழு அம்மா அழு! நன்றாக அழு, உன் மகளுக்குத் திடீரென்று நாக்கு நீண்டு போனதற்காகவும் உன் மகன் கொம்பு வளர்த்துத் திரிவதற்காகவும் நீ அழுது கொண்டேயிரு.

மனத்துக்குள் 'வாழ்த்துப்' பாடிக் கொண்டேன்.

எப்படியோ விமலா கல்யாணம் முடித்துக் கொண்டாள். கனடாவுக்கு 'ஸ்பொன்ஸர்' செய்யப்பட்டும் விட்டாள். போவதற்குமுன் அருகில் வந்து என்னோடு தனியக் கதைத்தாள்.

கல்யாணம் முடித்தவுடன் அனேகம் பெண்களுக்கு உடனடியாக ஏற்படுகிற சந்தோஷமும் பொறுப்புணர்ச்சியும் அவளுக்கும் ஏற்பட்டன.

"நீயும் இப்பிடியே நெடுக இருக்கேலாதண்ணா. நீயும் ஒரு கலியாணத்தைப் பண்ணினால் தானே நல்லது. நீயும் சுகமாய் இருக்கலாம். அம்மாவுக்கும் கரைச்சல் குறையும். ஏதோ யோசிச்சுச்செய் அண்ணா.."

நான் எதுவுமே பேசவில்லை. இந்தவேளை அவளுடன் நல்லபடியாகத்தான் பேசவேண்டுமென்பது அம்மா சொல்லாமலே எனக்குத் தெரிந்திருந்தபோதிலும் அதற்கு என் கொம்புகள் ஒரு போதுமே இடந்தரப்போவதில்லை.

கொம்புகளை உடைக்கிற அளவுக்கு என் மனம் ஒரு போதுமே இறங்கி வராது.

எனவே மௌனத்தோடு - கோபமென்றும், நாணமென்றும், சம்மதமென்றும், பலராலும் பல வகைகளிலும் விளங்கிக் கொள்ளப்படுகின்ற வினோதமான உணர்வோடு நின்றேன்.

அந்த 'மௌனத்தில்' கொம்புகளின் 'மிடுக்கு' இன்னும் உறைந்திருப்பதை அறிந்துகொண்ட விமலா. அதை உணர்ந்ததுபோல் காட்டிக்கொள்ளாமல், அதை சம்மதமென்று விளங்கிக்கொள்கின்ற பாவனையில், என்னையும், தன்னையும் சந்தோஷப்படுத்துகிற மாதிரி ஏதேதோ சொல்லிவிட்டு கொம்பு குத்தக்கூடாதே என்ற எச்சரிக்கை உணர்வுடன் மெல்ல நழுவிக் கொண்டாள்.

அவள் போனபின் அம்மா நச்சரிக்கத் தொடங்கினாள். தனக்கு வயது போகின்றது என்பதை விட எனக்குத்தான் ஏதோ வயது ஏகிறிக்கொண்டு போவதாக அடிக்கடி முணுமுணுத்தாள். இப்படியே இருந்தால் என் கொம்புகள் இன்னும் பயங்கரமாக வளர்ந்துவிடுமென்றும், அதன் பிறகு எந்தப்பெண்ணும் என்னை ஏறெடுத்தும் பார்க்கமாட்டாளென்றும் ஏங்கினாள்.

விமலா கூட இந்த உலகத்தில் கல்யாண சுகம் ஒன்றே பெரிதுபோலக் காகிதங்கள் எழுதினாள். இங்கே கம்பஸ் கூட 'என்றர்' பண்ணாத ஒரு 'மக்குப் பெண்' எனக்குப் போய் 'அட்வைஸ்' பண்ணுவதாவது. எதற்குமே நான் பிடிகொடுத்ததில்லை.

என்னைப் பார்த்துக் கொம்பு முளைத்திருக்கிறதென்று பயப்படுகின்றார்களே. அப்படி கொம்பு முளைத்த ஒரு பெண்ணையே கல்யாணம் பண்ணிக்கொண்டால் என்ன....? வேண்டாம்! அதை நான் ஒருபோதுமே அனுமதிக்கப் போவதில்லை. என்னுடைய கொம்பைவிடச் சிறந்ததாக மெருகுடன் எது இருப்பினும் அது எனக்கு எதிரானதே!

ஆனால் கொம்பு முளைக்காத எந்தப் பெண்ணும் என்னைத் திருமணம் செய்யச் சம்மதம் தருவார்கள் போற்தெரியவில்லை. அதற்கென்ன? அந்தப் பிரச்சினையைக் காலத்தின் கையில் ஒப்புவித்துவிடுவோம்.

இப்போது வேறொரு பிரச்சினையும் கூட. செக்கிங் தொல்லை. கொம்பு முளைத்த மனிதனையும், கொம்பு முளைக்காத மனிதனையும், சமனிலையில் ஒரே தராசுத் தட்டுகளில் வைத்திருக்கிற யுத்தத்தால் வந்த விளைவு இது.

சந்திக்குச் சந்தி இறங்கி நடக்க வேண்டிய தொல்லை. அடையாள அட்டையும் ஆவணங்களுமின்றி எங்கும் போகமுடியாதநிலை.

முன்பு என்னிடம் ஆத்திரம் கொண்டிருந்தவர்கள் கூட, இப்போது என்னிடம் அனுதாபம் காட்டி ஆதுரமாய்ப் பழகுகின்றார்கள். நான் இனி மேல் இப்படிக் கொம்புகளோடு திரிவது ஆபத்தாம். சாதாரணமாகவே கொஞ்சம் வித்தியாசமாய், கறுப்பாய் இருப்பவர்கள் மீது சந்தேகப்படும் சீருடையினர் இப்படிக் கொம்போடு திரிந்தால் விட்டுவைக்கமாட்டார்களாம். அம்மா கூட திருப்பித் திருப்பி இப்போது இதைத்தான் சொல்லி அனுப்புகிறாள்.

ஆனால் எனக்கு கொம்புகள் என்பவை பிரியத்துக்குரியவை. அவற்றை உடைத்துப் போடுவதென்பது முடியாத காரியம்.

நான் ஸ்கொலஷிப் காசில் படித்தவன். யாருக்கும் செலவு வைக்காதவன். பி.கொம், ∴பெஸ்ட் கிளாஸ் பட்டதாரி. எனக்குக் கொம்பு இருப்பதில் என்ன தவறு....?

என்னைப் பார்க்கிற காக்கிச்சட்டைக்காரர்கள் ஒரு மாதிரித்தான் பார்க்கின்றார்கள். இவன் ஒரு சந்தேகத்திற்குரிய கொம்பு வளர்த்துத் திரிகின்றான். இவனைப் பிடிக்கத்தான் வேண்டும்.

நான் தினமும் நறுநெய் பூசி வழுவழுப்பாக கூர்மையுடன் வளர்த்து வந்த கொம்புகள்.திடீரென்று உடைத்துப்போடச் சொன்னால்.... உடைக்க வேண்டுமாம்.... இல்லாவிட்டால் கையையும், காலையும் இவர்கள் உடைத்துப் போட்டுவிடுவார்களாம்.

என்னுடைய கொம்புகளுக்காக கல்யாணமே செய்து கொள்ளாமலிருக்கும் நான்....ஒரு ∴பெஸ்ட் கிளாஸ் பட்டதாரி.....

என்ன செய்வது....? தற்காலிகமாக சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் என் கொம்பினை மிகவும் மனக்கசப்போடு, உள்ளிழுத்துக் கொள்கின்றேன். மற்ற இடங்களில் மிகவும் கூடுதலாகவும், முன்னை விட பயங்கரமாகவும் என் கொம்புகளின் விஸ்வருபத்தைக் காட்டி நிற்கின்றேன்.

இப்போது என் 'மென்ரல்' உச்சத்தானத்தை அடைந்துவிட்டதாக இளம் பெண்களும், எனக்கு ஒரு போதும் கல்யாணம் ஆகப்போவதில்லையென்று அம்மாவும், அப்படி ஆரும் கூட வருபவள் இரண்டு நாள்களுக்கு மேல் என்னோடு வாழ மாட்டாளென்று விமலாவும் ஒரு தீர்மானமே எடுத்து விட்டார்கள்.

நானோ, இன்னும் கூட என் கொம்புகளைப் பாதுகாப்பது எப்படி என்றுதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

(யாவும் கற்பனை)

## குறள்வெள்ளம்

அறம் தவறி நடப்பதிலும் ஆயிரம் வகையுண்டு. அடுத்தவன் சொத்தை திருடிவிட்டால் கூட பறிகொடுத்தவன் மனது காலத்தால் ஆறிவிடும். உழைத்துச் சேர்த்தும்விடுவான்.

குடித்துக் கூத்தடித்து உன் வாழ்க்கையை நீ கெடுத்தால் அடுத்தவர் அனுதாபமாவது எஞ்சக்கூடும்.

எத்தனையோ அநியாயங்கள் அட்டூழியங்களைச் செய்பவர்கள் சிறப்பாகத்தான் இருக்கிறார்கள். காரணம் அவர்கள் அறன்கடை நின்றாரின் பட்டியலில் கேவலமான இடத்தைப் பிடிக்காமைதான் என்கிறார் வள்ளுவர்.

ஆனால் தலைநிமிர முடியாத அவமானம் - அடுத்தவருக்கு - ஜீரணிக்க முடியாத துன்பம் [illegible] கொடுப்பதுதான் - பிறனுடைய [illegible] வைத்திருக்கும் சகவாசம். அத்தகையோன்போல் பேதையன் இல்லை.

இது நிலைக்காத உறவு; காக்கமுடியாத இரகசியம்; என்றோ பிடிபட்டுப் புயலாய் வீசும் போது மானம் காற்றில் பறக்கும். குடும்ப நிம்மதி குலையும். துணையும் பிள்ளைகளும் தலைகுனிந்து நிற்கும் கட்டம் எழும்.

எனவே எக்கொடுமை புரியினும் இக்கொடுமைவேண்டாம் என்கிறார் வள்ளுவர். 2000 ஆண்டுகளுக்கு முன்பே இது சமூகப் பிரச்சினைதான்.

இன்றும் என்றும் உலகம் உள்ளளவும் இதைச் சரியென ஏற்கும் மனப்பக்குவம் மனிதனிடம் அமையப்போவதில்லை.

**அறன்கடை நின்றாருள் எல்லாம் - பிறன்கடை**
**நின்றாரின் பேதையர் இல்**


- 0142.

- பிறனில்விழையாமை -

-அம்பிகைபாகன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வலம் வரும் வண்ணத்




எலுமிச்சைச்சாதி வண்ணத்துப் பூச்சியின் (CITRUS BUTTERFLY) குடம்பிகள், எலுமிச்சைப்பூ அரும்பில் காணப்படுகின்றன.




சிற்றஸ் வண்ணத்துப்பூச்சியின் பூரண வளர்ச்சியடைந்த குடம்பி. (தாவரத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களையும் கவனிக்க.)



குடம்பி நூலினால் தன்னை இணைத்துக் கொள்கின்றது.



கூட்டுப்புழு. இணைப்பு நூல் தெளிவாகத் தெரிகின்றது



நிறைவுடலி கூட்டுப்புழுவிலிருந்து வெளியேறுகின்றது. சுருங்கிய நிலையிலுள்ள செட்டைகளை கவனிக்கவும்.

குடிபெயர்தலைப்பற்றிய விளக்கம் ஏற்கனவே தந்துள்ளோம். உறுதியான அங்கிகளினால்தான் நீண்டதூரப் பிரயாணங்களை மேற்கொள்ளமுடியும். பூச்சிகளும் பறக்கக்கூடியவை; ஆனாலும் அவற்றினால் உறுதியாகவும், வேகமாகவும் பறக்கமுடியாது. சிறுகாற்றுக்கும் ஆற்றாது இயங்கும் (காற்று வீசும்போது நுளம்பின் உபத்திரவம் குறைந்திருப்பதை அனுபவித்திருப்பீர்கள்) இலேசாக மழை பெய்தாலும் பூச்சிகள் பாதிப்படையும். தும்பி, தேனீ, குளவி போன்றவற்றின் செட்டைகள் நனைந்தாலும் அவற்றினால் பறக்கமுடியும். காரணம் இவற்றின் செட்டைகள் மென்றகடு (MEMBRANE) போன்றவை. ஆனால் வண்ணத்துப்பூச்சிகள், அந்துப்பூச்சிகளின் செட்டைகள் பாதிப்படையும்; காரணம் இவற்றின் செட்டைகள் செதில்போர்வையை உடையவை. செதில்கள் கலைந்தால் இவற்றினால் பறக்க முடியாது. நிறச் செதில்களின் ஒழுங்குதான் இவற்றின் நிறவடிவங்களைத் (COLOUR DESIGNS) தோற்றுவிக்கின்றது. இப்பூச்சிகளி

**குகன்**

னால் செதில்களைத் தோற்றுவிக்க முடியும், ஆனாலும் செதில்கள் கலைந்தால் உடனே பறக்கமுடியாது. (வண்ணத்துப்பூச்சி அல்லது அந்துப்பூச்சியின் செட்டையின் மேற்புறத்தில் விரல்நுனியை ஒற்றினால் செதில்கள் அகன்று ஒட்டிக்கொண்டுவருவதைக் காணலாம்)


இலங்கையில் சிவனொளிபாதமலைப் பகுதிக்கு ஆண்டுதோறும், வண்ணத்துப்பூச்சிகள் குறிப்பிட்டகாலத்தில் யாத்திரைவரும் என்பது ஐதீகம், இது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை: ஆயினும் சிவனொளிபாதமலைக்கு சமனலகந்த (வண்ணத்துப்பூச்சிமலை) என்ற சிங்களப் பெயர் நிலைத்துவிட்டது. அமெரிக்காவில் ஏகாதிபதி வண்ணத்துப்பூச்சி (MONARCH BUTTERFLY) ஆயிரக்கணக்கான மைல்களைக்கடந்து குடிபெயர்வதை ஆதாரபூர்வமாக கண்டறிந்துள்ளார்கள். ஏக அதிபதி (MONARCH) என்ற பெயர் இதற்கு எவ்வளவு பொருத்தம்! முதலில் இவற்றின் வாழ்க்கை வட்டத்தைப்பற்றி அறிந்துகொள்வோம். வண்ணத்துப் பூச்சிகள், அந்துப்பூச்சிகளின் வாழ்க்கைவட்டம் ஒரே வகைக்குரியதாகும். முதிர் அங்கிகள் (நிறைவுடலிகள்- IMAGO) இனக்கலப்பு நிகழ்த்தியபின், பெண்கள் குடம்பிகளுக்கு (LARVAE) உணவாகப் பயன்படக்கூடியதாவரங்களிலோ அல்லது ஆதாரப்படைகளிலேயோ முட்டைகளை இடும். சூரிய வெப்பத்தினால் முட்டைகள் பொரித்துக் குடம்பிகள் தோன்றும். இவற்றின் குடம்பிகள் மயிர் கொட்டி (CATER PILLAR) என அழைக்கப்படும். ஆயினும் எல்லாம் மயிருள்ளவையல்ல; சில இனங்களுக்குரியவையே மயிருள்ளவை; அதிலும் சில இனங்களுக்குரியவையே கொட்டும் மயிர்களை (STINGING HAIRS) உடையவை. அநேகமானவை மயிரற்றவை, சில இனங்களுக்குரியவை அழகிய நிறங்களை உடையவை. இவற்றின் குடம்பிகளே பிரச்சினைக்குரியவை,

காரணம் இவை அதிசாப்பா
(இராமன் சாப்பாட்டுப் பிரியன
உடல் நிறையைக் காட்டிலும்
உணவை உட்கொண்டு மிகவே
வேகமாக வளருவதனால்
டையை மாற்றும் (அதாவது
MOULTING) மயிர்கொட்டிக
களில் இவற்றின் பாதிப்பு வேக
கொட்டிகளின் வளர்ச்சி வேகத்
கண்டறிந்திருப்பீர்கள். பூரண வ
தும் குடம்பி தாவரக்கிளையிலே


குடிபெயர்



சிற்றஸ் வண்ணத்துப்பூச்சியின் நிறைவுடலி, செவ்வரத்தம்பூவிலிரு பருகுகின்றது.




ஏகாதிபதி குடிபெயரும் முக்கியபாதைகளைப் படம் காட்டுகின்றது. இது தெற்கு நோக்கிய பாதை, பின் முட்டையிடுவதற்கு வடக்கு நோக்கிச் செல்ல வேண்டும்.



ஏகாதிபதியின் குடம்பி.



ஏகாதிபதி உணவு கொ
இந்த நோஞ்சான் எங்ஙனம்
காவின் நீளத்தைக் கடக்கின
வும் ஒரே ஆண்டில் இரண்டு
இங்ஙனம் கடக்கும் தூரம் சரா
களாகும். ஒருதிசையில்
திசைகளிலும் 4000 மைல்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த்துப்பூச்சிகள்

## ...யர்வு - 2



...ம்பூவிலிருந்து தேனைப்

...அதிசாப்பாட்டு இராமன்கள்
...டுப் பிரியனா?) தினமும் தம்
...காட்டிலும் மூன்று மடங்கு
...ண்டு மிகவேகமாக வளரும்.
...வதனால் அடிக்கடி சட்
... (அதாவது கவசங்கழட்டும்
...பிர்கொட்டிகள் உள்ள மரங்
...பாதிப்பு வேகத்தையும், மயிர்
...ர்ச்சி வேகத்தையும் நீங்கள்
...ள். பூரண வளர்ச்சி யடைந்த
...க்கிளையிலோ இலையிலோ




...ணவு கொள்ளுகின்றார்.
...ர் எங்ஙனம்தான் அமெரிக்
...தக் கடக்கின்றாரோ, அது
...டில் இரண்டுவாட்டி. இவை
...ம் துரம் சராசரி 2000 மைல்
...திசையில் கடக்கும் இரு
...4000 மைல்கள்.

நூலினால் தன்னை இணைத்துக்கொண்டு கூட்டுப்புழுவாக (PUPA) மாறும். சுவர்கள், அடிமரங்களிலும் நூற்போர்வையை ஏற்படுத்திக் கூட்டுப்புழுவாக மாறுவதுண்டு. வண்ணத்துப் பூச்சிகளின் கூட்டுப்புழு பொற்புழு (CHRYSALIS) எனவும் அழைக்கப்படும். இந்நிலையின் போது உருமாற்றம் (METAMORPHOSIS) நிகழும். இது நிறைவுபெற்றதும் நிறைவுடலி கூட்டைப்பிய்த்துக்கொண்டு வெளியேவரும். வெளியே வரும்போது செட்டைகள் சுருங்கியும் ஈரலிப்பாகவும் இருக்கும். சிலபொழுதில் செட்டைகள் விரிந்து உலரும், வண்ணத்துப்பூச்சியும் பறந்துசெல்ல முடியும். வண்ணத்துப்பூச்சிகளும் அந்துப்பூச்சிகளும் தேனை உணவாகக் கொள்ளும், அதனால் தாவரங்களில் மகரந்தச் சேர்க்கை நிகழ உதவும். ஆக்கத்திற்குப் பெற்றோர், அழிவுக்குக் குடம்பிகள். நீர்நிலைகளில் வண்ணத்துப்பூச்சிகள் நீரும் அருந்தும்.

**அங்கிகள் பலவிதம்**
**ஒவ்வொன்றும் ஒருவிதம்**

இந்த வாழ்க்கை வட்டத்தின் அடிப்படையில்தான் ஏகாதிபதி வண்ணத்துப்பூச்சியில் (MONARCH BUTTERFLY) குடிபெயர்வு நிகழுகின்றது. இனப்பெருக்கத்திற்காக இவை வடக்குத் தெற்காக வடஅமெரிக்காவின் நீளத்தையே கடக்கவேண்டியுள்ளது. இவற்றின் குடம்பிகள் பாற்செடி (MILK WEED) எனப்படும் பாலைக்கொடியினத்தைச் சேர்ந்த தாவரத்தை மாத்திரம் உணவாகக்கொள்ளும். (நமது நாட்டிலும் ஆடுதின்னாப்பாலையில் காணப்படும் சிவப்பு மயிர்கொட்டி ஆடுதின்னாப்பாலையை மாத்திரம் உணவாகக்கொள்ளும்) இந்த பாற்செடி கனடாவிலும் அண்டிய வடஅமெரிக்க மாநிலங்களிலும் மாத்திரம் உண்டு. நிறைவுடலிகளுக்கு வேண்டிய உணவு தென்மாநிலங்களில் உண்டு. அதனால் நிறைவுடலிகள் தோன்றியதும் தெற்கு நோக்கிப் பிரயாணத்தை மேற்கொள்ளும் உணவுதேடி. பின் இனப்பெருக்கம் செய்ய வடக்கு நோக்கிப் பிரயாணத்தை மேற்கொள்ளும். அங்கு குறிப்பிட்ட பாற்செடியில் முட்டைகளை இட்டுவைக்கும். இங்ஙனம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு மேல் இவை குடிபெயரவேண்டியுள்ளன. வண்ணத்துப் பூச்சிகளுக்கு அடையாளமிட்டு ஆராய்ந்து அவை செல்லும் பாதைகளையெல்லாம் கண்டறிந்துள்ளார்கள். குறிப்பிட்ட இனத்திற்குரிய ஏகாதிபதி வடஅமெரிக்காவிற்கு மாத்திரம் உரியதல்ல; பசுபிக்சமுத்திரத்தைக் கடந்து ஹவாயை அடைந்து, அங்கிருந்து ரொங்கா, சமோவா, ராஹிற்றி மார்க்கமாக ஆஸ்திரேலியாவையே அடைந்துவிட்டன.


சில நாடோடிகள் (VAGRANTS) அத்திலாந்திக் சமுத்திரத்தையும் தாண்டி இங்கிலாந்தையும் அடைவதாகத் தெரிகின்றது. அத்திலாந்திக் கரையோரமாக பிரித்தானிய தீவுகளில் இவற்றுட் சிலவற்றைக்கண்டு சேகரித்துள்ளார்கள். ஆயினும் பிரித்தானிய தீவுகளில் இவற்றின் வாழ்க்கைவட்டம் பூரணத்துவம் பெறமுடியாது, காரணம் குறிப்பிட்ட இனத்திற்குரிய பாற்செடி அங்கில்லை. ஆயினும் அமெரிக்காவில் அடையாளமிடப்பட்ட ஏகாதிபதிகள் இங்கிலாந்தில் அகப்பட்டால் பூச்சியினத்திற்குரிய சரித்திரமே (ENTOMOLOGICAL HISTORY) புதுப்பிக்கப்படும். ஏகாதிபதியைத்தான் உண்மையான குடிபெயரும் வண்ணத்துப் பூச்சியாகக் கொள்ளலாம். வேறு இருக்கலாம் ஆனால் ஆதாரபூர்வமாக அறியப்படவில்லை.



அடையாளமிடுதலில் பிறிதொருமுறை, செட்டையின் முன் விளிம்பில் பசையுள்ள நாடா ஒட்டப்படுகின்றது. இவை அகப்படும் இடங்களில் இவற்றின் அடையாளங்களைக் கொண்டு இவை செல்லும் பாதை அறிந்து கொள்ளப்படும்.



ஏகாதிபதியின் செட்டையில் அடையாளமிடலின் ஒரு முறை. பூச்சியைப் பிடித்து இறப்பர் முத்திரையினால் (RUBBER STAMP) அடையாளமிட்ட பின் பறக்க விடுவார்கள். Y2 என்ற எண்ணையும், YALE என்ற எழுத்தையும் கவனிக்க.



செட்டைகள் விரிகின்றன, நிறங்களும் துலக்கமாகத் தெரிகின்றது. கீழே வெற்றுக் கூடும் தெரிகின்றது.



ஏகாதிபதி வண்ணத்துப்பூச்சி (MONARCH BUTTRTFLY) பாற்செடியின் (MILK WEED) மேல் முட்டையிடுகின்றது.

# ஒருவர் பொறை இருவர் நட்பு

இத்தொடரில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாய பழமொழி நானூறு என்னும் நூலில் இருந்து ஒரு சில பாடல்கள் குறித்து நோக்குவோம். இந்நூலை எமக்கு உதவியவர், முன்னுறை அரையர் என்னும் புலவர் பெருமான். ஆசிரியர் ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வோர் பழமொழிகளை வைத்து நயம்படக் கூறிச் செல்கின்றார். தமிழர்களிடையே வழங்கி வந்த பல பழமொழிகள் இந்நூலில் பயின்றுவருகின்றன.

ஆய்வாளர், ஒரு நாட்டின் பண்பாட்டை நாம் அறிந்துகொள்ள அந்நாட்டில் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படுமென்பர். சுருங்கக்கூறின் தமிழ் மாந்தரின் மன இயல்புகளை நன்கு புரிந்துகொள்ளமுடியும் எனலாம். நாவன்மை படைத்த சான்றோர், தமது பேச்சினையும் உரை நடையினையும் பழமொழிகளைக் கையாண்டு மேம்படுத்தியிருக்கின்றனர்.

ஒரு நகரத்தில் வதியும் உறவினர் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அவரது வீட்டு முகவரி எம்மிடம் இருக்கலாம். வீதியின் பெயர்கள் ஆங்காங்கு தொங்கவிடப்பட்டிருக்கும். பெயர்ப் பலகையைப் படித்து குறிப்பிட்ட வீட்டினை அடைகின்றோம். அதனையொப்பப் பழமொழிகளும் எம்மை இன்ப மாளிகைக்கு அழைத்துச்செல்கின்றன.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

இன்றைய கட்டுரையில் பழமொழி நானூற்றில் வரும் 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்னும் பழமொழி குறித்துச் சிறிது நோக்குவோம். மக்களுள்ளே, நண்பர், பகைவர், நொதுமலர் என்னும் முத்திறத்தினரைக் காண்கின்றோம். நண்பர், பகைவர் நாமறிந்தவை; நொதுமலர் பற்றும் பகையும் இல்லவர். நட்பினை நண்பு, கேண்மை, தோழமை என்றெல்லாம் கூறுவர். மனைக்குப் பாழ் வாணுதல் இன்மை என்பர்; அதுபோல நண்பரை இன்மையும் வாழ்வுக்குப் பாழ் எனலாம். திருவள்ளுவதேவர் தெய்வத் திருக்குறளில் நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீநட்பு, கூடாநட்பு என நட்பினைப் பற்றி விரிவாக எடுத்துக்கூறியிருக்கின்றார்.

அவற்றுள் ஒருசில துளிகளை இங்கு திரட்டித் தருகின்றோம். அறிவுடையார் நண்பு பிறைமதி போல வளர்ந்து செல்லும். அது பழகப்பழக இன்பம் தரும். முகமலர்ச்சி கொண்டு நண்பினை அளத்தல் சாலாது. நட்டார் இருவரதும் உள்ளத்துணர்ச்சி ஒன்றுபட்டதாய் இருத்தல் வேண்டும். உடுக்கை இழந்தவன் கைபோல நட்டார்பால் துன்பங்கண்ட போது விரைந்து சென்று நீக்குதல் வேண்டும். நட்புக்கொள்ளும் வழி, புணம், குலம், குடிப்பிறப்பு, சுற்றம் இவற்றை ஆராய்ந்தே செய்தல் வேண்டும். சொல்லொன்று செயலொன்றாய் இருப்பவர் நட்புக் [illegible] இன்னாதாகும். [illegible] ஓதப்படும். சாவிற் சாதல், நோவிற் நோதல், ஒண் பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனி வேட்டல், பிரிவு நனி இரங்கல் முதலிய பண்புகளையும் மெய்யன்பர்கிடையே காணலாகும்.

தேன்கூடு

கோப்பெருஞ் சோழன் முடியுடை மன்னன்; பிசிராந்தையார் என்பவர் பாவேந்தர். இருவோரும் உணர்ச்சி ஒத்திருந்தனர்; பெரும் நண்பினராய் இருந்தனர். கோப்பெருஞ்சோழன் ஒரு சமயம் வடக்கிருந்தான். உயிர் நீத்தற்கு விரதமிருந்தான். அவன் சான்றோர் சிலருக்குத் தனது இனிய நண்பன் பிசிராந்தையும் அங்குவருவார். அவருக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அவ்வாறே பிசிராந்தையாரும் ஆங்கு வந்து வடக்கிருந்தார். அந்த வியத்தகு பான்மையை, பொத்தியார் என்னும் புலவர் 'வருவன் என்ற கோனது பெருமையும்; அது பழுதின்றி வந்தவன் அறிவும் வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தென்றே' என்று கூறுகிறார். சாவிற் சாதல் என்ற பண்பிற்கு இயைய கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் விளங்கினர்.

இனி பழமொழிப் பாடலுக்கு வருவோம். ஆசிரியர் நட்புப்பூண்டொழுகும் இருவருள் ஒருவராவது பொறுமையை மேற்கொண்டு ஒழுகுதல் வேண்டும். அது அவர்கள் நட்பு நீடித்து நிற்பதற்கு வழி செய்யும் என்கிறார். இருவருமே பொறுமை இல்லாதவராய் இருப்பின் அவர்கள் நட்பு நீடித்து நிற்காது. ஆகவே இருவருள் ஒருவராவது பொறுமை பூண்டிருத்தல் வேண்டுமாம். திருவள்ளுவதேவரும், நட்டார் செய்த தீமையைப் பழிக்கு அஞ்சி நானும் பொறுமை உடையானது நட்பினை விலை கொடுத்தும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பர்.

சிந்தாமணி உடையார், 'வாரம் பற்றுழித் தீயவும் நல்லவாம், தீரக்காய்ந்துழி நல்லவும் தீயவாம் என்பர்' வாரம் - அன்பு. பழமொழி நானூற்றுப் பாடலைப் படிப்போம்.

தம்தீமை இல்லாதார் நட்டவர் தீமையையும்
எம்தீமை என்றே உணர்பு தாம் - அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்கு நீர்ச் சேர்ப்ப
ஒருவர் பொறையிருவர் நட்பு.

கடற்கரையில் உளதாம் ஊரனே! ஒருவர் பொறுக்கும் பொறுமையால் இருவரது நட்பு நிலைபெறும். நண்பு பூண்டார்க்குத் தீமை செய்யாத ஒருவர், நண்பர் செய்த தீமையையும் தம்மால் செய்யப்பட்ட தீமையே என்று பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பது பாட்டின் பொருளாகும்.

பொறுமை காத்து நண்பு பேணுவோம்.

(தொடரும்)


-சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வு

விடியற்காலைநான்குமணிக்கு நித்திரைவிட்டெழும்பும் சிவகாமி எட்டுமணிக்குள் களைத்து செயலிழந்துபோவாள். இரவு எட்டுமணிக்குப்பின்பு காய்கறிகளை கழுவிச் சுத்தப்படுத்தி வெண்காயம், தேங்காய் யாவும் உரித்து காலை, மத்தியானச் சமையலுக்குத் தயார் பண்ணி வைத்துவிட்டு கணவனுக்கும் நான்கு பிள்ளைகளுக்கும் சாப்பாடு கொடுத்துவிட்டுப் படுக்க எப்படியும் பத்துமணிக்கு மேலாகிவிடும். இரவில் சிலசமயங்களில் இரண்டுவயதுக் கடைக்குட்டியான மகன் கௌசிகன் எழுந்துவிட்டால் அன்று சிவராத்திரிதான்.

காலை எட்டுமணிக்கு இரண்டாவது மகனான திருமாறனும் மூன்றாவது மகளான வித்தியாவும் பக்கத்தில் உள்ள பாடசாலைக்குச் சென்றுவிடுவார்கள். மூத்தமகள் சர்மிளா பட்டணத்தில்படிப்பதால் ஏழரைமணிக்கே மத்தியானச்சாப்பாட்டுடன் புறப்பட்டுவிடுவாள். எட்டுமணிக்குப் பிறகு பிள்ளைகள் பாடசாலையிலிருந்து வரும்வரை அவளுக்கு ஓரளவு ஓய்வு கிடைக்கும். ஓய்வுநேரங்களிலும் சிவகாமி சும்மா இருக்கமாட்டாள். வீடு, வர்சல், வளவுகளைக் கூட்டித்துப்புரவாக்குவாள். வளவில்நிற்கும் பூமரங்களுக்கும் காய்கறிச் செடிகளுக்கும் நீர் ஊற்றுவாள். அவர்களது வீட்டுத் தேவைக்குப் போதுமானளவு காய்கறிகளை அவளே உற்பத்திசெய்து கொள்வாள். இது தவிர சகலவிதமான பயன்தரு மரங்களையும் அவள் உற்பத்திசெய்து வைத்திருக்கிறாள்.



அதனால் அவர்களுக்கு எதிலும் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை.

சிவகாமி படித்துக்கொண்டிருக்கும்போதே ஞானசுந்தரத்தை விரும்பி அவனுடன் வந்துவிட்டாள். அதனால் அவளது பெற்றோர் அன்றே அவளைக் கைவிட்டுவிட்டனர். அவளது தம்பிமார் இருவர் வெளிநாட்டில் இருக்கின்றனர். அவ்வப்போது பெற்றோருக்குத் தெரியாமல் பணம் அனுப்பிக்கொண்டிருந்தனர். அத்துடன் ஞானசுந்தரத்தின் பெற்றோர் ஓரளவு வசதியானவர்கள். முதலில் கொதித்தெழுந்தாலும், நாளடைவில் சிவகாமியின் நற்குணங்களால் கவரப்பட்டு அவளைத் தம் மருமகளாக ஏற்றுக்கொண்டனர். ஞானசுந்தரம் இளமையில் சிவகாமியின் பின்னால் சுற்றித்திரிந்ததால்பெரிதாகப் படிக்கவில்லை. அதனால் தனியார் நிறுவனமொன்றில் வேலைசெய்துகொண்டிருந்தான். வருமானம் மிகவும்குறைவு. சிவகாமியின் கெட்டித்தனத்தால் குடும்பவண்டி தடம்புரளாது ஓடிக்கொண்டிருக்கிறது. தான் படிக்காததை எண்ணி வருத்தப்பட்ட சிவகாமி தனது பிள்ளைகளை நன்றாகப் படிப்பிக்கவேண்டுமென்று மனதுக்குள் திட்டமிட்டு வைத்திருந்தாள்.

விடியற்காலைப் பொழுதிலே காலைச்சாப்பாட்டுடன் மத்தியானச் சமயலையும் முடித்து கணவனுக்கும் பட்டணத்திற்கு படிக்கச்செல்லும் மூத்த மகள் சர்மிளாவுக்கும் கட்டிக் கொடுத்துவிடுவாள்.

அன்று வீட்டுவேலைகளைச் செய்யும் அவசரத்தில் அவள் சர்மிளாவைக் கவனிக்கவில்லை. எட்டுமணிக்கு மற்றைய இருபிள்ளைகளும் "அம்மா, நாங்கள் போயிற்றுவாறம்" என்று கூறி விடைபெற்றபொழுதுதான், சர்மிளா பாடசாலைக்குச் செல்லும்போது சொல்லாதது நினைவுக்குவந்தது.

'சர்மிளா கடைசிவரையும் சொல்லாமல் போகமாட்டாள்'என்று நினைத்தவாறு அவள் படுக்கும் அறையினுள்ளே சென்றாள் சிவகாமி. கட்டிலில் முகம் குப்புறப் படுத்திருந்தாள் சர்மிளா.

சர்மிளாவின் போக்கு கடந்த சில மாதங்களாக மாறியிருப்பதை அவள் அவதானித்திருக்கிறாள். ஊரில் உள்ள பாடசாலைகளில் அவள் படிக்கும்போது எப்போதும் சுறுசுறுப்பாகவும் கலகலப்பாகவும் இருப்பாள். ஆசிரியர்கள் சொல்வதெல்லாவற்றையும் அக்கறையுடன்செய்வாள். அதைவிட பாடசாலையைப் பற்றியும் அங்குள்ள ஆசிரியர்கள் பற்றியும் ஓயாமல் கதைப்பாள். தரம் ஒன்று, தரம் இரண்டு ஆசிரியர்கள் அவளுக்குக் கரும்புமாதிரி. தரம் ஐந்திற்குப் போன பின்பும் தரம் ஒன்றில் வந்திருந்து ஆசிரியருடன் கதைப்பாள்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கடந்தவருடம் சித்தியடைந்து, வருடஆரம்பத்தில் பட்டணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் சேர்ந்த பின் சர்மிளாவில் முன்னைய கலகலப்பையோ உற்சாகத்தையோ சிவகாமி காணவில்லை.

ஆரம்பத்தில் சிவகாமி புதிய இடம், மாறுபட்ட சூழல், புதிய ஆசிரியர்கள், புதியமாணவர்கள் என்பதாலும் போக்குவரத்துக் கஷ்டங்களாலும் மனங்கோணியிருப்பாள் என்று நினைத்தாள். ஆனால் நாள் செல்லச் செல்ல அவளின் போக்கு முற்றாக மாறிவிட்டது. பாடசாலைக்குச் செல்லவே அவள் விரும்பவில்லை.

தான் கண்டகனவுகள் யாவும் கலைந்துவிடுமோ என்று அஞ்சியவாறு கட்டிலில் அமர்ந்த சிவகாமி சர்மிளாவின் முதுகை ஆதரவாக வருடியபடி "சர்மிக் கண்ணுக்கு சுகமில்லையா...?" என்று கேட்டாள்.

சர்மிளா எதுவும் பேசாமல் கிடந்தாள். சிறிது நேரத்தின் பின் திரும்பித் தாயைப் பார்த்தாள். அவளின் கண்கள் கலங்கியிருந்தன.

"என்னம்மா...?" பதறினாள் சிவகாமி.

"எனக்கு அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போகவிருப்பமில்லை. நான் முந்திப்படிச்ச பள்ளிக்கூடத்திலேயே படிக்கப்போறன்" விம்மினாள்.

"ஏனம்மா இப்படிச் சொல்லுறாய். அதுதானே மாவட்டத்திலை பெரிய பள்ளிக்கூடம். அட்மிசன் எடுக்கிறதிற்கு அப்பா எவ்வளவு கஷ்டப்பட்டவர் தெரியுமே...? எத்தினை பேரைப் பிடிச்சது... எத்தினைபேற்றை காலிலே விழுந்தது... அதைவிட எத்தனை பேருக்குக் காசு குடுத்தது..." சிவகாமியின் குரல் கரகரத்தது. விழிகள் மழையாய்ப் பொழிந்தன.

தாயினுடைய கண்ணீரைப்பார்க்க அவளுக்குக் கவலையாய் இருந்தது. எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் சிவகாமி படிப்பு விசயத்தில் அவளுக்கு எந்தக்குறையும் வைக்கவில்லை. அப்படியான அத்தாயின் உள்ளம் கலங்குவதை அவளாள் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

தனக்கு எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் தாயின் மனம் கோணப்படாது என்பதற்காகப் பாடசாலையில் நிகழும் சம்பவங்கள் பற்றி அவள் எதுவும் கூறுவதில்லை. எனினும் முதல் நாள் நடந்த சம்பவத்தை அவளால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. அந்நிகழ்வு அவளின் மனதில் நிழலாடியது.

*　　*　　*

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிக்கான ஏற்பாடுகள் அப்பாடசாலையில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. தனிப்பாடல் நிகழ்ச்சிக்கும் பேச்சுப்போட்டிக்கும் நாடகத்திற்குமான தெரிவுகள் அன்று நடைபெறவுள்ளதாக வகுப்பு ஆசிரியர் காலையில் வகுப்பில் வந்து கூறினார்.

பத்துமணிக்கு தமிழ்த்தின விழாவுக்குப் பொறுப்பான ஆசிரியரும் வகுப்பு ஆசிரியரும் சர்மிளாவின் வகுப்புக்கு வந்தனர்.

மாணவர்கள் எழுந்து "குட்மோர்னிங்" சொன்னார்கள். இருவரும் பதிலுக்கு "குட்மோர்னிங்" சொன்னார்கள். வகுப்பாசிரியர்"இருங்கோ பிள்ளைகள்" என்றார்.

விசாரணை ஆரம்பமானது. "உமக்கு என்ன பெயர்?" பொறுப்பாசிரியர் வாட்டசாட்டமான அழகிய மாணவியைப் பார்த்துக் கேட்டார். "நிவேதிகா..." மாணவி எழுந்து பணிவுடன் சொன்னாள்.

"எங்கை படித்தனீர்?"

நிவேதிகா பாடசாலையின் பெயரைச் சொன்னாள். பொறுப்பாசிரியர் அதை எதிர்பார்க்கவில்லை. அழகான வாட்டசாட்டமான அந்த மாணவி பெரிய இடத்துப் பிள்ளையாக இருக்கும் என்றே நினைத்திருந்தார். அது அவருக்கு ஏமாற்றமாக இருந்தது. 'தோற்றத்தைப் பார்த்து எதையும் இந்தக்காலத்திலை முடிவெடுக்கேலாது' என்று மனதுள் நினைத்த பொறுப்பாசிரியர் "சரிசரி இரும். கிராமத்துப் பள்ளிக்கூடம் தெந்தட்டிலை பாஸ்பண்ணிட்டு வந் திருக்குங்கள். மற்றைய விசயங்கள் ஒன்றும் விளங்காது" என்று சற்றுப்பலமாகக் கூறியபடி அடுத்த மாணவியைப் பார்த்தார்.

"என்னுடைய பெயர் நிருபினி... அப்பா என்ஜினியராய் இருக்கிறார்..." என்றவள் பட்டணத்தில் உள்ள பெரிய ஆரம்பப் பாடசாலை ஒன்றின் பெயரைக் கூறினாள்.

"நீர்தானே சம்பந்தமூர்த்தியின் மகள்... சரிசரி இங்காலை வாரும்..." என்றவர் வகுப்பை ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு "சுவாமிநாதன் சேருடைய மகள் ஆர்" என்று கேட்டார்.

வைதேகி என்ற மாணவி எழுந்து நின்றாள்.

"நீரும் இஞ்சாலை வாரும்..." என்றார் பொறுப்பாசிரியர்.

"இன்னும் மூன்று பிள்ளைகள் இருக்கினை" என்ற வகுப்பாசிரியர், "நளினி, தாருணி, உதயகலா... இஞ்சாலை வாங்கோ" என்றவர் பொறுப்பாசிரியரைப் பார்த்து"நளினி கெமிஸ்ரி மிஸ்சின்ரை தங்கச்சியாற்றை மகள். தாருணி, எம்.எஸ்.எம்.முதாலாளீன்ரை மகள்,உதயகலா ஜே.பீன்ரை பேர்த்தி.. குழுப்பாடல் அல்லது நாடக நிகழ்ச்சியிலையெண்டாலும் மூன்று பேரையும் சேருங்கோ" என்றார்.

"செய்வினையே?"

"பழக்கினால் செய்வினைதானே. பாடசாலைத் தேவைகளுக்கு அவரிட்டைத்தான் கைநீட்டுறது. போட்டிகள் இன்றைக்கு வரும் நாளைக்குப் போகும். போட்டிகளிலை வெண்டாப் போலை ஏதோ கிடைக்கப்போகுதே..." என்றார்.

"வேறை ஆரன் இல்லையே...?"

"மற்றையடிவிசன்களிலும் தேவையானவை இருப்பினை... வாங்கோ போவோம்..." என்று [illegible] பாசிரியர்.

"ரீச்சர்" என்று சர்மிளா அழைத்தாள். வகுப்பறையை விட்டுப் புறப்பட்ட இரு ஆசிரியர்களும் நின்று சத்தம் வந்த திசையை நோக்கினர்.

"என்னுடைய பெயர் சர்மிளா... போன வரிசம் வலயமட்டத்திலை நடைபெற்ற தனிப்பாடல் போட்டியில நான்தான் முதலாவதாக வந்தனான். சிறுவர் நாடகத்திலையும் நான் நடிச்சனான். அந்த நாடகம்தான் முதலாவதாக வந்தது."

"எந்தப் பள்ளிக்கூடம்?" பொறுப்பாசிரியர் கேட்டார்.

சர்மிளா சொன்னாள்."ஓ அதுவே... சரிசரி... நீர் இரும்... தேவையெண்டால் கூப்பிடுறன்."

சர்மிளா அதை எதிர்பார்க்கவில்லை. "கெட்டிக்காரி வாரும்..." என்று அழைப்பார் என்று எதிர்பார்த்தாள்.

*　　*　　*

சர்மிளா தாயின் மடியில் முகம் புதைத்து அழுதாள். துக்கம் கட்டுமீறியதால் விக்கல்விசும்பலாக அவள் குரல் வெளிப்பட்டது. "நான் அங்கை போகேல்லை..." சிவகாமியும் விக்கி விக்கி அழுதாள்.

முன்பு அவள் படித்த பாடசாலையில் ஏதாவது ஒரு போட்டிக்கு மாணவர்களை தெரிவுசெய்வதானால் எல்லா மாணவர்களையும் அழைத்து பரீட்சித்துத்தான் தெரிவுசெய்வார்கள். இரண்டு மூன்று மாணவர்கள் திறமையானவர்களாய் இருந்தால் அதிபர் தலைமையிலான குழுத்தான் தகுதியானவர்களைத் தெரிவுசெய்யும். அப்படிப் பழக்கப்பட்ட சர்மிளாவுக்கு அன்று நடந்த செயல் மனவருத்தத்தைக் கொடுத்தது.

"அம்மா நான் இனிமேல் அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டன். முந்திப்படித்த பள்ளிக்கூடத்திலை தான் படிக்கப்போறன்."

"அப்படிச் சொல்லாதையம்மா... அடுத்தடுத்த முறையில உன்னையும் எடுப்பினை... அதோடை இதுகளெல்லாம் தேவையில்லை அம்மா... படிப்புத்தான் முக்கியம்... நீ நல்லாய்ப் படிச்சு ஒரு டொக்டராய் வா..." சிவகாமி மகளின் கன்னங்களால் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள்.

"அங்கை படிக்கிற அனேகமான பிள்ளைகள் வசதியானவை. அவர்கள் எங்களைப் போன்ற ஆட்களை மதிக்கிறேல்லை... பெரிய பெரிய பள்ளிக்கூடங்களிலை இருந்து வந்தவை தாங்கள்தான் பெரியாள்கள் என்று கூடித்திரிவினை... என்னையெல்லாம் சேராயினை... அதோடை ஆசிரியர்களும் அவையோடைதான் கதைக்கிறது, சிரிக்கிறது. இஞ்சை அப்படியில்லை. எல்லா ரீச்சேசும் மிகவும் நல்லவை. எழை, பணக்காரன் என்று தகுதி பார்க்கிறேல்லை. எல்லா மாணவர்களும் சமம்... ஆனால் அங்கை பணத்தையும் உத்தியோகத்தையும் தான் மதிக்கினை."

விம்மினாள்.

**வேலவன்**

'எவ்வளவு கஷ்டப்பட்டு எடுத்த அனுமதி' என்று கவலைப்பட்டாள் சிவகாமி. அவளால் மகளுக்கு ஆறுதல் சொல்ல முடியவில்லை. "பின்நேரம் அப்பா வரட்டும் நீ ஒன்றுக்கும் யோசியாதை. வா, முகத்தைக் கழுவி விட்டுச் சாப்பிடு" என்று கூறிவிட்டு அவளையும் அழைத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

அவளின் மனம் அல்லற்பட்டது. அவளுக்கு எதுவுமே தோன்றவில்லை. யோசிக்க, யோசிக்க விசர்பிடித்து விடும்போல் இருந்தது. கிணற்றடியில் கிழித்து ஊறப்போட்ட தென்னோலைகளை பின்னுவதற்காகச் சென்றாள். ஓலையை எடுத்து பின்னத்தொடங்கியபோதும் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது.

"எவ்வளவு கற்பனைகளுடன் அவர் அட்மிசனுக்கு ஓடித்திரிந்தவர். இப்ப எல்லாம் நாசமாய் போச்சே" என்று நினைக்கத் துயரம் கட்டுமீறியது.

விம்மி விம்மி அழுதாள். அவளால் எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. காலை சாப்பிடவும் இல்லை. என்ன செய்வது என்று முடிவெடுக்க முடியாமல் தவித்தாள். சர்மிளா முற்றத்தில் நின்ற மாமரத்தின் மீது கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்திருந்தாள். அவளை நெருங்கிய சிவகாமி, "சாப்பிட்டுட்டு வந்து ஆடம்மா" என்றாள். சர்மிளா நிமிர்ந்து தாயைப் பார்த்தாள். இரண்டு சோடி விழிகளும் ஏக்கத்துடன் சந்தித்துக்கொண்டன. தாயின் முகம் வீங்கிக் கறுத்திருந்தது. விழிகள் கலங்கியிருந்தன. தினமும் ஒழுங்காகச் சீவப்படும் தலை, சீவப்படாது கலைந்திருந்தது. இப்படியான கோலத்தில் அவள் தாயை ஒரு போதும் கண்டதில்லை.

"என்ன குஞ்சு பார்க்கிறாய்... வா சாப்பிட..."

"எனக்குப் பசிக்கேல்லை..."

காலமையும் சாப்பிடேல்லை" என்றவாறு ஊஞ்சலில் அமர்ந்திருந்த சர்மிளாவைத் தூக்கி இடுப்பில் வைத்தாள் சிவகாமி. சர்மிளா தனது கைகளால் தாயின் கண்ணீரைத் துடைத்துவிட்டு இருகைகளாலும் அவளது கழுத்தைக் கட்டியணைத்து, அவளின் கன்னங்களில் முத்தமிட்டாள். தாய் படும் வேதனை அவளைக் கலங்க வைத்தது.

"நீ அழாதயணை. நான் நாளைக்கு பள்ளிக்கூடத்திற்குப் போறன்."

"என்ர குஞ்சு" என்றவாறு மகிழ்ச்சியுடன் அவளை முத்தமிட்டாள் சிவகாமி. சர்மிளா விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

**சஞ்சீவி சிறுகதை**

"அழாதையம்மா நான் அதிபரிட்டைப் போய்க்கேட்கிறேன்..."

"சீச் சீச் சீ....அங்கை வராதையுங்கோ" பரபரப்புடன் சொன்னாள் சர்மிளா.

"நான் அங்கைவரேல்லை உன்ரை அதிபரிட்டைப் போய் யோசனை கேட்கப்போறன். ஊரிலை உள்ள பள்ளிக்கூடங்களிலே படிக்கிற பிள்ளைகளும் கம்பஸ்சுக்குப் போகுதுதானே.... அதோட மிகத் திறமையான பிள்ளைகளை எடுக்கிற பள்ளிக்கூடங்களிலை எல்லாப் பிள்ளைகளும் பாஸ்பண்ணி கம்பஸ்சுக்குப் போகுதுகளே......"

தாயின் வார்த்தைகளைக் கேட்டு பூரிப்புடன் சிரித்தாள் சர்மிளா. கருமேகங்கள் அகன்ற வானத்தைப் போல் பளீச்சென்று இருந்தது. அவளது முகம்.

மாதங்கள் சில கடந்தன. பட்டணத்தில் உள்ள மிகப்பெரிய பாடசாலையொன்றில்மாவட்டமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

அந்த மண்டபத்தில் தனிப்பாடல் நிகழ்ச்சியில் வலய மட்டத்தில் முதலிடம்பெற்ற மாணவர்கள் இருந்தனர். சர்மிளா தனது வகுப்பில் முன்பு படித்தவர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று பார்த்தாள். ஒருவரும் இல்லை. மாணவர்களை அழைத்து வந்த பொறுப்பாசிரியர்களும் புதியவர்களாகவே இருந்தனர். நடுவர்கள் திருவுளச்சீட்டின் மூலம் போட்டியாளர்களைத் தேர்ந்தெடுத்து போட்டியை ஆரம்பித்தனர்.

பாடிமுடித்துவிட்டு வெளியேவந்து அதிபருடனும் பொறுப்பாசிரியருடனும் நின்றாள் சர்மிளா. அவளது மனம் பரபரத்தது.

"ஒண்டுக்கும் யோசிக்காதை சர்மி..... நீதான் முதலாவதாக வருவாய்...." என்றார் ஆசிரியர்.

அதிபர் அவளின் முதுகில் தட்டினார். சர்மிளா பூரித்துப்போனாள். 'இதுவேபோதும் நான் முதலாய் வராட்டிலும் பரவாயில்லை......' என்று மனதுள் நினைத்தாள் சர்மிளா.

போட்டி முடிவுகள் ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. சில நிமிடங்கள் உறங்கிக்கொண்டிருந்த ஒலிபெருக்கி, திடீரென்று விழித்துக்கொண்டது. "ஆவலோடு முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மாணவமணிகளுக்கு இன்னும் ஒருமுடிவை அறியத்தருவதில் மகிழ்வுறுகிறோம்.... கனிஷ்ட பிரிவு பா ஓதல் முதலாம் இடம்... செல்வி ஞானசுந்தரம் சர்மிளா... இரண்டாம்......."

சர்மிளா பொங்கிப் பூரித்துப் போனாள். "நான் முன்னுக்கே சொன்னனான்தானே...... வாருங்கோ சர்மிளாவோடு சேர்ந்து ஒரு ஐஸ்கிறீம் குடிப்பம்......" என்றவாறு அதிபர் முன்னே செல்ல பொறுப்பாசிரியரும் சர்மிளாவும் அவரைப் பின்தொடர்ந்தனர்.

'குழந்தைகளின் மனங்கள் அனிச்சம் பூக்களைப் போன்றவை; நோக்கினாலே வாடிவிடும்.'

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

**27 - 11 - 1999 இலிருந்து 03 - 12 - 1999 வரை**

| | | | |
|---|---|---|---|
| | வியா. சனி | | சந். |
| | இராசிச்சக்கரம் | | ரா |
| செவ். கே | | | |
| | சூ | புத. | வெ |

*மாற்றம்: புனர்பூசம் 3-ம் பாதம் - மிதுனம் இராசியில் சந்திரன் நிற்கும். 30.11.1999இல் துலாம் இராசியில் வெள்ளி மாறும்.*

*அரசியலில் பந்து விளையாட்டுத் தொடரும். அங்கும், இங்கும் மக்கள் தளம்பல் நிலை, மனோபாவம் மிஞ்சும். எதுவும் திடமாக நடக்காது. விட்டு விட்டு முழக்கங்கள் கேட்டபடி இருக்கும். தேர்தலில் குழப்பநிலை, அரசியல் வேட்டு, வோட்டுக்காக ஏற்பட்டு மக்களைத் திசைதிருப்பும். இந்தியாவில் வடக்கே சில தீவிர நடவடிக்கைகள், தாக்கங்கள் ஏற்படலாம். மத்திய கிழக்கு நாடுகளில் யுத்தஅபாயம், கிழக்கு நாடுகளில் வெள்ளம், காற்று, பூகம்பம் என மக்களுக்குப் பல இயற்கையான அழிவுகள் ஏற்படலாம். மேற்கு நாடுகளின் பொருளாதார அழுத்தங்களில் மாற்றங்கள் ஏற்படும் எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்

அடிக்கடி விரதம் பிடிப்பதனால் மனித சக்தியின் வேகம் நிதானப்படுகின்றது. கார்த்திகை மாதம், மார்கழி மாதம் நிதானப்படும் மாதங்களாகும். தொழில் ஸ்தானத்திலோ அல்லது வீட்டிலோ செய்வனவற்றைத் திரும்பிப் பார்க்க நேரமில்லை. மறதி ஒருபுறம், தொழில் வேகம் ஒருபுறம் என நீங்கள் செயற்பட்டபடி இருப்பீர்கள். எவரது கருத்துக்களையும் கேட்கமாட்டீர்கள். அரச அதிகாரிகள் உதவுவார்கள். வீடு மனையில் சிறுமாற்றம் ஒன்று ஏற்படலாம். பூர்வீகச் சொத்தால் இலாபங்கள் ஏற்படும். சளி, வாய்வுத்தொல்லை, விறைப்பு, தடிமன் காய்ச்சல் என்பன ஏற்படலாம். கோயில் வேலைகள், சட்டம், வங்கி, எண்ணெய், நிர்வாகம், மின்சாரத்துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் ஏற்பட்டபடி இருக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள்.*

## இடபம்

திருமணப்பொருத்தத்திற்கு செவ்வாய்ப்பொருத்தம், கிரகப்பொருத்தம், நட்ஷத்திரப் பொருத்தம் என்பன முக்கியமாகும். இப்பொருத்தங்கள் இல்லாவிடில் குடும்பத்தில் கலக்கம், கலகம் நிச்சயம் ஏற்படும். எந்தப் பொருத்தமிருந்தாலும் உங்களுக்கு தொழில் பொருத்தம் நிச்சயம் ஏற்படும். அமைதியாக இருந்து அலுவல்களைச் செய்தபடி இருப்பீர்கள். காணி, பூமியில் சிக்கல் ஏற்படும். இடமாற்றங்களால் இழப்புக்கள் ஏற்பட்டபடி இருக்கும். புத்திரரால் மகிழ்ச்சியும், நன்மையும் அடைவீர்கள். மாதா வழியிலிருந்து நன்மைகள் வரும். நெஞ்சுவலி, மனப்பயம், வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். எதிர்ப்பாலாருடன் அளவுக்கதிகமாகப் பகிடிவிடாதீர்கள். ரீ.வி,செய்தி, நிர்வாகம், தொழில்நுட்பத்துறையினர் அதிக இலாபங்கள் அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

## மிதுனம்

வயிறு நிரம்ப காசு தேவை? ஆனால் மனத்திருப்தி ஏற்படாவிடில் வயிறு நிரம்பித்தான் என்ன பிரயோசனம்? மனத்திருப்தியான வாழ்வு அமைதியை ஏற்படுத்தும். தொழில் ஸ்தானத்தில் எல்லோரும் திருப்திகரமாக உதவிகளைச் செய்தபடி இருப்பார்கள். அடிக்கடி ஏதாவது விஷயமாக மனப்பயம் வந்து மோதியபடி இருக்கும். ஆயினும் மேலதிகாரிகள், அரசஅதிகாரிகள் ஆதரவு தருவார்கள். எல்லோருக்கும் ஆலோசனை சொன்னபடி இருப்பீர்கள். வாய்வுத்தொல்லை, கைகால் அடிபடல், தலைவலி, மலச்சிக்கல் என்பன இருக்கலாம். பத்திரிகை, ஆசிரியர், வியாபாரம், விவசாயத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு அதிகநன்மைகள் ஏற்படும். பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். தூரதேசச் செய்தி ஒன்று வந்து மனத் தொல்லை கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

## கடகம்

மனப்பொருத்தம் இருந்தால் திருமணம் செய்யலாமா? கொழும்பில் எல்லாம் வீடு பொருத்தம் பார்த்தா கட்டுகிறார்கள் எனச் சொல்லித் திருப்தி காணுபவர்கள் பலர். விதியின் முடிவு வேறு; நமது விருப்பம் வேறு. எமது விருப்பப்படி செயற்பட்டு சில முடிவுகளை எடுத்தாலும் - செய்தாலும் விதியின் முடிவே இறுதியாகின்றது. தொழில் ஸ்தானத்தில் புதிய திருப்பம் வர முயற்சித்தாலும், இறுதியில் திடீர், திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு மனஅமைதி ஏற்படும். ஏங்கும் மன எண்ணச்சிந்தையால் கவலைப்பட்டபடி இருப்பீர்கள். கைகால் விறைப்பு, புண், அவியல், நெருப்பால் சுடுபடச்செய்யும் பலன்கள் காணப்படுகின்றன. குருத்துறை,

# சோதிட சஞ்சீவி

சட்டத்துறையினர்களுக்கு நல்ல வருவாய்கள் வரும். பொருள்இழப்பும் ஏற்படலாம். கவனமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

## சிங்கம்

மதம் மாறுவது அல்லது மாற்றப்படுவது என்பது சமுதாயத்தில் எந்த அந்தஸ்தும் இல்லாமல் எப்படியும் வாழலாம் என முடிவு எடுக்கும் ஒரு சிலரின் விரக்தி நிலையாகும். இதனால் அவர்களின் சந்ததிகள் குழப்ப நிலைகளை அடைகின்றார்கள். வறுமையின் பிடியிலுள்ளவர்களை மத வலிமையுடையவர்கள் மாற்றுகிறார்கள் என நீங்கள் எண்ணுவதில் நியாயம் இல்லாமலில்லை. இருப்பினும் தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் தேடிவரும். அதிகாரம் செலுத்துவீர்கள். உங்களுக்குச் செல்வாக்கு அதிகரிக்கும். சொல்வாக்கு செல்வாக்குப்பெறும். வாய்வுத்தொல்லை, கண் கூச்சம், இடுப்புவலி, முதுகுவலி, என்பன வரலாம். எந்தத்தவறையும் உடனே சரிபிழைகண்டு தீர்க்கமான முடிவு செய்வீர்கள். மருந்து, மின்சாரம், விவசாயம், சட்டத்துறையில் ஈடுபாடுள்ளவர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள். தூரதேச பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

## கன்னி

எவருக்கும் சேரவேண்டியவை சேராமல்விட்டால் தானாகச் சோகம் வரத்தான் செய்கின்றது. தொழில் ஸ்தானத்தில் அமைதி - புயல், புயல் - அமைதி என மாறி மாறி ஏற்பட்டபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் மனச்சஞ்சலம் ஏற்படலாம். வீட்டில் செலவுகள் அதிகரிக்கும்.வடக்கு, தெற்குத் திசைகளில் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். பெற்றோர் வழியிலிருந்து உதவிகள் கிடைக்கும். நரம்புவிறைப்பு, களைப்பு, நாரிநோ,

# மகாதேவா ஜோதிடம்

வாய்வுப்பிடிப்பு பொருளால் வேதனை, பயவுணர்வு என்பன ஏற்படச்செய்யும். உங்களுக்குத் துரோகம் செய்தவர்கள் நீங்கள் அறியவே தண்டனைகளைப்பெறுவார்கள். குடும்பத்தில் பிரிவொன்று மனத்துயரைத் தர இடமுண்டு. ஆசிரியர், வியாபாரம், விவசாயம், எண்ணெய், நீதி, நகைத்துறை தொடர்பானவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள்.*

## துலாம்

கடவுள் ஏன் இந்தக் கஷ்டங்களையெல்லாம் நமக்குத் தருகிறார் என யோசிக்காதீர்கள்? நாம் செய்தவற்றை வரிசைப்படுத்தும் பொறுப்பு அவருடையதாக இருந்தாலும் - நாம் செய்தவை நம்மை நோக்கிவரும் வேகத்தைக் கட்டுப்படுத்த அவரால் முடியும். இருப்பினும் தொழில்ஸ்தானத்தில் நடக்கும் வேகமான முடிவுகளால் அடிக்கடி தாக்கப்படுவீர்கள். நிதானமாக,அமைதியாக இருந்து கவனித்துச் செயற்படுவீர்கள். இடமாற்றங்கள் சகஜமாகும். வயிற்றுக்குழப்பம், தடிமன்குணம், கைகால் சோர்வு, குடல்வருத்தம், நெஞ்சுநோ என்பன வருத்தலாம். ரீ.வி,பத்திரிகை, கோவில், கடல், புடைவை வேலைகள், சட்டத்துறை, தொடர்புடையவர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள்.*

## விருச்சிகம்

"நான் கடவுள் என எவர் சொன்னாலும் நிச்சயம் அவர் உண்மையில் கடவுள் அல்லர்" அறிவைக்கொண்டு - பக்குவநிலை அடைந்து பரஆத்மாவான எல்லாம்வல்ல ஆண்டவரை அறியும், உணரும் நிலை ஒரு சிலருக்கு ஏற்படுகின்றது உண்மைதான். அதற்காக அவர்தான் நான் என எவரும் எண்ணிவிடலாகாது. இவ்வாறு தொழில் ஸ்தானத்தில் தான் தான் தலைவர் என்ச் சிலர் உங்களுக்குத் தொல்லைகள் கொடுக்கலாம். வாழ்த்திப்பாருங்கள் அவர்களே உங்களைத் திருப்பிப் போற்றுவார்கள். வயிற்றுநோ, கிருமித்தாக்கம், அடிகாயங்கள், நெஞ்சுநோ என்பன வருத்தலாம். ஓய்வு மிக முக்கியமாகும். அரசியல், நிர்வாகம், விவசாயம்,வியாபாரம், நீதி, எண்ணெய் போன்றதுறையினர் அதிக நன்மைகள் அடைவார்கள். விதி என்பது விஷநீராகவும் வரலாம். அழிக்கும் குண்டாகவும் வரலாம். எரிக்கும் நெருப்பாகவும் தெறிக்கவும் செய்யும். கவனமாக இருந்து தெய்வ வழிபாடு செய்து வரவும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

## தனுசு

பொருளாதார வளர்ச்சியின் வரம்பற்ற போட்டி பல பிரச்சினைகளை பெருக்கியபடி இருக்கின்றது. நிதானமற்ற வேகம் அழிவை அதிகரிக்கச் செய்கிறது. எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாகச் செயற்படுங்கள். எதிர்ப்பாலரின் போட்டிகள் மாத்திரமல்ல பல திசையிலிருந்தும் மறைமுக எதிர்ப்புக்கள் வரலாம். சமாளித்துக்கொள்ளுங்கள். தன்னம்பிக்கை, புத்திசாதுரியம் எதிலும் வெற்றிதரும். நீங்கள் எதிர்த்தாலும் உங்களை மற்றவர்கள் எதிர்த்து வெல்லமுடியாது. சந்தர்ப்பவாதம் கூடாது. நாரிவிறைப்பு, கிருமித்தாக்கம், வயிற்றில்நோ, வாய்வுத்தொல்லை என்பன இருக்கும். வியாபாரம், சமயம், குரு, கமிஷன், அரசியல், பிரயாணத்துறை என்பவற்றில் தொடர்பானவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு,திங்கள்.*

## மகரம்

எந்தப் பல்கலைக்கழகங்களிலாவது ஆத்மா - பரஆத்மா (இறைவன்) என ஏதாவது ஆராய்ச்சிகள் செய்கின்றார்களா? செய்யத்தான் முயற்சி எடுக்கிறார்களா? மனிதசக்தியையே ஆராய்ச்சி செய்து முடியவில்லை. எது எப்படி இருந்தாலும் தொழில் ஸ்தானத்தில் நீங்கள் உங்கள் ஆராய்ச்சிகளை - அபிப்பிராயங்களை - கோபங்களைப் பிறர்மீது காட்டிப் பேச்சு வாங்குவீகள். உங்களைக் கவனித்தபடி ஒரு சிலர் இருக்கிறார்கள். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்பட்டபடி இருக்கும். சளித்தொல்லை, வாய்வு, விறைப்பு, தடிமன் என வருத்தும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். நகைத்தொழில், குருத்துறை, கமிஷன்வேலைகள் என்பன தொடர்பானவர்களுக்கு இலாபங்கள் கொடுக்கும். பொருள்களில் நிதானமாக இருக்கவும். களவுகள்போகலாம்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்.*

## கும்பம்

பூரணபக்தி,தொண்டு எல்லா நிலையிலும் மேலான செல்வமாகும். ஆயினும் வயிறு பசித்தால் எல்லாத் தத்துவமும் வீணாகிவிடுகின்றது. தொழில் ஸ்தானத்தில் மிகவும் பக்தி, விசுவாசத்துடன் செயற்பட்டு நல்ல பெயர் வாங்குவீர்கள். மேலதிகாரிகள் வாழ்த்துவார்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். பிரயாணங்களால் பொருள் இழப்புக்கள் ஏற்படும். எதிலாவது ஆராய்ச்சிகள் செய்தபடி மனம் அலையும். கைகால் சோர்வு, நெஞ்சுபடபடப்பு, நரம்பு வருத்தங்கள், சளி, காய்ச்சல் என்பன மாறிமாறி இருக்கும். பிரயாணத்துறை, கடல் வேலைகள், குருபீடத் தொழில் அல்லது ஆசிரியர்கள், விவசாயத்துறை போன்றவர்கள் அதிக நன்மைகளும் மாற்றங்களும் அடைவார்கள். தூரதேசச்செய்திகளால் மகிழ்ச்சி, மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, திங்கள்.*

## மீனம்

இரண்டாயிரம் ஆண்டு வரவர வேகமான யுத்தபயம், அழிவுகள், செயற்கை - இயற்கையாக ஏற்படுகின்றன உண்மைதான் ஆயினும் விட்டு விட்டு சில இடங்கள் தாக்கப்பட்டாலும் உலகம் முழுவதும் அழிந்து போகாது என்பது மட்டும் உண்மையாகும். காற்றுள்ளபொழுதே தொழில் ஸ்தானத்தில் நல்லசெயற்பாடுகளைச் செயற்படுத்தி நன்மைகள் பெறுங்கள். பிரயாணங்களால் இலாபங்கள் அதிகரித்தபடி இருக்கும். திடீர்திடீரென புதிய திட்டங்கள் செய்து இடங்கள் மாறிமாறிச் சிலர் வர இடமுண்டு. நரம்புத்தளர்ச்சி, சளி, சீதோஷ்ண நிலையால் தடிமன் காய்ச்சல், மறதி வாய்வுத் தொல்லை என்பன ஏற்படும். கடல் தொழில், போக்குவரத்து, வைத்தியம், ஆசிரியர், வியாபாரம், விவசாயத்துறை போன்றவற்றில் தொடர்புள்ளவர்கள் அதிக இலாபங்கள் அடைய இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, திங்கள்.*

# எலக்ரோனிக் யுக....

(VI ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது பணியாள்களைப் பயிற்றுவித்துத் தயாராகிவிடல் வேண்டும். யூரோ, உள்நாட்டு நாணயம் எனத் தன்னியக்க இயந்திரங்களை இரட்டிப்பாக்க வேண்டும். வாடிக்கையாளர்கள் தமது நலன்களைப் பாதுகாக்க புதிய சட்ட ஆக்கங்களையும் எதிர்பார்க்கவேண்டிய காலகட்டம் இது. வங்கிகளை விட வேகமாக வாடிக்கையாளர்கள் எதிலும் ஈடுபட்டுவிடுகிறார்கள். தம்மைப் பழக்கப்படுத்திவிடுகிறார்கள். தமது துறைகளில் புதிய தொழில் நுட்பங்களையும் புகுத்திவிடுகிறார்கள். ஊழியர்களைத் தயார்செய்து விடுகிறார்கள். எந்தச் சவாலையும் ஏற்று வியாபாரத்தை முன்னெடுத்துச்செல்ல முனைகிறார்கள். இவர்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க வங்கிகள் திணறவே செய்கின்றன.

வாடிக்கையாளர்கள் கொடுப்பனவுகளையும் பணமாக்கல்களையும் காசோலைப் பாவனையையும் தாம் விரும்பியவாறு - தமது வசதிக்கேற்றவாறு - யூரோவிலோ உள்நாட்டு நாணயத்திலோ மேற்கொள்ளக்கூடும். இந்த நிலைமையில் வங்கிக் கணக்குகள் தீர்வையாக்கல்கள் சிக்கலாக அமையக்கூடும். தற்போது நடைமுறையில் இருக்கும் வைப்புக்கள், கடன்கள் முதிர்ச்சியுறும் காலத்தில் யூரோ சூடுபிடித்துவிட்டால் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கி மாற்றங்களைச் செய்ய வங்கிகள் தயாராகிவிடல்வேண்டும்.

யூரோ நாணயமாற்றுவிகிதங்கள் 01-01-99 இலிருந்து அமுலுக்கு வந்தாலும் யூரோ நாணயம் 01-01-2002 இல் தான் புழக்கத்துக்குவர இருக்கிறது. இடைப்பட்ட 03 வருட காலங்களில் கணக்குகளை சீர்செய்வதிலும், கணனிகளைத் தயார்ப்படுத்துவதிலும் இயந்திரங்களைச் சரிசெய்வதிலும் வாடிக்கையாளர்கள் ஒருபுறமும் வங்கிகள் ஒருபுறமும் கடுமையாக உழைக்கவேண்டியிருக்கும். அத்தோடு நாணயவடிவத்தில் இல்லாவிட்டாலும் யூரோ கணக்கு ஏடுகளில் இடம்பிடித்துக்கொள்ளும் இடைக்காலம் இதுவாகும்.

வாடிக்கையாளர்கள் கோரும் வேகத்தில் நாணயமாற்று யூரோவில் கிடைக்கவேண்டும். இந்த நாடுகளுக்கிடையே பயணிகள் காசோலைகள் (Travellers Cheques) பயனற்றதாகிவிடும். அத்துறையில் இயங்கும் பல தொழில்கள் முடங்கிப் போய்விடும். அல்லது அவர்கள் தமது உத்திகளை யூரோவுக்கு இசைவாக மாற்றியாக வேண்டும்.

கூட்டுத்தாபனங்கள் - பொருளியல் வல்லுநர்கள்,சட்டத்தரணிகள்,தொழில் நுட்பசாதனங்கள், கணக்காளர்கள் போன்ற பலங்களையுடைய ஒரு நிதிப் பிரிவினூடாகவே வங்கிகளை அணுகி நிற்கின்றன. இத்தகைய பாரிய வாடிக்கையாளர்கள் பலரைக்கொண்டிருக்கும் வங்கியொன்று ஒவ்வொருவரது பிரச்சினைகளையும் தனித்தனியே ஆழமாக ஆராய்வதென்பது சாத்தியமற்றதே. வாடிக்கையாளர்கள் இப்பலன்களின் உதவியுடன் வங்கிகளை விட வேகமாக யூரோவுக்குத் தாவி விடக்கூடும்.

வாடிக்கையாளர்கள் நேரடியாக வங்கிக்கு வந்துதான் தமது கருமங்களை ஆற்றவேண்டும்என்ற நிலைமை மாறிவிடுகிறது. தொலைபேசி மூலமும் தமது தனிப்பட்ட கணனிகள், அலுவலகக் கணனிகள், இன்ரநெற், ஈமெயில் மற்றும் பலஎலக்ரோனிக் தொழில் நுட்பங்கள் மூலமும் இருந்த இடத்திலிருந்தே வங்கித் தொடர்புகளை வாடிக்கையாளர் கவனித்துவிடுகிறார். வங்கிக் கருமபீடங்களில் மனிதமுகங்களைச் சந்திப்பது முன்னேறிவரும் நாடுகளில் அருகிவருகிறது எனலாம்.

பணத்தை எடுப்பதற்கு மட்டுமன்றி, வைப்பிலிடவும் காசோலைகளை வைப்பிலிடவும் தீர்வையாக்கவும் எலக்ரோனிக் தொழில்நுட்பத்தை வாடிக்கையாளர் நாடி நிற்கிறார். இருக்குமிடத்தில் இருந்தே தனது கணனிகளில் வங்கி அறிக்கைகளைப் பெற்றுவிட முயல்கிறார். வாடிக்கையாளரின் வேகத்துக்குத் தாக்குப்பிடிக்க வங்கிகள் தமது கூரையில் 'சற்றலைற்' அன்ரெனாக்களைப் பொருத்திவருகின்றன. இவற்றின் மூலம் பிறிதோர் வங்கியுடன் தொடர்புகொண்டு ஒரு சில செக்கனில் கொடுப்பனவுகளைச் சீர்செய்யத் தயாராகின்றன.

எதிர்வரும் ஆண்டுகளில் வங்கிகளின் தன்னியக்கக் கருமபீடங்கள் (A.T.M) வீதிக்கு வீதியோ, படலைக்குப் படலையோதொலைபேசி இணைப்புகளைப்போலப் பொருத்தப்படகூடும். வாடிக்கையாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை இவற்றினூடே வீட்டிலோ அலுவலகங்களிலிருந்தோ கவனித்து விடமுடியும்.

வங்கிகள் தமது சேவைகளை வாடிக்கையாளர்களின் இடம்தேடி வந்து ஆற்றுவது ஒன்றும் புதினமானதல்ல. அரசதிணைக்களங்கள், பல்கலைக்கழகங்கள், பாரிய நிறுவனங்களிலெல்லாம் வங்கிக்கிளைகள் இயங்கிவருகின்றன.எனவே இச்சேவை எலக்ரோனிக் யுகத்தில் வீட்டுக்குவீடோ அலுவலகங்களிற்கோ நிறுவனங்களிற்கோ இயந்திரங்கள்மூலமாக விஸ்தரிக்கப்படல்வேண்டும் என வாடிக்கையாளர்கள் எதிர்பார்ப்பதில் வியப்பேதும் இல்லையே.

நவீன கணனிகள் கையில் எடுத்துச்செல்லத்தக்கவை. அல்லது சட்டைப் பையில்கூட கொண்டு செல்லத்தக்கவை. இவற்றினுள் ஒரு அலுவலகம் முழுவதையுமே அடக்கிவிடும் அளவுக்குத் தகவல்களை சேமிக்க இயலும். இத்தகைய கணனியொன்றைத் தன்னிடம் கொண்டிருக்கும் வாடிக்கையாளர் ஒருவர் தான் செல்லுமிடமெல்லாம் தனது வங்கிச் சேவையையும் பெறத்தக்க நிலையில் இருப்பார். இத்தகைய வசதிகள் செலுலர் தொலைபேசியில் கூட புகுத்தப்பட்டு விடலாம்.

உலக நாடுகள் பலவற்றிலும் அரச திணைக்களங்களின் பொறுப்பில் இருந்த பல நிறுவனங்கள், வினைத்திறன் கருதி, தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றன. இதனால் பாரிய நிறுவனங்கள் பலவும் சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்குகின்றன. அவை தமது அன்றாட நடவடிக்கைகளில் மிகவும் விழிப்புடன் செயற்படத் தொடங்குவதால் வங்கிச் சேவைகளையும் மிகவும் தரமானதாகவே அமையவேண்டும் என எதிர்பார்க்கின்றன.

எலக்ரோனிக் அறிமுகம் வங்கிகளின் நிர்வாகச் செலவுகளையும் காகிதாதிகள் மூலம் பெருமெடுப்பில் நடைபெறும் வேலை நடைமுறைகளையும் அதனாலான இழுபறி நிலையையும் பெருமளவில் தணிக்கும் என்பதால் இது வாடிக்கையாளர்களிடம் பெரும் வரவேற்பைப்பெறுகிறது. எனினும் வங்கிகள் தம்மை மறுசீரமைக்க பெருமளவில் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை எழுகிறது. இக்கூட்டுத்தாபனங்கள் வங்கிகளின் இலாபத்தில் பெரும் பங்கைத் தட்டிச்செல்ல நினைப்பதும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு சுமையாகிவிடும் என்ற அச்சம் எழத்தான் செய்கிறது.

நீங்கள் உங்கள் வியாபாரத்தை ஓட்டுங்கள். நாங்கள் உங்கள் இயந்திரங்களை ஓட்டுகிறோம் என இக் கம்பனிகள் விளம்பரம் செய்வதைப் பார்த்தால் நாளடைவில் வங்கி வியாபாரம் முழுவதுமே அவர்களின் கையில் போய்விடுமோ என வாடிக்கையாளர்கள் ஏங்காமல் இருக்கமுடியாது.

பெருமெடுப்பில் இயந்திரங்களிலே தங்கிநிற்பதால் வங்கி நடைமுறைகள் பற்றிய போதிய அனுபவம் பணியாளர்களுக்குக் கிடைக்காமற் போய்விடும். என்ன செய்கிறோம்?யாரோடு தொடர்பு கொள்கிறோம்? யாருக்குச் சேவை செய்கிறோம்? என்ற தெளிவு இன்றி விசைப்பலகைகளை (Key Boards) இயக்கும் பணியாளர்களை உருவாக்கிவிட இது வழிவகுக்கிறது.


எதுவானாலும் வேகமான கணனிமயமாக்கல் ஏதாவது சிக்கல்களில் போய்முடிந்து விடக்கூடாது என்பதும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளில் பிரதானமாகவே அமைகிறது. பணம் பெரும்பாலும் எலக்ரோனிக் வடிவத்தில் மாறிவிட்ட பின் தன்னியக்க இயந்திரங்களை நம்பி இயங்கும் உலகில் கணனிப் பதிவுகள் சரிவரச் செயற்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்க முடியும்?

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்



தமிழீழத் தாயகத்தில்
கால் மாறி வைத்து
தலை தடுமாறிப் போன
இந்தியப் படையின்
இரத்தக்கறை படிந்த
கால் சுவடுகள் இவை.

**- லோ.வதனி -**
ஒட்டுமடம்.

மனிதனே!
உன் பாதங்கள்
பதிவது
பரிசுத்தமான பூமியிலல்ல;
புதைந்துள்ள புதையல்களில்.
புதையல்கள் பொற்காசுகளல்ல - அவை
பாதங்களை பறித்தெடுக்கும்
பாவிகள்
பகுத்தறிவு உள்ளவரின் செயலினால்
பாதங்கள் பாதுகாக்க
பகுத்தறிவில்லா நாய்கள்
பவனி வருகின்றன
பயப்படாதே மனிதா!
பார்த்து நட!

**- கனகராயனூரான் -**

சிவனொளியில் காணும் சீர்மிகு பாதமோ;
நெடுந்தீவில் உள்ள நெடிய பாதமோ;
செம்மணியில் சிதைந்த செந்தமிழர் பாதமோ;
வீதியில் வீழ்த்தப்பட்ட விதவையின் பாதமோ - இல்லை
தலைவன் வழியில் தடைகளைத் தகர்த்தெறிய
தன்மானத்தோடு தடம் பதித்த
தமிழர்களது பாதச்சுவடு!

**- சண்டியூர் சங்கர் -**

இவை - என்
பாதச்சுவடுகள்தான்.
வெளிச்சத்தை நோக்கி
வெளிக்கிட்டதாக
எண்ணித்தான் வந்தேன்.
வெளியேறும் போது
'இப்படித்தான் போவாய்'
என
'சீனியர்ஸ்'
ஆக்கினார்கள்!

**- சைதன்யன் -**

கற்களும் முட்களும் கால்களை வருத்தினும்
துன்பமும் துயரமும் தொடர்ந்து துரத்தினும்
எத்தனை இடரிலும் எடுத்த பணி விடேன்!
மண்ணினை மீட்டிடும் திண்ணிய பாதையில்
மகிழ்வொடு சொல்லுவேன் மங்களம் காணுவேன்!

**- உமை -**

பாதம்
பதிந்த
கோலம் பார்த்து
புரிந்து கொண்டேன்
ஊனமென்று ~
புரிந்ததனால்
தெரிந்து கொண்டேன்
நீ...!
ஈழ மண்ணின்
புதல்வனென்று...!

**- சரோ தம்பித்துரை -**

நீல் ஆம்ஸ்ரோங்
நிலாவில் அடிவைக்க;
காதல் கன்னியவள்
கனவில் கால் பதிக்க;
தன்னை மறந்து-இங்கு
தாலாட்டும் இதயம்
மறத்தமிழ் மேனியை
மிதித்தவர் பாதத்தின்
சுவடுகள் கூட
மிஞ்ச வேண்டாம்-என்று
வீரிட்டு அலறும்
வீரத்தின் இதயம்!

**- க.வாணி -**
கச்சாய்.

வைத்த கால் வாங்கா மரபில்
வந்து உதிரம் சிந்தியதாலோ - நீ
எத்திசையில் எதிரி வரினும்
எதிர்க்கத் துணிந்து இவ்வாறானாய

**- ம.அனோமிலன் -**
அளவெட்டி

அன்றுமுதல் இன்றுவரை
ஆளுங்கட்சியும்
எதிர்க்கட்சியும்
எதிரெதிர் தடம் பதிக்கின்றன!
அவற்றினிடையிலுள்ள
இடைவெளியாய்...
இனப்பிரச்சினை!

**- முத்துமாரி -**

மிதிவெடிகள் இன்று
விதிப் பொறியில் ஒன்று
தவறி வந்த பாதையில்
சிதறிப்போன பாதங்களில்
குருதி படிந்த எச்சமிவை.

**- கே.ஜே.கலை -**
மட்டுவில்.

தமிழர் பாதங்கள்
இடம் பெயர்ந்தன ~ ஆனால்
அரசின் தேர்தல்
வாக்குறுதிகளைப் போல்
தமிழர்
இலட்சியங்கள்
தடம் மாறப்போவதில்லை
என்பது மட்டும் உறுதி!

**- இணுவை றொட்றிக் -**

இவை....!
தேச வரலாற்றுப்
பாதையிலே....
பதிந்த.... பாதங்கள்....!
உதயத்தின் வரவிற்காய்
உதிரத்தை மையாக்கி.....
வரைந்த.....
உணர்வுக்.... கோலங்கள்!!!

**- நா.கபில்நாத் -**

பாதைகள் தயார்தான்
பாதங்கள் தான்
பயணிக்க மறுத்து,
பயத்துடன் நிலைதடுமாறி....
இந்நிலை நீடிப்பின்
எப்போது.... காண்பது?

**- பிராதிகி -**
பூநகரி.

நான் -
நடந்துவந்த பாதையில்
பரந்து கிடந்தவை
புக்களல்ல;
கூரிய முட்களே
எனினும் -
இரத்தம் துடைத்து
முன்னேறினேன் -
முடிவில்தான் தெரிந்தது
பாதங்கள்
'தடம்' புரண்டிருப்பது!

**- மயூறனி -**
வன்னி.

பாதம் பதித்த பாதச்சுவடுகள்
பாதையை அறியப் பயன்படுமா?
நாதம் எழுப்பி நர்த்தனம் புரிய
பாவம் அதற்கு உயிரில்லையே!
கீதம் பாடி கிழகிழுப்பூட்ட
கிட்டுமா இனி உறவு?
வேதம் கூறும் விழுமியம் என்ன?
வேதனையின் அழுகுரல் தானே!

**- ஸ்ரீ.சத்தியா -**

மண்ணில் பதிந்த எண்ணில் சுவடுகள் பல
கண்ணிலிருந்து மறைந்தே போயின!
இன்னும் பல சுவடுகள் மண்ணுள் புதைந்து போயின
இன்னும் நீ ஓடும் வரைதான் இந்நிலை தொடரும்!
தீரமுடன் நீ யெழுந்து செருக்கள மாடிச்
செங்குருதிச் சகதியிலே வீறுநடை போடு!
நாளை வரும் சந்ததி படித்திடுமுன் வரலாறு
என்றும் போற்றிடும் நின் வீரப் பொற்பாதம்!

**- ந.வே.அகியோபி -**
வதிரி.

எந்தப் பொற்பாதங்கள்
எந்தன் இதயப்பாதையில்
நடைபயின்று கவிச்சிலிர்ப்பை
உருவாக்கியதோ.....
அந்தப் பொற்பாதங்களுக்கே
இந்த மௌனமொழி சமர்ப்பணம்!

**- கோவையூர் எஸ்.கௌசி -**

குருதிவிட்ட குவலயத்திற்கு
உவமை தேடி!
குற்றுயிராய்க் கிட்கும் எங்கள்
உறவை நாடி!
பற்றை பறி எங்ஙனுமே
வந்தோம் தேடி!
அப்போ; காலடியில்
வெடித்ததென்ன 'கன்னி' யோடி?

**- திருநா.மயூரன் -**
யாழ்.

இரத்தம் தோய்ந்த - என்
இளைய சகோதரனின்
பாதச் சுவடுகள்
இப்படித்தான் ஆயிற்றாம்
பகிடிவதையின் போது...

**- சௌஜன்யா -**

சொந்தங்களைப் பிரிந்து
சோகங்கள் சுமந்து
கானகம் சென்ற
கால்தடம் திரும்புகிறது
பெரும்பகை வெல்லும்
பேராற்றல் இதற்குண்டு - ஏனெனில்
குருதி ஆற்றில்
குளித்த கால்களின்
பாதச்சுவடுகள் இவை!

**- சிவன் -**
பளை.

இம்மாறுபட்ட தடங்கள்
நிச்சயம் மனிதத் தடங்களல்ல,
இனவெறிபிடித்த அரக்கரின் - அல்லது
மதவெறிபிடித்த மாக்களின்....
ராட்சதத் தடங்களே இவை!

**- பராங்கதன் -**

வருத்தப்படாதே தமிழா!
மண்ணின் கறைகள்
நாளையே கழுவப்படும்
எச்சரிக்கை தமிழனுக்கு!
தமிழ் மனத்தின் கறைகள்
பண்பாட்டுச் சிதைவுகள்
என்றுமே கழுவமுடியாதவை;
இனத்தைவிழுங்கும் கல்லறைகள்.

**- தி.க.திருக்குமரன் -**
வட்டுக்கோட்டை.

சகதிக்குள் கால்பதிக்கும்
அகதி வாழ்வுக்கு
மக்களை ஆளாக்கிய
சர்வதிகார ஆட்சியாளர்கள்
வரலாற்றுச் சகதிக்குள்
தூக்கி வீசப்பட்டமையே
வழி வழியாக வந்த
வரலாற்று உண்மை.

**- வதிரி வாசன் -**

*விதைபட்ட மிதிவெடியில்*
*வேளாண்மையான பாதங்களிவை.*

**- கே.ஜெயக்குமார் -**
மட்டுவில் கிழக்கு.


குருதி தோய்ந்த எம் - பாதக்
குருதிச்சுவடுகள்
குறித்ததிசை நோக்கி
குனிந்தோடிய காலம்
குடி முழுகிப்போச்சு
குதித்தெழுந்து
குறிவைக்கும் காலம்
குலை நடுங்கவைத்தாச்சு!

**- துறையூர் தீலீப் -**

செம்மணிக் கதை - இது
செம்மையான கதை
வந்தார்கள் ஆராய்ச்சி செய்யவென
போனார்கள் தடயத்துடன்
முடிவில்லாத தொடர்கதை - இந்த
செம்மணிக் கதை.

**- கம்பஸ் கும்-**

## மௌனமொழி - 62



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.
இதனை வரைந்தவர் உடுவில் அரவிந்தன்.

எதிரும் புதிருமான...
தடம் நிச்சயமாய்...
தமிழனதுதான்
சந்தேகமில்லை.

**- பண்ணாக நாரதன் -**

நிலவில்கால்பதித்தான்............
'நீலாம்ஸ்ரோங்' அதை சாதனை என்றோம்!!........
தமிழனின் தரையில் கால் பதித்தான்?
தாயகத்துக்கு இது வேதனை என்றோம்!!........

**- சு.கோபி -**
வதிரி

பாதம் பட்ட இடமனைத்தும் - அப்
பாவிமக்கள் ரத்தச் சேறு.....
பார்த்துச் சென்ற விசாரணைக்குழு
பரிசோதனைக்காக காத்திருக்கிறது!!

**- சு.லோகாபி -**
வதிரி.

இலக்குகள் எதிர்த்த
இழுபறிப் பயணத்தால்
நிழல்கள் கூட
சிதறும் தேசம்!

**-முனையன் வளவாள் -**
மயிலிட்டி.

ஒன்று சந்திரிகாவின் பாதம்;
மற்றயது ரணிலின் பாதம்;
இரண்டுமே பேரினவாதம்.
யுத்தத்தை நிறுத்துவதில் பேதம்
வெளிப்பட இருப்பது பூதம்!(பூகம்பம்)

**- கனன் -**

மதமெல்லாம் சொந்தம்
சொல்லும்
சிவனொளி பாதமா?
பகவான் சத்தியசாயி
பாபவினதா?
இறைமகன் யேசு
கழுவித் துடைத்த
இராயப்புவினதோ?
இல்லை இவை...
செம்மணிக்கு வழிகாட்டும்
செந்நீர் குறிகளா?

**- ம.ஜெகூ -**
கிளிநொச்சி.

'துண்டிக்கப்படாத
பாதங்கள்
பாதுகாப்பாய் மீள
சுழன்று பார்க்கிறது...
ஆனால்
எங்கும் மிதிவெடியின்
கறைபடிந்த நிலந்தான்.
மீண்டும்....'


**- வி.ப.சுபாங்கினி -**
உடுவில்.

நண்பனே!
உன் காற்றசைகள்
செம்மணியில் சிதைந்தாலும்
உன்காற்றடங்கள்
கண்மணியில் அகலாது!

**- திலீபன் -**
இமையாணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பிரிய பூமிக்காக...



## விஞ்ஞான ரீதியான கற்பனைத் தொடர்

ச.குமுதினி
(சங்கத்தானை)

*வாயிலில் ஓர் அறிமுகம்...*
*இந்தக் கதை நிகழ்கின்ற காலப்பகுதியானது கி.பி.2500 ஆண்டுகளுக்கும் பிற்பட்ட காலப்பரப்பிலாகும். மனித வரலாற்றின் துரித முன்னேற்றத்தின் விளைவுகளான கொடிய யுத்தங்களும் நோய்களும் மனித உயிர்களைப் பலிகொண்டு அழித்துவிட, எஞ்சியுள்ள மனித குலம் தன்னைத்தானே சீரமைத்துப் புதிய உலகக் கட்டமைப்பொன்றை உருவாக்கியுள்ள காலம் என்ற கற்பனையின் அடிப்படையில் இவ்விஞ்ஞானக் கருத்துக்களைத் தழுவிய புனைகதை வரையப்பட்டுள்ளது. ஆதாரமாய்க்கொண்டு கதை புனையப் பயன்படுத்தப்படும் கருத்துகள் யாவும் கற்பனைகளே!*

மலர்ந்து தெளிவாய் விரிந்திருந்த காலைப்பொழுதின் இனிமையை உணர்ந்து அனுபவிக்கமுடியாமல் ஒரே யொருகேள்வி ஆசிரியை சிசிலியாவின் நினைவுகளை நிறைத்துநின்றது.

'யூலியனுக்கு என்ன நேர்ந்துவிட்டது?'

தலையைக் கைகளில் தாங்கியவாறு எத்துணை நேரமாக அவள் இந்தக் கேள்விக்கு விடைகாண முயன்றுகொண்டிருக்கிறாள். இலேசாக தலையை வலிப்பது போலவும் இருந்தது.

எந்த விதத்தில் அவனை அணுகி அவனை அறிந்துகொள்ளமுடியும் என்பது புரியாத புதிராயிருந்தது. அவனுங்கூட ஒரு புதிராய்த்தானே இருக்கிறான் இப்பொழுது. அதுவும் மர்மம் நிறைந்த புதிராக. யாருமே அவனைப் பார்க்கும் பொழுதில் எண்ணத்தோன்றாத இயல்புகளைக் கொண்டவனாய் அவன் இருப்பது அவள்கூட அதிக நாள்களாய் அறிந்திராததுதானே.

அவள் இளவயதுள்ள துடிப்பான ஒரு பெண்தான். ஆயினும் இதுநாள் வரையான கற்பித்தலில் என்றைக்குமே அவள் இதுபோன்ற ஒரு பிரச்சினையை எந்த ஒரு மாணவனிடமிருந்தோ மாணவியிடமிருந்தோ எதிர்நோக்கியிருக்கவில்லை.

கண்களை மூடி எண்ணத்தை ஒரு நிலைப்படுத்த முயன்றாள். இயலாமற் போகவே, எண்ணத்திரையில் வினாக்கள் விடையற்று எழுந்தன.

'ஏன் யூலியன் இப்படி நடந்து கொள்கிறான்? பூமியின் மற்றைய சிறுவர்களைப்போல அல்லாது ஏன் தன்னை வித்தியாசப்படுத்திக்கொள்கிறான்? அசாதாரணமானவனாக... அச்சமூட்டுபவனாக...இது அவன் இயல்பல்லவே. அவ்வாறெனின் அவன் ஏதும் மனவியல் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளானா...?'

சிசிலியாவிடைபுரியாமல் சோர்ந்து போனாள்.

அவளுக்கு மிகப்பிடித்தமான சிறிய, துடிப்பான, தெளிவான சிறுவன் யூலியன் எந்தநாளும் விடிகாலையில் அவள் கல்வியகத்துக்கு வரும் வேளையில் கையில் வெள்ளை மலரோடு தானும் ஒரு மலராகச் சிரிக்கின்ற அவன் கண்களில் குழந்தைப் பருவத்தின் ஒளி இன்னும் தங்கியிருப்பதை அவள் உணர்ந்திருக்கிறாள்.

'ஆனாலும்... எட்னா பொய் சொல்லியிருக்கமாட்டாள். அவள் கண்களில் இருந்த அச்சமும் பீதியும் பொய்யானதில்லை. அவள் பொய் சொல்வதற்குரிய அவசியமும் இல்லை. மேலும் அவள் யூலியன்மேல் மிகுந்த அன்புள்ள, நல்லியல்புள்ள சிறுமி...'

சிசிலியா தன்னுள்ளே சொல்லிக் கொண்டாள்.

ஒரு குளிர்காலக் காலைவேளையில், கட்டளைப் பணியகத்தின் நேரடிச் சிபார்சின் பேரில் அவன் அவளின் கீழ் கற்பித்தலுக்காய் அனுமதிக்கப்பட்டான். ஆரம்ப நாள்களிலேயே அந்தப் பிஞ்சுமுகத்தின் வெளிர் நீலக்கண்களில்ஓர்ஏக்கத்தை உணர்ந்திருந்தாள் சிசிலியா.

பின்னர் கிடைத்த விவரக்கோவையில் அவன் தாய் தந்தையரின் ஆதரவு அற்றவன் என்றும் பொது சிறுவர் முகாமில் வளர்பவன் என்றும் அவளுக்குத் தெரிந்தது. அக்கணத்தில் பிறந்த அனுதாபம் இக்கணம் வரை -யூலியனைப் பற்றிய அதிர்ச்சியான தகவல்களை அறிந்த பின்னுங்கூட- குறையாமலே இருக்கிறது.

'என்னுடைய அனுதாபம்தான் அவனுடைய தவறுகளையோ செயல்களையோ அறியமுடியாமற் செய்கிறதாயிருக்கலாம்...' முடியாது அவளால் அவன் சார்பான இரக்கத்தை நீடிப்பதற்கு முடியாது. உலகம் அறிந்தது போலச் சிசிலியா - ஆசிரியையாக மட்டும் அவள் செயற்படமுடியாது. அதற்கும் மேலால் அவள் மட்டுமே அறிந்த இன்னொரு சிசிலியாவாகவும் அவள் செயற்படவேண்டும்.

கட்டளைப் பணியகத்தினால் விடுக்கப்பட்ட நேற்றைய தொலைக்காட்சி அறிக்கை மீண்டும் அவள் கண்களில் தோன்றியது.

'புதிய உலகக் கட்டமைப்பையும் பூமிக்கிரகத்தையும் அழித்தொழிக்க முயல்கின்ற நாசகாரிகளின் கூட்டம் பூமியின் உயிரினமண்டலத்துள் புகுந்திருக்கிறது. ஆதலால் எந்தவொரு சிறு அசாதாரண நிகழ்வையும் அலட்சியப்படுத்தாமல் அந்தந்தத்துறை சார்ந்த கட்டளைப் பணியகத்திடம் அறிவிக்கவும். இது உங்கள் பூமி...'

முதல் நாளிரவு செந்நிறப் பின்னணியில் திரையில் தோன்றிய நீல எழுத்துக்களாலான எச்சரிக்கை கண்களுள் காட்சியாகி மறைந்தது.

நினைவில் புதிதாய் ஒரு துடிப்பு பிறந்தது. யூலியனை அணுகி நிதானமாய் அவனை அறியவேண்டும். அவன் எந்த அசாதாரண இயல்புமற்ற வழமையான சிறுபிள்ளைத்தனங்கள் நிரம்பிய சிறுவன் என்பதை நிரூபிக்க வேண்டும் என்ற ஆவல் தோன்றியது.

பெற்றோர் யாவர், என்ன ஆனார்கள் என்பதே அறியாமல் சிறுவர் முகாமில் வளர்கின்ற அவனைச் சிக்கல் வலயத்துள் இருந்து எப்படியாவது மீட்டுவிடவேண்டுமென அவள் மனம் துடித்தது.

அவன் மேல் எட்னா சொன்னது போன்ற ஒரு நிலைமையைக் கூறி அவனைச் சர்ச்சைக்குரியவனாகக் கட்டளைப் பணியகத்தின் விசாரணைக்கு உட்படுத்துவதை அவளால் ஏற்றுக் கொள்ளமுடியாது. நெஞ்சில் அவன் நினைவு நெகிழ்ந்து கனிந்தது.

யூலியனை நேரே கண்டு உரையாடியபின் மேற்கொண்டு முடிவுக்கு வரலாம் எனத் தீர்மானித்தாள் சிசிலியா. மென்மையான சங்கீதத்தை வாயினுள் முணுமுணுத்தபடியே கல்விக்கூடத்தை நோக்கி நடக்கத்தொடங்கினாள், எத்தகைய மர்மங்கள் நிறைந்த ஒருவனைப்பற்றி தான் இத்துணை இலேசாக எடுத்துக்கொண்டு விட்டாள் என்பதை அறியாமலே.

* * *

அதேவேளை...

பூமியின் மிகப் பிரதான வர்த்தக நிலையங்களுள் ஒன்றாகப் புகழ் பெற்றிருந்த நகரமொன்றின் கிழக்கு எல்லையிலமைந்த மிக நிசப்தமான காட்டுப்பகுதியில்... அடர்ந்த பெருமரங்களின் நடுவே வெளியுலகின் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்திருப்பதாய் அமைந்திருந்த மாளிகை பரபரப்பான மனிதர்களினால் நிரம்பியிருந்தது.

அந்த மனிதர்கள் -

ஆற்றலும் மனிதநேயமும் பொருந்திய, மனித குலத்தின் காவலராக விளங்குபவர்கள்.

அவர்களைஉலகம் அறிவதில்லை, அவர்கள் செயற்பாடுகளும் உலகம் அறிந்துகொள்ளாதவை. ஆயினும் அவர்கள் மனிதகுலத்திற்காயும் அதன் நிலைப்புக்குமாய் உணர்வும் செயலும் ஒன்றுபட உழைப்பவர்கள். கணப்பொழுதுகூட கவனம் சிதையாமல் பூமியைக் காத்திருப்பவர்கள் - தெய்வத்தின் நிழலைப்போல.

ஆம்!

மிகப் பரபரப்பான ஒரு நேரத்தை எதிர்பார்த்தபடி அறிவும் செயற்றிறனும் மனித நேயமும் மிக்கவர்களாய் பரபரப்போடு அந்த மாளிகையில் காத்திருப்பவர்கள்தான் 'அந்நிய எதிர்ப்பிலிருந்து பூமியை காக்கும் நிறுவனத்தின்' (அ.எ.பூ.கா.நி) விசுவாசமிக்க ஊழியர்கள்.

இந்நிறுவனமானது புதிய உலகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டபொழுது தோற்றுவிக்கப்பட்டது. உலகின் சகல நிர்வாகஅலகுகளில் இருந்தும்(பழைய உலகக் கட்டமைப்பில் இது 'நாடு' எனப்பட்டது): ஒவ்வொரு தலைசிறந்த விஞ்ஞானி, உடல்வள, செயற்றிறன் மிக்கவர்களாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்நிலையத்தில் அங்கத்தவர்களாய் இணைக்கப்படுவார்கள்.

அண்டவெளியிலிருந்தும் பிறகோள்களிலிருந்தும் பூமி எதிர்கொள்ளவேண்டியிருக்கின்ற - சடத்துவரீதியான - உயிரியல்ரீதியான - எதிர்ப்புக்களை நீக்குவதற்காக இயங்கிவருகின்ற இந்நிலையம் அரைஆண்டுக்கு ஒருமுறை இரகசியமான இந்தஇடத்தில் கூடித்தன் செயற்றிட்டங்கள்பற்றி ஆராய்வது வழக்கம்.

ஆயினும் இம்முறை நிலவுகின்ற பரபரப்பு காரணத்தோடு கூடியதுதான். வழமையான ஒன்றுகூடலுக்கு அதிக நாள் முன்னதாகவே 'விசேட ஒன்றுகூடல்'. என்ற அழைப்பின் பெயரிலேயே உறுப்பினர்கள் இங்கே வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

காரணம் தெரியாத அழைப்பு குழுமிஇருந்த இளம் விஞ்ஞானிகளிடையே பல்வேறு ஊகங்களைத் தோற்றுவித்துக்கொண்டிருந்தது.

கூட்டத்தின் பரபரப்பான ஆர்வத்துக்கு ஒவ்வாமல் சுவரோரமாய்ச் சாய்ந்தபடி தொலைவாய் இலக்கு எதுவுமற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் சியாரா. எப்போதும் தூங்கிவழிவது போன்ற சின்னக்கண்கள். ஆனால் அக்கண்களின் அறிவுக்கூர்மையும் ஆழமும் அவனை நன்றாய்த் தெரிந்தவர்கள் மட்டுமே அறிந்தவிடயங்கள். வெளிறிய ஒடிசலான உருவத்துடனான அவனது வார்த்தைப் பிரயோகம் ஆழமறிந்து கொள்ளமுடியாததாக, எதிராளிக்கு எரிச்சலூட்டுவதாக இருக்கும்.

"வணக்கம் சியாரா... என்ன ஆழமாய் யோசித்துக்கொண்டிருக்கிறாய்" கேட்டபடியேநிக்கலஸ் அருகில் வந்தான்.

"பாழாய்ப் போக...! என் கோடைவிடுமுறை ரத்தாகிவிட்டதே என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன். நீயானால்..." சியாராவின் வார்த்தைகள் முடிய முன்னரே காதுகளை நிரப்பிய அந்த நீண்ட சங்கேத ஒலிக்கு அங்கிருந்த அனைவருமே விறைப்பாய் மௌனமாய் எழுந்த நின்றார்கள்.

(தொடரும்)

---

# பேசும் மௌனங்கள்.....

ச. ஆனந்தி

அது நீண்டு பரந்திருந்த விமானநிலையம். ஏராளமான இடம் தெருக்களால் நிரப்பப்பட்டிருக்க இடையிடையே சின்னதும் பெரியதுமாய்ச் சில விமானங்கள். மேலே வானம் பெரிய கவிகையாய் நீலநிறத்தில்பரந்து நின்றது. காற்று ஏதோ முணுமுணுத்தபடி மெல்ல அங்குமிங்குமாய் நகர்ந்து கொண்டிருந்தது வழமைபோலவே.

இடையிடையே சில விமானங்கள் 'விர்'ரென்று சில தூரம் தெருவில் ஓடிப் பின் சாய்வாக உயர்ந்து படிப்படியாய் மேகக்கூட்டத்துள் சென்று மறையும். சின்ன வெள்ளிப்புள்ளியாய்த் தொடங்கி கீழ்நோக்கி நகர்ந்து இராட்சதப் பறவைகளாய் சில விமானங்கள் கீழிறங்கும். அது என்னவோ, அனேகமான நேரங்களில் ஏறத்தாழ ஒரே எண்ணிக்கையான விமானங்கள் அங்கு தரித்து நிற்பதுண்டு.

ஏதோ ஒரு கண்ணுக்குத் தெரியாத கருவியாய் இருந்து வாழ்வை ஒரு சமனிலைக்குட்படுத்தி வைத்திருக்கும் சக்தியின் ஞாபகம் காற்றுக்கு வருவதுண்டு. வாழ்விலும் வரவுகளும் அதிகம். மனிதன் விரும்பாத 'போக்கு'களும் உண்டு. இரண்டுக்குமிடையே மனிதன் ஏறத்தாழ ஒரேமாதிரி வாழ்கின்றானே. அதே போலத்தான் அந்த விமான நிலையமும் என்று தோன்றுவதுண்டு.

பயணிகள் தவிர, விமானங்களைப் பயணத்துக்காய்த் தயார்ப்படுத்த எனவும் மனிதர்கள் அங்கு வருவார்கள். அவர்களோடு 'நாலுகால் வாகனங்களும்' வருவதுண்டு. தரையில் செல்லும் பெரிய சுமைகாவும் வண்டிகளைக் காற்று அப்படித்தான் சொல்வது வழக்கம்.

அந்த வாகனங்கள்தான் விமானங்களுக்கு எரிபொருள் சுமந்துவருவதுண்டு. விமானங்கள் ஒருவித நட்புணர்வோடு அவற்றைப் பார்த்துப் புன்னகைப்பதுண்டு. அந்த வாகனங்களோவெனில் விமானங்களுக்கு உயிர் கொடுக்கும் சக்தியாகத் தம்மை உருவகித்துக்கொண்டு ஒருவித கர்வமான உறுமல் ஒலியுடன் அங்குமிங்குமாய்ச் சென்றுவரும்.

புதிதாய் விடிந்த ஒருநாள், காலை வெயில் மென்மஞ்சளாய்ப் பிரதேசமெங்கணும் பரந்திருந்தது. இன்னும் சில மணித்தியாலங்களில் அந்தச் சின்ன விமானம் கிளம்பவேண்டும். எரிபொருளுடன் ஒரு நாலு கால் வாகனம் செருக்கான உறுமலுடன் வந்து விமானத்தின் ஓரமாய் நின்றது. மனிதர்கள் வழமை போலவே தங்கள் கடமைகளுள் மூழ்கிவிட்டார்கள்.

உற்சாகமான காலைப்பொழுது, புதிய உயிர்ப்பைத் தருவதான சீதளத் தென்றல் மனிதர்கள் புதிதாய்ப் பிறந்ததான உணர்வுடன் வேலை செய்து கொண்டிருக்க, விமானத்திடம் கூட ஒருவிதமான உற்சாகக்கிளர்ச்சி இருந்தது. ஆனாலும் எந்த நேரத்திலும் அது அமைதியாகவே இருந்துகொள்ளும். இன்னும் சற்று நேரத்தில் பயணம் தொடங்கிவிடும்.

நாலுகால் வாகனத்திற்கு விமானத்தைச் சீண்டிப்பார்க்கவேண்டும் போலிருந்தது.

"க்கும்.... இன்றைக்குப் பயணம் போலை......." கரிய பெரிய முன் சில்லு விமானத்திடம் கேட்டது.

"ஆம்...... இன்னும் சற்று நேரத்தில்....." மேற்கொண்டு என்ன கேட்பது....? ஒருகணம் மௌனமாய் ஓய்ந்து.

"உம்முடைய சில்லுகள் என்னைவிட என் நண்பர்களைவிடச் சின்னதாய் இருக்கின்றனவே....."

"ஆம்..... சிறியவைதான்" விமானம் தன் சிறுமையை ஒத்துக்கொள்வது போல் சொன்னதாய் பெரிய சில்லுக்குத் தோன்றிற்று.

"ம்....ம்..... எவ்வளவு தூரம் பறந்து திரிந்தாலும் இந்தச் சின்னச் சில்லுகள் உனக்குக் கவலையளிப்பனவாயே இருக்குமென நினைக்கிறேன்" போலிப் பரிதாபத்துடன் சொன்னது பெரியசில்லு.

"......................" விமானம் மாறாப் புன்னகையுடன் இருந்தது.

"உன்னைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது பாவம்! வார்த்தைகள் கூட வரவில்லை உனக்கு....."

"உன்னைப் போல எனக்குச் சில்லுகளின் தேவை அதிகமில்லைத்தானே..." அமைதி குன்றவில்லை விமானத்தின் குரலில்.

"இருந்தாலும், என்னைப்போன்ற பெரிய சில்லுகள் கொண்ட வாகனங்கள் எவ்வளவு அழகானவை... நாங்கள் உருண்டு முன்னேசெல்வது எவ்வளவு புதுமை மிக்கது..."

"உண்மைதான்..."

"பார்த்தாயா உனக்கு எத்தனை பெரிய தோற்றம் இருந்தும் என்ன... என்னைப் போலச் சில்லுகள் உள்ள சந்தோஷமில்லையே உனக்கு... நாங்கள் தெருக்களில் சுவடு பதித்துச் செல்வதான மகிழ்வு இல்லையே உனக்கு..."

"................"

"நீ பறக்கும் போது ஏன் சில்லுகளை உள் இழுக்கிறாய் என்று நான் முன்னர் யோசிக்கவேயில்லை. இத்தகைய சின்னச் சில்லுகளைப் பார்த்து என்னைப் போன்றவர்கள் சிரிப்பதைக் காட்டிலும் நீ அவற்றை உள்ளே இழுத்து விடுவதுதான் நல்லது..."

".................." மாறாப் புன்னகைதான் விமானத்தின் பதிலாயிருந்தது.

"என்ன செய்வது... உனக்குக் கொடுத்துவைக்கவில்லை..." போலி இரக்கம் பெரிய சில்லின் குரலில் தெறித்து வழிந்தது. அதன் கண்களிலும் கேலி தவழ்வதாய் காற்று உணர்ந்து கொண்டது.

எரிபொருள் நிரப்பியாகி விட்டது. ஒரு மனிதன் ஏறி உட்கார நாலுசில்லு வாகனம் புறப்பட தயாராயிற்று.

"சரி... சரி... உன் நிலைக்காய் கவலைப்படுகிறாய் போல... என்ன செய்வது நான் புறப்படுகிறேன்..." பெரிய சில்லுச் சொல்லி முடிக்க நாலுகால் வாகனம் கர்வமானஉறுமலுடன் விமானத்தை விலகிச் சென்றது.

காற்றுக்கு மெலிதான கோபம் பொங்கியது. விமானத்தின் அருகே வந்து தாழ்ந்து - தன் வேகம் குறைத்தது.

"நானும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். ஏன் அந்தப் பெரிய சில்லின் கர்வத்தை உடைப்பதாய் உன்னைப் பற்றி ஏதும் சொல்லாமல் இருந்தாய்?"

"..............." மெலிதாய்ப் புன்னகைத்தது விமானம்.

"என்ன நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்... நீ சிரித்துக் கொண்டிருக்கிறாய்?" மனிதர்கள் விமானத்துள் ஏறத்தொடங்கிவிட்டார்கள்.

"காலம் முழுவதும் எரிபொருளை ஏற்றிக்கொண்டு, கரடுமுரடான தரைகளில் திரிந்து, சில நேரங்களில் மற்ற வாகனங்களுடன் மோதி உருக்குலைகின்ற தன் விதியையே உணராது பெருமை பேசுகின்ற அதனிடம் நான் என்ன சொல்லியிருக்க வேண்டுமென நினைக்கிறாய்...?"

"உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கலாமே; அது தன் வாயை மூடிக் கொள்ளுமாறு"

"தேவையில்லை காற்றே... என் பறத்தல், என் அடைதல் அவற்றின் கற்பனைக்குக் கூட அப்பாற்பட்டது..."

விமானத்தைச்சூழ ஒரு சலசலப்பு...

"என்ன ஆரவாரம் அது...? யார் வருகிறார்கள்...?" காற்று விமானத்திடம் கேட்டது.

"மனிதர்களுள் புனிதரான போப் பாண்டவர் இன்று என்னில் பயணிக்கிறார்..."

விமானம் மௌனமாய் ஒரு முறை புன்னகைத்தது.

"உன் புன்னகை எனக்குப் புரிகிறது... எரிபொருள் காவியுடனான உன் மௌனத்தின் பெருமை எனக்குப் புரிகிறது..." காற்று ஆழ்ந்த குரலில் சொன்னது.

"போய் வருகிறேன்... நேரமாகி விட்டது..." விமானம் சீராக ஓடுபாதையில் ஓடிப் பின் காற்றும் வியப்பாய்ப் பார்த்துக்கொண்டிருக்கக் கம்பீரமாய் வானோக்கி எழத்தொடங்கிற்று.

விமான நிலையத்தின் ஓரமாய் ஒதுக்குப் புறமாய் எரிபொருள் நிரப்புவதற்காய்க் காத்துக்கொண்டிருந்தது நாலுகால் வாகனம். காற்று அங்குமிங்குமாய் ஓடிக்கொண்டிருந்தது; வழமை போல.

**சிந்தனைக்கரு** :- அர்த்தமுள்ள மௌனங்களும் அர்த்தமற்ற வார்த்தைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவரை அறிவாளியாக்க எவ்வளவு காலம் செல்லும்?


**சங்கத்தானை. கோகில்.**
ஒரு பெண்ணுக்கு முதல் விரோதி எவராக இருக்க முடியும்?
☺ **இன்னொரு பெண்ணாகத்தான் இருக்கமுடியும்.**

❀ ❀ ❀

**சுன்னாகம். சி.ஆனந்தன்.**
யாழ்ப்பாணத்தில் கூடிய வருமானம் தரக் கூடிய தொழில் எது?
☺ **திருட்டு.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். ப. சுதர்சன்.**
கம்பியூட்டரில் தொடர்ந்து பல மணி நேரம் வேலை செய்தால் கண்ணுக்குப் பாதிப்பு ஏற்படுமா?



☺ **கண்ணுக்குப் பாதிப்பு ஏற்படமாட்டாது. எனினும் கம்பியூட்டர் திரையைப் பார்பதற்கென்றே இந்திய நிறுவனம் ஒன்று புதிய கண்ணாடி ஒன்றை வடிவமைத்துள்ளது. கம்பியூட்டர் திரை நடுவில் அதிக ஒளியும் ஓரங்களில் ஒளி குறைந்தும் இருப்பதால் கண்களுக்கு அதிக வேலைப்பழுவைக் கொடுக்கிறது. மேற்படி நிறுவனத்தின் கண்ணாடியை அணிந்துகொண்டால் பாதிப்பு ஏற்படாது என்கிறது அந்த நிறுவனம்.**

❀ ❀ ❀

**வல்வெட்டித்துறை. ரமணன்.**
பாலியல் சம்பந்தமான கதைகள், கட்டுரைகள், டாக்டர் ஆலோசனைகள் என்பன தற்காலத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பெருமளவில் இடம் பிடித்துவருகின்றனவே....!
☺ **இவற்றையெல்லாம் விரும்புகிற வாசகர் கூட்டம் பெருகி வருகிறது என்பதையே இது காட்டுகிறது.**

❀ ❀ ❀

**உரும்பிராய். வரதராஜன்.**
அரசியல் நாகரிகம் என்றால் என்ன?
☺ **புதை பொருள் ஆராய்சியாளர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி இது.**

❀ ❀ ❀

**வசாவிளான். பி. இரட்ணம்.**
வித்துவான் ஐயா ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை யார் வெற்றி பெறுவார்கள்?.
☺ **சினிமாவில் வரும் டாக்டர்கள்,**

**மூளாய். தேவஸ்ரீ.**
ஒரு பெட்டிக் கடைக்குப் போய் கதலிப்பழம் கேட்டேன். கடையில் நின்ற பெண் கதலி வேண்டுமா? காதலி வேண்டுமா? என்று கேட்டாள். இதன் அர்த்தம் என்ன வித்துவான் ஐயா?
☺ **கதலி குளிர்காலத்துக்கு ஒத்து வருவதில்லை. ஒத்து வரக்கூடியதை அந்த பெண் கேட்கிறாள்.**

❀ ❀ ❀

**சுதுமலை. கண்ணன்.**
கணவன் மனைவியை பெயர் சொல்லி அழைத்தால் கணவனின் ஆயுள் குறையும் என்கிறார்களே?
☺ **ஆயுள் குறையாது பல்லுத்தான் குறையும்.**

❀ ❀ ❀

**கோண்டாவில். புஷ்பலதா.**
சனத்தொகையைக் குறைப்பதற்கு குடும்பக் கட்டுப்பாடு தேவையா?
☺ **கண்விண் தெரியாது ஓடும் மோட்டார் சைக்கிள்களும் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்காத சாரதிகளும் போதும்.**

❀ ❀ ❀

**நாவாந்துறை. என். நிஷாந்தன்.**
வித்துவான் ஐயா...! ஆபாசப் படங்கள் வெள்ளிவிழா காண்பது எதனால்?
☺ **ஆபாசம் என்று வெளியில் சொல்பவர்களே அடிக்கடி அதனைப் பார்ப்பதினால் தான்.**

❀ ❀ ❀

**குருநகர். ஆர். ஜூலியட்.**
வித்துமாமா தரகர் இல்லாவிட்டால் திருமணங்கள் குறைந்துவிடுமா?
☺ **திருமணங்கள் குறையமாட்டா. சீதனம்தான் குறையும்.**

❀ ❀ ❀

**அரியாலை. உ. குமாரமூர்த்தி.**
'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என்ற பழமொழி துணிச்சலைத் தருமா?




☺ **அந்த துணிச்சலில் தான் டாக்டர்கள் ஒப்பரேஷன் செய்கிறார்கள் போலும்.**

❀ ❀ ❀


**கோண்டாவில். நிர்மலாதேவி.**
காதலை முதியவர்கள் வெறுக்கிறார்களே...!

## ரணிலையும் சந்திரிகாவையும் மோதகத்துக்கும் கொழுக்கட்டைக்கும் ஒப்பிடலாமா?

**நோயாளியைப் பரிசோதனை செய்துவிட்டு 24 மணி நேரத்துக்குப் பின்னர்தான் எதனையும் நிச்சயமாகக் கூறமுடியும் என்று சொல்லுவார்கள். அப்படியானது ஒன்று தான் இம்முறை ஜனாதிபதித் தேர்தலும்.**

❀ ❀ ❀

**சுண்டுக்குளி. கே. தர்ஷினி.**
ஒரு ஜனநாயக நாட்டில் எந்தக் கழுதையும் பிரதமர் ஆகலாம் என்று அரசியல்வாதி ஒருவர் கூறுகிறாரே...!




☺ **எனக்கு ஆசைவார்த்தை காட்டுகிறீரா?**

❀ ❀ ❀

☺ **அவர்கள் வேறு என்னதான் செய்து விடமுடியும்.**

❀ ❀ ❀

**இருபாலை. ப. இரத்தினம்.**
வித்துவான் ஐயா மொழிக்கு இலக்கணம் தேவைதானா?
☺ **வயலுக்கு வரம்பு தேவையா?**

❀ ❀ ❀

**இளவாலை. சந்திரமோகன்.**
காதலித்து மணம் செய்யும் ஆண்களும் பெற்றோரைச் சாட்டி சீதனம் கேட்கிறார்களே?
☺ **வீரன்தானே அடிப்பான். கோழை ஆள் வைத்து அடிப்பான்.**

❀ ❀ ❀

**தும்பளை. கண்ணன்.**
ஒரு மகனை அறிவாளியாக்க பெற்றோருக்கு எவ்வளவு காலம் செல்கிறது?
☺ **20 வருடங்களாவது செல்கின்றன. ஆனால் அவனுக்கு வரும் மனைவி அவனை ஒரே நிமிடத்தில் முட்டாளாக்கி விடுகிறாள்.**

❀ ❀ ❀


**கொக்குவில். பி. பாலசங்கர்.**
எனது மனைவி இரவு பதினொரு மணிவரை ஊர் சுற்றிவிட்டு வீட்டுக்கு வருகிறாள் என்ன செய்யலாம்?
☺ **அது பரவாயில்லையே எனது மனைவி இரவு பதினொரு மணிக்குத்தான் புறப்படுகிறாள்.**

❀ ❀ ❀

**பாஷையூர். ஜெ. ஜோஸப்.**
வித்துவான் சேர் நூறு ஆண்டுகள் வாழ்வது எப்படி? என்ற புத்தகம் என்னிடம் உள்ளது. அதனை உங்களுக்கு அனுப்பி வைக்கட்டுமா?
☺ **வேண்டாம் எனது மாமியாரின் கண்ணில் பட்டுவிடும்.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். மாலதி.**
வித்துவாட்டி சமையல் அறையில் அதிக நேரம் இருப்பார் என்று சொன்னீர்களே! அப்படி என்றால் வித்துவாட்டியின் சமையல் பிரமாதமாக இருக்குமோ?



☺ **அதெல்லாம் ஒன்றும் இல்லை எங்கள் வீட்டுத் தொலைபேசி சமையல் அறையில் தான் இருக்கிறது.**

❀ ❀ ❀

**நல்லூர். செந்தில்குமரன்.**
கடந்த மாதம் நானும் எனது மனைவியும்

# வித்துவான் பதில்கள்

கடைத்தெருவுக்குப் போனோம். அப்பொழுது எனது மனைவியின் கண்ணில் தூசுபட்டு விட்டது. நூறுரூபா செலவாகிவிட்டது.
☺ **அது பரவாயில்லை கடந்த வாரம் நானும் எனது மனைவியுடன் கடைத்தெருவுக்குப் போனேன். மனைவியின் கண்ணில் புடைவைபட்டு விட்டது. ஆயிரம் ரூபா செலவாகிவிட்டது.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். கே.லதா.**
திருமணவாழ்க்கை பற்றி ஒரு சில வார்த்தைகள்?
☺ **திருமண முதல் ஆண்டு கணவன் ஏசுவான் மனைவி கேட்பாள். இரண்டாவது ஆண்டு மனைவி ஏசுவாள் கணவன் கேட்பான். மூன்றாவது ஆண்டு இருவரும் ஏசுவார்கள் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் கேட்பார்கள்.**

❀ ❀ ❀

**கோண்டாவில். சுதன்.**
வித்துவான்சேர் புத்திசாலிகள் நல்ல கணவன்மாராக இருப்பார்களா?
☺ **புத்திசாலிகள் கணவன்மாராகவே இருப்பதில்லை.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். சர்மிலா.**
வித்துமாமா உங்கள் பிறந்தநாளுக்காக நான் செய்து வைத்திருந்த கேக்கை எங்கள் வீட்டு நாய் தின்றுவிட்டதே!
☺ **கவலைப்படாதே வேறு நாய் வாங்கித்தருகிறேன்.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். நகுலன்.**
வித்துவான் ஐயா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்திரிகாவையும் ரணிலையும் சிலர் மோதகத்துக்கும் கொழுக்கட்டைக்கும் ஒப்பிடுகிறார்களே?
☺ **பெரிதாக வித்தியாசம் இல்லை. ஒன்று புற்றில் உள்ள பாம்பு. மற்றது பூஞ்சோலையில் உள்ள பாம்பு.**

❀ ❀ ❀

**பளை. கே. சேகர்.**
வித்தகரே உமக்கு ஆயுள் பலம் எப்படி இருக்கிறது.
☺ **ஆயுள்பலம் ஆண்டவனுக்குத்தான் தெரியும். ஆள்பலம் என்றால் வீட்டில் தெரியும்.**

❀ ❀ ❀

**பண்ணாகம். சுந்தரி.**
வித்துவங்கள் தெரிந்த வித்துமாமா இரண்டாயிரமாம் ஆண்டு பிறக்கும்போது குழந்தை பிறந்தால் உலக சாதனையும் பரிசுமாம். நீங்கள் முயற்சிக்கவில்லையா?
☺ **முயற்சித்தேன் உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.**

❀ ❀ ❀

**கோப்பாய். வடக்கு.**
வித்துவான் சேர் கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்று கூறுகிறார்களே அதன் அர்த்தம் என்ன?
☺ **இங்குள்ள தமிழ்க் கட்சிகளின் நிலைமையும் அதுதான். அரசுக்கு நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும். அதே சமயம் பொதுமக்களுடனும் ஐக்கியப்பட வேண்டும்.**

❀ ❀ ❀

**வரணி. ஓ.சுஜித்தன்.**
விசில் அடிக்கும் பெண்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?
☺ **யாழ்ப்பாணம் போறபோக்கில் நடக்க மாட்டாது என்று எதையுமே சொல்ல முடியாது.**

❀ ❀ ❀

**மூளாய். பி. லக்ஷ்மன்.**
ஆண்கள் பெண்களுக்குப் பயப்படுவது ஏன்?
☺ **பகல் முடிந்தபின்பு இரவு வருவதால்**

❀ ❀ ❀

**திருநெல்வேலி. ச.நித்தியானந்தன்.**
வித்தூ உங்களின் இரட்டை அர்த்தப் பதில்கள் காரணமாக இளசுகள் - குறிப்பாக நங்கையர் - உங்களது விசிறிகளாக மாறிவிட்டார்களே?
☺ **ஒருபுறம் விசிறிகள் மறுபுறம் எதிரிகள்.**

❀ ❀ ❀


**நல்லூர். ப.சற்குணம்.**
ஆனையிறவுப் பதையூடாக கண்டி வீதியில் கொழும்பு செல்வதாகக் கனவுகண்டேன். அந்தக்கனவு பலிக்குமா?
☺ **அப்ப நீங்கள் கண்டது பகற்கனவாக இருக்கும்.**

❀ ❀ ❀

**சங்கத்தானை. கோகுலதுளசி.**
வித்தூ நீங்கள் வன்னிப் படைத் தளபதியாக இருப்பதாகக் கனாக்கண்டேன்?
☺ **மின்னல் வேகப் பின்வாங்கலும் ஒரு சாதனைதானே.**

❀ ❀ ❀

**அரியாலை. துஷ்யந்தன்.**
வித்துவான் ஐயா மனைவி காரில் இருந்து இறங்கும்போது கார்க் கதவைத் திறந்து விடும் கணவன் பற்றி...!



☺ **ஒன்றில் கார் புதிதாக இருக்கும் அல்லது மனைவி புதிதாக இருப்பாள்.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். ரமணி.**
பற்களிலும் ஈறுகளிலும் நோயோ அல்லது அளவுக்கு அதிகமான துவாரங்களோ இருந்தால் உடலுக்குத் தீங்கு ஏற்படுமா?
☺ **இப்படியானவர்களில் சிலருக்கு வாயில் பக்டீரியாக்கள் தங்கிவிடும். இவை பற்களிலும் ஈறுகளிலும் நோயை ஏற்படுத்துவதோடு இரத்த ஓட்டத்திலும் கலந்து விடும் இதன் காரணமாக இரத்த ஓட்டம் தடைப் பட்டு இருதய நோய்கள் ஏற்படலாம்.**

### இவ்வார ஜோக்

பேராசைகொண்ட ஒருவன் திருமணம்செய்வதற்கு பெண் தேடிச் சென்றான். அவன் போன இடத்தில் பெரிய குடும்பம் ஒன்று இருந்தது.

குடும்பத்தலைவர் ஒரு முதியவர். அவர் சொன்னார் 'எங்களிடம் இருபது வயதுப் பெண் இருக்கிறாள். அவளுக்கு ரூபா பத்து லட்சம் சீதனம். எங்களிடம் இன்னொரு பெண் இருக்கிறாள். அவளுக்கு முப்பது வயது. ரூபா இருபது லட்சம் சீதனம். மற்றும் ஒரு பெண் இருக்கிறாள். அவளுக்கு நாற்பது வயது. அவளுக்குச் சீதனம் ரூபா முப்பது லட்சம்.' இப்படிக் கூறிவிட்டு நிறுத்தினார்.

பேராசைக்கார மணமகன் கேட்டான் உங்களிடம் ஐம்பது வயதில் பெண் இல்லையா? என்று.

# ஒரு பெண்ணுக்கு விரோதி யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணமான பின்பு மரணமானவர்

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜீன் லூயிஸ் ∴போரெய்ன் (Jean Louis Forain) என்ற கலைஞர் மரணப்படுக்கையில் படுத்திருந்தார்.

அவரைச் சுற்றி அமர்ந்திருந்த அவருடைய மனைவியும் குழந்தைகளும் அவருக்கு தைரியம் வரும்வகையில் பேசிவந்தார்கள்.

"நீங்கள் இப்போது மிகவும் ஆரோக்கியமாகக் காணப்படுகிறீர்கள்" என்று அவருடைய மனைவி கூறினார்.

"போன வாரம் கூட நீங்கள் மிகவும் களைத்துக்காணப்பட்டீர்கள். அப்போது உங்களுடைய முகம் ரத்தத்தை இழந்து வெளுத்திருந்தது. இப்போது உங்கள் முகத்தில் ரத்த ஓட்டம் அதிகரித்து உங்கள் முகம் பழையபடி சிவப்பாகக் காட்சி தருகிறது" என்று அவருடைய மகள் கூறினாள்.

"முன்பு மூச்சுவிடக் கூட முடியாமல் தடுமாறி வந்தீர்கள். இப்போது உங்களால் சுலபமாக மூச்சுவிட முடிகிறது" என்று அவருடைய மகன் கூறினான்.

∴போரெய்ன் கஷ்டப்பட்டு புன்னகை செய்து, "அப்படியா! கடவுளுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். நான் முற்றிலும் குணம் அடைந்த பிறகு சாகப் போகிறேன்!" என்று கூறினார்.

*

# முழுக்கவனம் வேண்டும்

'டாக்டர் கண்ணாயிரம் - கண் மருத்துவர்' என்று பலகை தொங்கிய 'கிளினிக்' முன்புற வாங்கில் ஒருவர் மருத்துவருக்காக நீண்டநேரம் காத்திருந்தார்.

சிறிது நேரத்தில் அந்தத் தெருவே அலற பெரும் சத்தத்துடன் கண் டாக்டர் மோட்டார் சைக்கிளில் வந்தார்.

தனக்காக ஒரு நோயாளி வந்திருப்பதில் மகிழ்ந்த கண் மருத்துவர், "வாங்க, கண் வைத்தியம் உங்களுக்கா, உங்கள் மகனுக்கா?" என்று கேட்டுக் கொண்டே படி ஏறினார்.

நோயாளிக்குக் கோபம் வந்துவிட்டது. "வைத்தியம் உங்களுக்குத் தான் தேவை" என்று சொல்லி எழுந்து போய்விட்டார்.

விஷயம் என்னவென்றால், நோயாளி ஒரு காலைத் தொங்கவிட்டு மறுகாலைக் குத்துக் காலிட்டு வாங்கில் அமர்ந்திருந்தார். அந்தக் கால் முட்டி மீது அவர் தன் தொப்பியை வைத்திருந்திருக்கிறார். இருவர் அமர்ந்திருப்பது போல கண் மருத்துவருக்கு ஒரு காட்சி...இது ஒரு நகைச்சுவை.

எதையும் சரியாகப் பார்க்கவும், கேட்கவும் வேண்டும்.

எதிலும் முழுக்கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் செய்யும் வேலை சிறப்பாக அமையும், வெற்றி கிட்டும்.

*

# குறைகாணும் நண்பர்கள்

கிரேக்க அறிஞரான் சோக்ரடீஸ் ஒரு வீடு கட்டினார். தன் நண்பர்களை அழைத்து அவர், "இந்த வீட்டைப் பார்த்து உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்" என்றார்.

எல்லோரும் வீட்டைச் சுற்றிப்பார்த்தார்கள். "வீட்டின் முகப்பு நன்றாக இல்லை" என்றார் ஒருவர்.

"ஜன்னல்கள் இன்னும் பெரிதாக இருந்திருக்கவேண்டும்" என்றார் இன்னொருவர். "வீட்டின் அழகையே கதவு கெடுக்கிறது. வேலைப்பாடமைந்த வேறு ஒரு கதவு பொருத்த வேண்டும்" என்றார் மற்றொருவர்.

"என்ன சோக்ரடீஸ்? கூடத்து அறை இவ்வளவு சிறியதாக இருக்கிறது? ஒரேநேரத்தில் நான்கு பேர் தங்க முடியாது போல் இருக்கிறதே!" என்றார் வேறொருவர்.

அதற்கு சோக்ரடீஸ், "அறை சிறியதாக இருப்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இதில் தங்குகின்ற அளவிற்கு உண்மையான நண்பர்கள் இருந்தால் எனக்கு அது போதும்" என்றார்.

*

## விடைகள்

( XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிறுவர்சுடர்' புதிருக்கான விடைகள் வருமாறு)

* **ஒழுங்குபடுத்துங்கள்**

பந்து - துறவி - விளக்கு - குடிசை- சைகை - கைதி - திருடன்.

* **ஒரேமாதியானவை எவை?**
2,6

# எலக்ரோனிக்.....

(XI ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒரு நிறுவனத்தில் ஏதாவது பிசகு ஏற்பட்டுப்போனால் அது ஏனைய பல நிறுவனங்கள் இயங்குவதற்கு முட்டுக்கட்டையாக அமைந்து விடக்கூடும்.

வங்கியிடம் தொழில் - கூட்டுத்தாபனத்திடம் தொழில்நுட்பம் - வாடிக்கையாளர்களிடம் தேவைகள் என்ற நிலைமையில் இடையில் இலத்திரனியல் விளையாடும்போது புரிந்துணர்வுகளுக்கு இடம் அதிகம் இருக்காது. ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் சமாளிக்க யாரை யார் என்ன கேட்பது? இதை விளங்கவும் விடுவிக்கவும் தயாராகச் சட்டங்கள் ஆக்கப்பட்டு விட்டனவா என்றெல்லாம் வாடிக்கையாளர் சிந்திப்பர்.

2000ஆம் ஆண்டு பிறக்கும்போது கணனிகளில் கோளாறுகள் ஏற்படலாம் என்ற ஊகங்கள் இன்று உலகெங்கும் பேசப்படுகிறது. இதன் விளைவுகள் பாரதூரமாக அமையும் எனவும் கருதப்படுகிறது. வை2கே (Y2K) என்றும் மிலேனியம் பக் (Millennium Bug) என்றும் பேசப்படும் இச்சிக்கல் இரண்டு இலக்கங்களில் வருடத்தைக் குறிக்கும் கணனிகளில் ஏற்படலாம் எனக் கருதப்படுகிறது. 1999 என நான்கு இலக்கங்களில் வருடத்தைக் குறிக்கும் கணனிகள் 2000 பிறக்கும் போது தப்பிவிடும். பெரும்பாலும் வங்கிகளின் நவீன கணனிகள் இவ்வகையானவை என்று கருதலாம்.

வருடத்தை '99' எனக் குறிக்கும் கணனிகள் '00' இற்கு மாறும்போது கணிப்புக்கள் ஒரு நாளால் மாறுமா? அல்லது 99 வருடங்கள் பின்னோக்கி நகருமா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். ஆனால் இந்தச் சிக்கலால் வங்கிகள் திணறிப் போனால் வாடிக்கையாளர்கள் தமது அலுவல்களைச் செய்ய இயலாமற் போய்விடும். எனவே வங்கிகள் இத்தகைய சிக்கல்களினின்றும் தம்மை விடுவிக்கத் தயாராகிவிட்டனவா என உன்னிப்பாக அவதானித்து வரவே வாடிக்கையாளர்கள் முனைகிறார்கள்.

கணனிகளிடம் வேலைவாங்குபவர்களுக்கு அவற்றின் விசைப்பலகையைப் பிரயோகிக்கத் தெரியுமே தவிர, அவற்றின் உள்ளடக்கங்களோ தொழில்நுட்பங்களோ புரியவேண்டியதில்லை. உலகில் பலகாலமாக அறிமுகப்படுத்தப்பட்டு, சிதறிப் பரவி பயன்பாட்டில் இருந்துவரும் அனைத்துக் கணனிகளையும் அவற்றின் நடவடிக்கைகளையும் ஆராய்ந்து இந்த '2000' பிரச்சினைக்கு ஒரு விடிவு காண கணனித் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனங்களால் இயலாத காரியம்.

அவசர அவசரமாகப் புதிய கணனிகளை வாங்கி, அடையாளங் கண்டுள்ள சிக்கலான கணனிகளில் பதியப்பட்ட அத்தனை தகவல்களையும் புதியனவற்றுக்கு மாற்றிவிடுவது கூட எல்லோருக்கும் சாத்தியப்படாது.

எனவே வங்கிகளிலும் நிதிநிறுவனங்களிலும் பெருமளவில் தங்கியிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு 2000 ஆண்டு பிறந்தபின்புதான் நிம்மதி கிட்டும் என்றால் அது மிகையாகாது.

வாடிக்கையாளர்களின் மாறிவரும் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்பத் தம்மைச் சுதாகரித்துக்கொள்ள நினைக்கும் வங்கிகள் இரண்டுவகையான வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய அவசியம் எழுகிறது.

முதலாவதாக அதிகம் மாற்றங்களை விரும்பாத அல்லது ஏற்கும் வசதிகளைக் கொண்டிராத வாடிக்கையாளர்களுக்கான பாரம்பரிய வங்கி முறையை முற்றிலும் ஒழித்து விடாது பேண வேண்டிய அவசியம் ஒருபுறம்.

அடுத்ததாக எலக்ரோனிக் யுகத்தில், துரிதமாக அபிவிருத்தி கண்டு வரும் இயந்திர சாதனங்களினூடே அவற்றின் மாறுபட்டுவரும் தன்மைகளுக்கேற்ப இசைந்து வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தும் நவீன வங்கிமுறை மறுபுறம்.

இரண்டுக்கும் ஈடுகொடுத்து அவரவர் எதிர்பார்ப்புகளுக்கு அமைவான, மலிவான, தரமானசேவையை வழங்க வங்கிகள் தயாராகட்டும்.

(முற்றும்)

# துரியோதனனுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவளைக் கண்திறந்து உன்னைப் பார்க்கும் படி சொல். அவள் பார்வை உன்மீது பட்டதும், உன் உடல் வஜ்ரம் போன்று உறுதியாகிவிடும்.

"அதன் பின்பு போர்க்கருவிகள் எதுவும் உன் உடலைத் துளைக்க முடியாது." என்று தர்மர் தெரிவித்தார்.

துரியோதனன் மகிழ்ச்சியுடன், "அப்படியே செய்கிறேன், அண்ணா!" என்று கூறி தர்மரிடமிருந்து விடைபெற்றுச் சென்றான்.

இந்தச் செய்தி அர்ஜுனனுக்குத் தெரியவந்ததும், அவன் உடனே அதை ஸ்ரீகிருஷ்ணனிடம் கூறினான்.

'தர்மர் துரியோதனுக்குக் கூறிய யோசனையால் பாண்டவர்களுக்குப் போரில் தோல்வி ஏற்படும்!' என்பதை உணர்ந்து ஸ்ரீகிருஷ்ணன் அதைப் பற்றிச் சிந்தித்தார்.

அவர் துரியோதனின் செயலைத் தடுக்க எண்ணினார்.

ஆதலால் ஸ்ரீகிருஷ்ணன், துரியோதனின் பூஜைக்குப் பூக்களைக்கொண்டு செல்லும் தோட்டக்காரனைப் போல வேடம் தரித்தார்.

அந்த வேடத்தில் அவர் துரியோதனனைச் சந்திக்கச் சென்றார்.

அப்போது துரியோதனன் போர்க்களத்திலிருந்து அரண்மனைக்குச் சென்றுகொண்டிருந்தான்.

வழியில் அவனைத் தோட்டக்காரன் வேடத்தில் இருந்த ஸ்ரீகிருஷ்ணன் சந்தித்து, போர்பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்புவர் போல் நயமாகப் பேசினார்.

தர்மர் கூறிய யோசனையை துரியோதனன், தோட்டக்காரன் வடிவத்தில் வந்த ஸ்ரீகிருஷ்ணனிடம் தெரிவித்தான்.

"என் உடல் வஜ்ரம்போன்று ஆகப் போகிறது! ஆதலால் என்னை இனி யாராலும் வெல்லமுடியாது! போரைப் பற்றி நான் கவலையேபடவில்லை! போரில் நான் வெற்றிபெறப்போவது நிச்சயம்!" என்று துரியோதனன் கர்வத்தோடு பேசினான்.

அதைக்கேட்டதும் தோட்டக்காரன் வடிவத்தில் வந்த ஸ்ரீகிருஷ்ணன், "அரசே! தர்மர் நெறிதவறாதவர் என்பது உண்மைதான்.... இருந்தாலும் அவர் இப்போது உங்களுக்குப் போரில் எதிரி! உங்களை வென்று உங்கள் ராஜ்யத்தைக் கைப்பற்ற நினைப்பவர்! இதை நீங்கள் யோசிக்க மறந்து விட்டீர்களே!

"மேலும் தாங்கள் ஆடையின்றி ராஜமாதா காந்தாரியின் முன்னால் சென்று நின்றால், அவர்கள் பார்வை பட்டதும் உங்கள் உடம்பு எரிந்து சாம்பலாகிவிடுமே! நீங்கள் அநாகரீகமாக ஆடையில்லாமல் வந்திருக்கிறீர்கள் என்று நினைத்து, ராஜமாதா உங்களைச் சபித்து விடுவார்களே!" என்று கூறி துரியோதனன் உள்ளத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தினார்.

அத்தோடு அவர், "அவ்விதம் நேராமல் இருக்கும்பொருட்டு, நீங்கள் இந்தப் பூமாலையால் உங்கள் இடுப்பைச்சுற்றி மறைத்துக்கொண்டு ராஜமாதாவிடம் செல்லுங்கள். அதுதான் தங்களுக்கு நல்லது" என்று ஒரு வழியும் கூறினார்.

துரியோதனன் மனதில், 'இந்தத் தோட்டக்காரன் சொல்வது சரி!' என்று பட்டது. எனவே அவன் தோட்டக்காரன் கொடுத்த பூமாலையை வாங்கிக் கொண்டு அரண்மனையை நோக்கி விரைந்தான்.

பின்னர் அவன் பூமாலையால் இடுப்புப் பகுதியை மறைத்தபடி காந்தாரியிடம் சென்றான்.

அவன் சென்றநேரம், துரியோதனன் தன் தாயைச் சந்திக்கும் நேரமல்ல.

அதனால் காந்தாரி, 'துரியோதனன் போர்க்களத்திலிருந்து ஓடி வந்துவிட்டான்!' என்று நினைத்து அவனைக் கடிந்துகொண்டாள்.

துரியோதனன், தர்மரிடம் தான் கேட்டதையும் அதற்கு தர்மர் கூறியதையும் காந்தாரியிடம் தெரிவித்தான்.

அதைக் கேட்ட காந்தாரி, "மகனே, நீ உன் ஆடைகளைக் களைந்துவிட்டு என் முன் நில்" என்றாள்.

பிறகு அவள் தன் கண் கட்டுகளைப் பிரித்துவிட்டு துரியோதனனைப் பார்த்தாள்.

துரியோதனன் பூமாலையால் சுற்றி மறைத்திருந்த இடுப்புப்பகுதி அங்கங்களைத் தவிர, அவனுடைய மற்ற அவயவங்கள் அனைத்தும் காந்தாரியின் பார்வைபட்டுக் கடினமாகி உறுதிப்பட்டன.

"இடுப்பைப் பூமாலையால் சுற்றி ஏன் மறைத்திருக்கிறாய்?" என்று காந்தரி துரியோதனனிடம் வினவினாள்.

துரியோதனன் அரண்மனைத் தோட்டக்காரனின் யோசனையின்படி தான் இவ்விதம் செய்ததை காந்தாரியிடம் விளக்கிக் கூறினான்.

துரியோதனன் கூறியதைக் கேட்டதும், 'போரில் பாண்டவர்களுக்கு உதவும் பொருட்டு ஸ்ரீகிருஷ்ணன்தான் தோட்டக்காரன் வேடத்தில் வந்திருக்கிறான்!' என்பதை காந்தாரி புரிந்துகொண்டாள். அதை அவள் துரியோதனிடமும் தெரிவித்தாள்.


பிறகு போர்க்களத்தில் பீமன் துரியோதனனின் தொடையை முறித்தான். அதன் காரணமாக துரியோதனன் இறந்தான்.

பூ சுற்றிய இடைப்பகுதியில் காந்தாரியின் பார்வை படாத காரணத்தால், அந்தப் பகுதியே துரியோதனனின் மரணத்திற்குக் காரணமாயிற்று.

*

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.130



### சொற்சிலம்பம் இல. 130

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ....................................................

விலாசம்: ....................................................

....................................................

....................இங்கே வெட்டுக....................

முடிவுத் திகதி:- 03 - 12 - 1999

### மேலிருந்து கீழ்

1. நாடகத்தில் பங்கேற்பவன். 4. பாதம் தொடக்கம். 7. குடாநாட்டின் வெளிகளுள் ஒன்று. 8. மனிதரின் ஆதிகால உடை. 9. வெறுமை. 10. வேதனம். 11. தகுதி. 12. ஒத்தாசை புரிதல். 14. கரத்தில் இது பத்து. 17. நாலில் ஒன்று இது. 18. கடல் கடக்க உதவுவது. 20. நனைந்த். 21. கலாசாரம். 22. கணவனை இழந்தவள். 23. பிடிபடு.

### இடமிருந்து வலம்

1. புதுமைப்பெண். 2. இந்தியத் தலைநகர். 3. சாத்திரம் என்றும் கூறுவர். 4. நிறையான. 5. பாய்தல். 6. அரைக்கும் எந்திரம். 8. தேங்கிய பொருளை விற்று முடிக்க இந்த விலையை நாடுவர். 10. குளிர். 12. சமையலறைக்கருவி. 13. சிரசில் கட்டுவது. 15. திரிதல். 16. முற்கால மனிதனின் ஆயுதம். 18. புலனுறுப்பில் ஒன்று. 19. தீரை. 20. கொடை. 21. இசைப்பாட்டு.

### சொற்சிலம்பம் 128 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. நவக்கிரகம். 6. குரு. 7. ரகளை. 9. சமயம். 11. கண். 12. அம்சம். 13. எண்ண. 14. பட்டறி. 15. ராகு. 17. குருடு. 18. வரகவி. 20. தலை. 22. தில்லை. 23. குல்லாய்.

### மேலிருந்து கீழ்

1. நகு. 2. வருசம். 3. கிரயம். 4. ரகம். 5. களை. 8. நுண்ணறிவு. 10. மசகு. 11. கண்ட. 12. அமராவதி. 13. எட்டுதல். 14. பரு. 16. குரல். 17. குவி. 19. கலை. 21. லைலா.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு**:- அரசரத்தினம் ராகவன்,
மகாவித்தியாலயம்,
நெடுந்தீவு.

**இரண்டாம் பரிசு**:- ச.சசிகுமார்,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

**மூன்றாம் பரிசு**:- தி.மேகலா,
செல்லம் பூங்கா,
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 129 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொகுப்பு: நம்பி

# ஒழுங்குபடுத்துங்கள்!



இங்கேயுள்ள ஏழு படங்களையும் பார்த்து அவற்றை இனங்கண்டுகொள்ளுங்கள்.

ஒரு படத்தின் பெயரின் கடைசிஎழுத்து மற்றொரு படத்தின் பெயரின் முதல் எழுத்தாகும். ஒழுங்குபடுத்தும் போது இறுதியாக வரும் படத்திற்கும் முதலாவதாக வரும் படத்திற்கும் இடையில் மட்டும் இத்தொடர்பு இல்லை.

சரியான முறையில் அவற்றை ஒழுங்கு படுத்த முடிகிறதா என்று முயன்று பாருங்கள். முடியாவிட்டால் XV ஆம் பக்கத்தில் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

# வெள்ளைப் பிரம்பு

வீதி நடுவில் ஒரு மனிதர் - கையில்
வெள்ளைப் பிரம்பை வைத்துள்ளார்
மோதி அவரை வாகனங்கள்
முட்டி வீழ்த்தப் போகிறதே!


ஓடிச் சென்றே அம்மனிதர்
ஓரம் வரவே வழி செய்தேன்
வாடி இருந்த அவர் முகத்தில்
வந்த சிரிப்புக் களவில்லை.

பாவம் கண்களை இழந்த அவர்
பாதியில் வழியை மறந்துவிட்டார்
நானும் சென்றேன் அதனாலே
நன்றாய்த் தப்பி வந்திட்டார்!

வெள்ளைப் பிரம்பே அடையாளம்,
விழிகள் இழந்தோர் துணையாகும்
வெள்ளைப் பிரம்பைக் கண்டாலே
விரைந்தே சென்று உதவிடுவோம்.

கி.கஸ்தனி
(தரம் 6,யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)

# வரைந்து பாருங்கள்



கோமாளி ஒருவரின் உருவத்தின் பாதியை இங்கே தந்திருக்கின்றோம். இவ்வுருவத்தின் மீதிப்பாகத்தை வரைந்து வர்ணம் தீட்டிப் பாருங்களேன்!

# கல்வி

கொடுக்கக் குறையாதது கல்வி
திருடர் கவர முடியாதது கல்வி
பட்டம் பெற வைப்பதுவும் கல்வி
பண்பாளனாக்குவதும் கல்வி


வயது வித்தியாசமின்றி
ஜாதி, மத பேதமின்றி
ஏழை, பணக்கார பேதமின்றி
யாவரும் விரும்புவது கல்வி

சமத்துவம் பேணுவதும் கல்வி
மகத்துவம் வளர்ப்பதுவும் கல்வி
பேரறிஞனாக்குவதும் கல்வி
சான்றோராக்குவதும் கல்வி

சீர் தரும் கல்வியதாம்
பாரிலுள்ளோர் யாவர்க்கும்
கிடைத்தற்கரிய செல்வமதாம்
போற்றியே கற்றிடுவீர்
பல பயனும் பெற்றிடுவீர்

த.சுபாசினி
(மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

# கட்டங்களை நிரப்புங்கள்!



இங்கேயுள்ள கட்டங்களைக் கீழேதரப்பட்டுள்ள பத்து வார்த்தைகளைக் கொண்டு நிரப்பவேண்டும் - ஒன்றுக்கொன்று தொடர்புறும்படி கட்டங்களை நிரப்பி உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள்

**புதன், வேடன், தமிழ், செம்பு, வேகம், யமன், புயல், லட்டு, பொடுகு, லவன்.**

# சுட்டெண் என்ன?

எனது பரீட்சைச் சுட்டெண்ணை நான் மறந்துவிட்டேன். எதிலும் குறித்து வைக்கவுமில்லை. எனவே வகுப்பாசிரியரை அணுகி எனது சுட்டெண்ணைக் கூறும்படி கேட்டேன். கவனயீனமாக இருந்து சுட்டெண்ணை மறந்துபோன எனக்குத் தண்டனையாக சுட்டெண்ணை நேரடியாகக் கூறாது பின்வருமாறு கூறினார் அவர் -

* சுட்டெண் ஆறு இலக்கங்களைக் கொண்டது.
* அவற்றின் கூட்டுத்தொகை 26.
* முதலாம், ஐந்தாம் இடத்திலுள்ளவை ஒரே எண்கள்.
* முதல் மூன்று இலக்கங்களின் கூட்டுத்தொகை 13.
* இறுதி இலக்கத்திலிருந்து இரண்டாம் இலக்கத்தைக் கழிக்க வருவது நான்காம் இலக்கம்.
* முதலாம் இலக்கத்தினை இரண்டால் வகுக்கப் பெறப்படுவது ஆறாம் இலக்கம்.
* முதலாம் எண்ணிற்கும் இரண்டாம் எண்ணிற்கும் இடையேயுள்ள வித்தியாசம் ஐந்து.

அவர் கூறிய குறிப்புக்களைக் கொண்டு என்னால் எனது சுட்டெண்ணைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தயவுசெய்து நீங்களாவது கண்டு பிடித்து எனக்கு உதவி செய்யுங்களேன்!

- குமரன் -

# முதல் பாடம்



நாய்க்குட்டி ஒன்றுக்குத் திடீரென்று ஓர் ஆசை ஏற்பட்டது. தன்னைவிடப் பெரிய எந்த மிருகத்தையாவது கடித்து விரட்டவேண்டும் என அது எண்ணமிட்டது. தன்னால் அது முடியுமா, மற்ற மிருகங்களைப்பற்றி - அவற்றின் குணங்களைப்பற்றித் தனக்கு எதுவுமே தெரியாதே என்றெல்லாம் அது சற்றும் சிந்தித்துப் பார்க்கவில்லை.

அருகே மேய்ந்துகொண்டிருந்த மாடு ஒன்றை முதலில் குறிவைத்தது நாய்க்குட்டி. குரைத்துக்கொண்டே அதை நோக்கி ஓடியது. ஆனால், மாடு ஓடிவரும் நாய்க்குட்டியைச் சட்டை பண்ணாமல் தன்பாட்டிற்கு புல்லை மேய்ந்து கொண்டிருந்தது. எட்டும் தூரத்தில் நாய்க்குட்டி வந்ததும் கொம்பைச் சிலிர்த்துத் தலையை ஆட்டியது. அவ்வளவுதான்! நாய்க்குட்டி தூக்கி எறியப்பட்டுப் போய் விழுந்தது.

பயந்து நடுங்கியபடி தாயிடம் ஓடியது நாய்க்குட்டி.

'இப்படியா மாட்டின் தலைக்கு அருகே போய்க் கடிக்கப் பார்ப்பது? அதுவும் குரைத்துக்கொண்டு? ஓசைப்படுத்தாமல் பின்புறமாகப் போய்க் கால் பக்கம் கடிக்க முயற்சி செய்' என்று தாய் அறிவுரை கூறியது.

ஒரு தடவை செமத்தியாக அடிவாங்கியதில் மாட்டிடம் மீண்டும் போக நாய்க்குட்டிக்குப் பயமாக இருந்தது. வேறு ஏதாவது மிருகம் தென்படுகிறதா என சுற்றுமுற்றும் பார்த்தது. ஓரிடத்தில் பாதிமூடிய கண்களோடு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த கழுதை ஒன்று அதன் கண்களில் தென்பட்டது.

நாய்க்குட்டிக்கு அதனை மிரளச் செய்ய வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. மெல்ல அடியெடுத்து வைத்துக் கழுதையின் பின்புறத்தை நெருங்கியது. ஒரே தாவில் கடித்துவிடலாம் என அது எண்ணியபோது, கழுதை தன் பின்னங்கால்களால் ஓங்கி ஓர் உதைவிட்டது.

அலறியடித்தபடி தாயிடம் ஓடியது நாய்க்குட்டி.

'மிருகங்களின் இயல்பிற்கேற்றவாறுதான் அவற்றை அணுகவேண்டுமே தவிர எல்லாவற்றையும் ஒரே வழிமுறையில் தாக்க முயலக் கூடாது. கழுதையைப் பின்புறமாகத் தாக்க முயல்வது எவ்வளவு முட்டாள் தனம்!' என்று தன்குட்டிக்குத் தாய் நாய் புத்திமதி கூறியது.

'போ அம்மா! நானே அடிபட்டு அடிபட்டுத்தான் உலகத்தைப் புரிந்துகொள்ளவேண்டும் போல் இருக்கிறதே' என்றது நாய்க்குட்டி.

உலகின் முதல்பாடத்தை அது கற்றுக் கொண்டு விட்டது.

- கைலாஸ் -

## அறிந்துகொள்ளுங்கள்

எல்லா நாய்களுமே குரைக்கத்தான் செய்யுமா? குரைக்காத நாய்வகை உண்டா?

நாய் என்றாலே குரைக்கும் என்பதுதான் நம் நினைவுக்கு வரும். ஆனால் இதற்கும் கூட விதிவிலக்கு உள்ளது. 'பாசஞ்சி' என்ற இனம், குரைப்பதில்லை. ஊளைமட்டுமே இடும்.




## ஒரேமாதிரியானவை எவை?

இங்கேயுள்ள ஆறு படங்களில் எந்த இரு படங்கள் ஒரேமாதிரியானவை என்று கண்டுபிடியுங்கள்! (விடை XV ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org